# 1. பொருளாதாரச் செயலாற்றம் பிரச்சினைகளும் கொள்கைகளும்

## 1.1 பொதுநோக்கு

1996 இல் நிலவிய தாழ்ந்த மட்டங்களிலிருந்து உறுதியாக மீட்சியடைந்த பொருளாதாரம் 1997 இல் 6.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. அனைத்து முதன்மைத் துறைகளும் கணிசமான உயர் வளர்ச்சி வீதங்களைக் காட்டின. உட்கிடை மொத்த உள்நாட்டு விலைச்சுருக்கியினால் குறித்துக் காட்டப்பட்டவாறு பணவீக்க வீதம் 1996 இன் 12 சதவீதத்திலிருந்து 1997 இல் 9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து, மேம்பட்ட உள்நாட்டு வழங்கல் நிலைமைகளையும் நாணய விரிவாக்கத்தின் குறைந்த வீதத்தினையும் பிரதிபலிப்பதாக இருந்தது. முக்கியமாக ஏற்றுமதி சார்ந்த தயாரிப்புக் கைத்தொழில், சுற்றுலா மற்றும் வர்த்தக நடவடிக்கைகளில் அதிகரித்த தொழிலாளர் ஈர்ப்பினைப் பிரதிபலிக்கும் வகையில் தொழில் வாய்ப்பின்மை வீதம் 1996 இறுதியின் தொழிற்படையின் கிட்டத்தட்ட 11.1 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. முக்கியமாக ஏற்றுமதிகள் மற்றும் சுற்றுலாவிலிருந்தான அதிகரித்த வருவாய்கள், தனியார் மயமாக்கல் பெறுகைகளையும் உள்ளடக்கி அதிகரித்த தனியார் மாற்றல்கள் மூலதன உட்பாய்ச்சல்கள் என்பனவற்றின் காரணத்தினால் சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவை ஐ அ டொலர் 163 மில்லியன் கொண்ட மிகையொன்றைக் காட்டியது. மேம்பட்ட அரசிறைக் கட்டுப்பாடுகள் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையினை 1996 இன் 9.4 சதவீதத்திலிருந்து 1997 இல் 7.9 சதவீதத்திற்குக் குறைவடையச் செய்ய உதவியது. இலங்கையின் பேரண்டப் பொருளாதார நிலைமையின் பொதுவான மேம்பாடு, மூலதனக் கட்டுப்பாடுகள் சிலவற்றின் பேணல், குறுகியகால வெளிநாட்டுக் கடன்பாடுகள் குறைவடைந்தமை நிதியியல் சந்தை நடவடிக்கைகளின் அதிகூடிய கண்காணிப்பு என்பன அடிக்கடி மாறுபடும் வெளிநாட்டுச்சூழல் மற்றும் கிழக்காசிய நெருக்கடியின் தொடர்விளைவு என்பனவற்றிலிருந்து உள்நாட்டு நிதிச்சந்தையின் நியாயமான உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கு உதவின.

1996 இன் பின்னடைவிலிருந்தான மீட்சி மற்றும் பணவீக்கவீதத்தின் குறைப்பு என்பவற்றுடன் இலங்கை மத்திய வங்கி 1997 இன் முதலாம் காலாண்டில் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டினை 15 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்குக் குறைத்தது. மேம்பாடடைந்துவரும் பேரண்டப் பொருளாதாரச்

**அட்டவணை 1.1**

தெரிந்தெடுக்கப்பட்ட பேரண்டப் பொருளாதாரக் குறிகாட்டிகள்

| விடயம் | 1996 (அ) | 1997 (அ) | 1993-97 சராசரி(அ) | 1996 (அ) | 1997 (அ) |
|---|---|---|---|---|---|
| | ரூ. மில் | | | சதவீத மாற்றம் | |
| நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொ.உ.உ. | 695,934 | 803,698 | 15.7 | 16.3 | 15.5 |
| 1982இன் காரணிச் செலவு விலைகளில் மொ.உ.உ. | 174,261 | 185,500 | 5.5 | 3.8 | 6.4 |
| 1982இன் காரணிச் செலவு விலைகளில் மொ.தே.உ. | 171,176 | 182,950 | 5.4 | 3.1 | 6.9 |
| | | | மொ.உ.உ. இன் சதவீதம் | | |
| மொத்த உள்நாட்டு முதலீடு | 186,264 | 217,103 | 25.4 | 24.2 | 24.4 |
| அரசு | 23,503 | 29,953 | 3.4 | 3.1 | 3.4 |
| தனியார் | 162,761 | 187,150 | 22.0 | 21.1 | 21.0 |
| மொத்த உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 117,691 | 154,450 | 15.8 | 15.3 | 17.3 |
| வெளிநாட்டுச் சேமிப்புக்கள் | 68,573 | 62,653 | 9.6 | 8.9 | 7.1 |
| வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் (தேறிய) | 4,756 | 7,587 | 1.0 | 0.6 | 0.9 |
| அலுவல்சார் கடன்களும் கொடைகளும் (தேறிய) | 19,727 | 15,827 | 3.3 | 2.6 | 1.8 |
| ஏனையவை (ஆ) | 44,090 | 34,779 | 5.3 | 5.7 | 4.4 |
| தேசிய சேமிப்புக்கள் | 145,674 | 190,965 | 19.8 | 19.0 | 21.4 |
| இதில்: தேறிய வெளிநாட்டு முதலீட்டு வருமானம் | -11,258 | -9,934 | -1.2 | -1.5 | -1.1 |
| தொழிலாளர் பண அனுப்பல்கள் (தேறிய) | 39,230 | 46,494 | 5.2 | 5.1 | 5.2 |
| மொ.உ.உ. சுருக்கி (1982=100) (இ) | 399 | 433 | 9.8 | 12.1 | 8.5 |
| குடித்தொகை ('000) (இ) | 18,315 | 18,552 | 1.2 | 1.1 | 1.3 |
| தலைக்குரிய (உண்மை) மொ.உ.உ.(ரூ) | 9,515 | 10,219 | 3.2 | 2.6 | 7.4 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(ஆ) தேறிய தனியார் நடுத்தரகால மற்றும் நீண்டகால கடன்களையும், அனைத்து தேறிய குறுங்கால மூலதனத்தையும், தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் மாற்றத்தையும் உள்ளடக்குகின்றது.

(இ) கடைசி மூன்று எண் தொகைகளும் சதவீத மாற்றங்களாகும்.


சூழலில் நாணயக் கட்டுப்பாடுகளில் மறைமுகக் கருவிகளில் அதிகளவில் தங்கியிருத்தலுக்கும் ஓரளவு குறைவான வட்டிவீத முறையொன்றுக்கு நகருவதற்கான நடவடிக்கையொன்றாக இது காணப்பட்டது. வர்த்தக வங்கிகள் தமது தேறிய வெளிநாட்டு நடவடிக்கைகள் தமது மூலதன நிதியத்தின் 15 சதவீதத்திற்கு மேலாக அதிகரித்தல் ஆகாது என்ற கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு உள்நாட்டு வங்கிகளினூடாக ஏற்றுமதியாளர்களுக்கு வெளிநாட்டு நாணயக் கடன் வசதியொன்று 1997 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. தேறிய அடிப்படையில் இந்த வசதியின் பயன்பாடானது எதிர்பார்க்கப்பட்ட ஐ அ டொலர் 100 மில்லியன் வரையறையுடன் ஒப்பிடுகையில் ஐ அ டொலர் 72 மில்லியனாகக் காணப்பட்டது.

கடன்வழங்கல் வீதங்கள் ஓரளவு காலங்கடந்த பின்னர் இடம்பெற்ற போதிலும் வட்டிவீதங்கள் குறைவடைந்தமையினால் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டுக் குறைப்புக்கு பொருளாதாரம் சிறந்த முறையில் பதிலிறுத்தது. தமது பொறுப்புகளில் கணிசமான பாகமொன்றினை நிலையான வீத தவணை வைப்புக்களாகக் கொண்டிருந்தன. இந்த வழிமுறையின் ஊடாகத் திரவத்தன்மை விடுவிக்கப்பட்டமையானது குறுங்கால வட்டி வீதங்களில் குறிப்பாக திறைசேரி உண்டியல் மற்றும் முதன்மைக் கடன்வீதங்களில் உடனடியாக உணரப்பட்டது. 1996 இல் வரட்சி மற்றும் மின்வெட்டு என்பனவற்றினால் பொருளாதார நடவடிக்கைகள் சிலவற்றில் ஏற்பட்ட தாக்கத்தின் காரணமாக செயற்படாக் கடன்களின் அதிகரிப்பொன்றினை எதிர்நோக்கிய வங்கிகள் புதிய கடன்களை வழங்குவதில் முன்னெச்சரிக்கையாக நடந்துகொண்டன. தனியார் துறைக்கான கொடுகடன் படிப்படியாக வளர்ச்சியடைந்து ஆண்டின் இறுதியில் 11.4 சதவீத கொடுகடன் வளர்ச்சி காணப்பட்டது. 1997 இல் பணநிரம்பல் 13.8 சதவீதத்தினால் அதிகரித்தது எனினும் இது இலக்கிடப்பட்ட 14.5 சதவீதத்தினைவிடக் குறைவானதாகவும் முன்னைய ஆண்டின் 10.8 சதவீதத்தினைவிட உயர்ந்ததாகவும் காணப்பட்டது. முன்னைய ஆண்டில் தமது வெளிநாட்டுச் சொத்துகளில் வீழ்ச்சியொன்றினைக் கொண்டிருந்த வர்த்தக வங்கிகள் தமது தேறிய வெளிநாட்டுச் சொத்து நிலைமையை மீளக்கட்டி எழுப்புவதற்காக அதிகரித்த திரவத் தன்மையின் பாரிய பாகமொன்றினைப் பயன்படுத்தின. வர்த்தக வங்கிகளின் இந்த நடத்தைக்கு உள்நாட்டு நிதியியல் சொத்துக்களின் விளைவு வீதம் குறைந்தமையும் இன்னுமொரு காரணமாகும்.

1997 இன் இன்னுமொரு முக்கிய அபிவிருத்தி என்னவெனில் நடுத்தரகால பிணையங்களுக்கான சந்தையொன்றை உருவாக்கும் நோக்கில் நடுத்தர கால திறைசேரி முறிகள் அறிமுகப்படுத்தப்பட்டமையாகும். இது முதலீட்டாளர்களுக்கான கவர்ச்சிகரமான படுகடன் கருவியாக மாறியுள்ளதோடு 1997 இல் ரூபா 10,000 மில்லியன் பெறுமதியான முறிகள் வழங்கப்பட்டன. 1998 இல் அதிகூடிய தொகையொன்றினை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

1997 இல் பங்குச்சந்தை சில மேம்பாடுகளைக் காட்டியது. அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண் 1997 இல் 16 சதவீத அதிகரிப்பைக் காட்டிய வேளையில் உணர்விலைச்சுட்டெண் 19 சதவீதத்

**வரைபடம் 1.1**
**வருமான வளர்ச்சி**



தினால் அதிகரித்தது. 1997 இல் பங்குச்சந்தையின் ஊடாக ஐக்கிய அமெரிக்க டொலர் 13 மில்லியன் கொண்ட வெளிநாட்டு நிதியங்களின் தேறிய உட்பாய்ச்சல் ஒன்று காணப்பட்டது.

முக்கியமாக காசு முகாமைத்துவத்தின் மேம் பாடு காரணமாக அரசிறை நிலைமை மேம்பாடடைந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சார்பில், உதவிக்கொடுப்பனவுகள், மாற்றல்கள், பாதுகாப்பு மற்றும் வட்டிச்செலவுகள் என்பனவற்றின் குறைப்பினைப் பிரதிபலிக்கும் வகையில் 1996 இன் 22.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1997 இல் நடைமுறைச் செலவினம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 20.7 சதவீதத்தில் கட்டுப்படுத்தப் பட்டது. தனியார் மயமாக்கலின் உயர் மட்டத்திலான பெறுகைகள் பொதுப்படுகடனின் பாகமொன்றினைத் தீர்ப்பனவு செய்வதற்கு இயலச் செய்ததோடு அரசாங்கத்துக்கு காசு முகாமைத்துவத்தில் நெகிழ்ச்சித் தன்மையொன்றினை வழங்கியது. 1997 இல் பாதுகாப்புச் செலவினம் 1996 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5.8 சதவீதத்திலிருந்து 1997 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. வரிவிலக்களிப்புக்களின் அதிகரிப்பு, வரி வீதங்களின் குறைப்பு மற்றும் ஏனைய வரிச்சலுகைகள் என்பன மொத்த அரசிறையில் 1996 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 19 சதவீதத்திலிருந்து 18.5 சதவீதத்திற்கான குறைப்பொன்றினை விளைவித்தது. எனினும் மூலதனச் செலவினத்தையும் உள்ளடக்கி செலவினங்களின் மீது விதிக்கப்பட்ட கடுமையான கட்டுப்பாடுகளின் முதன்மைக் காரணத்தினால் மொத்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை (கொடைகள் மற்றும் தனியார் மயமாக்கல் பெறுகைகள் நீங்கலாக) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 9.4 சதவீதத்திலிருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 7.9 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. எனினும் தனியார் மயமாக்கல் பெறுகைகளை அரசிறையாகக் கருதுமிடத்து பற்றாக்குறை முன்னைய ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 8.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 5.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2000 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4 சதவீதத்துக்கான இலக்குடன் கொடைகளும் தனியார் மயமாக்கல் பெறுகைகளும் நீங்கலாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 6.5 சதவீத மொத்த பற்றாக்குறை இலக்கினை எய்துவதற்காக வேண்டி 1997 இன் பெறுபேறுகளை உறுதிப்படுத்துவதற்கு 1998 இன் வரவு செலவுத்திட்டம் எதிர்பார்க்கின்றது. மேலும் கடந்த சில ஆண்டுகளின் முக்கிய அபிவிருத்தியொன்றாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சார்பில் மொத்தப்படுகடனின் வீழ்ச்சியொன்று காணப்படுகின்றது. பொதுப்படுகடன் இருப்பு 1996 இன் 92 சதவீதத்திலிருந்து 1997 இல் 85 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

வெளிநாட்டுப் பக்கத்தில், தொடர்ந்தும் இறக்குமதிகளின் அதிகரிப்பினைவிட ஏற்றுமதிகளின் அதிகரிப்பு உயர்வாகக் காணப்பட்டதுடன் இது தேயிலைத் துறையினதும் கைத்தொழில் துறையினதும் இயக்கவிசை யினைப் பிரதிபலிப்பதாக இருந்தது. எனினும் ஆண்டின் இறுதிப்பகுதியில் கிழக்காசிய நெருக்கடி யின் பணச்சுருக்கத் தாக்கம் உலக பொருளாதாரத் தினால் உணரப்பட்டமையின் காரணமாக ஏற்றுமதிகளின் வளர்ச்சி வேகத்தில் மெதுவடையும் தன்மையொன்று காணப்பட்டது. 1997 இல் ஏற்றுமதிகள் 13 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருக்கையில் இறக்குமதிகள் 8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமொன்றாக வர்த்தகப் பற்றாக்குறை 1996 இன் 10.0 சதவீதத்திலிருந்து 1997 இல் 8.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பணிகள் கணக்கின் மேம்பாட்டுடனும் அதி உயர் தனியார் மாற்றல்களுடனும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை முன்னைய ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.9 சதவீதத்திலிருந்து 2.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. சுற்றுலா மற்றும் துறைமுகப் பணிகள் என்பவற்றிலிருந்தான மேம்பட்ட வருவாய்களின் காரணமாக பணிகள் கணக்கும் மேம்பாடடைந்தது. சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 25 சதவீதத்தினால் அதிகரித்தன. 1997 இல் தனியார் மாற்றல்கள் 11 சதவீதத்தினால் அதிகரித்தன. 1997 இல் தேறிய வெளிநாட்டு நேரடி முதலீடு ஐ அ டொலர் 129 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்து. தனியார் மயப்படுத்தலின் மீதான வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சல்கள் ஐ அ டொலர் 301 மில்லியனாக விளங்கியது. பல ஆண்டுகளுக்குப் பின்னர் மாறுபடும் வீத பத்திரங்களின் வழங்கலின் ஊடாக ஐ அ டொலர் 50 மில்லியனைத் திரட்டியதன் மூலம் 1997 மார்ச்சில் இலங்கை பன்னாட்டு மூலதனச் சந்தையில் நுழைந்தது. எதிர்கால கடன்பாட்டாளர்களுக்குக் குறியீட்டு வட்டி வீதமொன்றினை நிறுவுவதற்கு இதனால் உத்தேசிக்கப்பட்டது. சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவை 1997 இல் பாரிய மிகையொன்றினைக் காட்டியது. இந்த மிகையானது வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட ஐ அ டொலர் 200 மில்லியன் திரட்சியிலும் தேறிய அலுவல்கள் ஒதுக்குகளில் ஐ அ டொலர்

163 மில்லியன் கொண்ட அதிகரிப்பிலும் பிரதிபலிக்கப்பட்டது. சென்மதி நிலுவையின் திருத்திய மைக்கப்பட்ட அறிமுகப்படுத்தலில் பின்னையது திரண்ட மிகையொன்றாகக் காட்டப்பட்டுள்ளது.

## 1.2 வெளியீடு

### பொருளாதார வளர்ச்சி


1997 இன் 6.4 சதவீத பொருளாதார வளர்ச்சியானது 1996 இன் தாழ்ந்த மட்டத்திலிருந்தான மீட்சியினை மட்டுமன்றி பொருளாதார அடிப்படைகள் மேம்பாடடைந்தமையின் முதன்மைக் காரணத்தினால் வாணிப நம்பிக்கை கணிசமான அளவு மேம்பாடடைந்தமையும் பிரதிபலிக்கின்றது. பணவீக்கத்தின் குறைப்பு, சார்பு ரீதியில் தாழ்ந்த வட்டிவீதத்துடன் குறிப்பாக பெருமளவு நிச்சயமற்ற பன்னாட்டுச் சூழலில் மேம்பட்ட அரசிறைக் கட்டுப்பாடுகளுடன் உள்நாட்டு நிதியியல் சந்தையினை சார்பு ரீதியில் உறுதியாக வைத்திருப்பதற்கு இயலுமாகக் காணப்பட்டமை என்பன மிகவும் சாதகமான முதலீட்டுச் சூழல் ஒன்றை உருவாக்கியது. இவ்வாண்டில் பங்குச்சந்தையில் சிறிதளவு மேல்நோக்கிய அசைவு காணப்பட்டதுடன் கூட்டு இலாபங்களும் கணிசமான அளவு மேம்பாடடைந்தன. வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் எதிர்பார்க்கப்பட்டதை விடக் குறைவாகக் காணப்பட்டன. எனினும் உட்கட்டமைப்பு வசதிகளின் போதாமை, தொழிலாளர் சந்தையில் நெகிழ்ச்சியற்ற தன்மை என்பன தொடர்ந்தும் தனியார் துறையின் முதலீட்டைப் பாதிப்பதாக இருந்தன. அதியுயர் பாதுகாப்புச் செலவினங்களும் உற்பத்தித் திறன் மிக்க முதலீட்டிலிருந்து மூலவளங்களை வெளிச்செல்ல வைத்தன. இதன் விளைவாக மொத்த உள்நாட்டு முதலீட்டு வீதம் 24.2 சதவீதத்திலிருந்து 24.4 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது.

1997 இல் நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 15.9 சதவீதத்தினால் ரூபா 890,485 மில்லியனுக்கு அதிகரித்தது. 18.6 மில்லியன் கொண்ட நடுவாண்டுக் குடித்தொகையுடன் இது 1996 இன் ரூபா 41,940 (ஐ அ டொலர் 760) உடன் ஒப்பிடுகையில் 1997 இல் ரூபா 47,999 (ஐ அ டொலர் 814) கொண்ட தலைக்குரிய பெயரளவு வருமான மட்டமொன்றைக் குறித்துக் காட்டியது. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருவாய்க்கு இது சீராக்கம் செய்யப்படும்போது தலைக்குரிய பெயரளவு உற்பத்தி 1996 இன் ரூபா 41,348 உடன் ஒப்பிடுகையில் ரூபா 47,409 இற்கு அதிகரித்தது. இலங்கை படிப்படியாக நடுத்தர வருமான நாடொன்றின் மட்டத்தினை எய்தி வருகின்றது. எனவே சலுகை அடிப்படையிலான வெளிநாட்டு நிதியங்களின் கிடைப்பனவானது படிப்படியாகக் குறைந்து செல்ல இடமுண்டு. எனவே உள்நாட்டு சேமிப்புக்கள் கணிசமாக அதிகரிக்கப்பட்டாலன்றி எதிர்காலத்தில் அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கான வெளிநாட்டு நிதியிடலின் பாரிய பங்கொன்றினை வெளிநாட்டு மூலதனச் சந்தைகளிலிருந்து பெறவேண்டியிருக்கும்.


முன்னைய ஆண்டினைப் போலவே பொருளாதார வளர்ச்சிக்கான பாரிய பங்களிப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 29 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்த தயாரிப்புத் துறையிலிருந்து கிடைத்தது. வேளாண்மைத்துறை 8 சதவீதத்திற்கு

**வரைபடம் 1.2**
**மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கம்**

**வரைபடம் 1.2.1**
**1978 - 1980**




**வரைபடம் 1.2.2**
**1997**



**அட்டவணை 1.2**

நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில் மொத்த தேசிய உற்பத்தி ( ஆண்டு சதவீத மாற்றம்)

| விடயம் | 1982 - 1996 | 1987 | 1996 | 1997 |
|---|---|---|---|---|
| 1. விவசாயமும் காட்டுத்தொழில் மற்றும் மீன்பிடித்தொழில் | 1.1 | -5.8 | -4.6 | 3.1 |
| 1.1 விவசாயம் | 0.9 | -8.1 | -5.1 | 3.0 |
| தேயிலை | 3.0 | 1.0 | 5.1 | 7.2 |
| இறப்பர் | 2.4 | -10.6 | 6.3 | -5.8 |
| தெங்கு | 3.5 | -24.6 | -7.6 | 3.3 |
| நெல் | -1.9 | -18 | -26.7 | 8.6 |
| ஏனையவை | 1.7 | 1.7 | 3.5 | 0.5 |
| 1.2 காட்டுத்தொழில் | 0.9 | 13.1 | 1.3 | 1.3 |
| 1.3 மீன்பிடித்தொழில் | 2.7 | 3.8 | -3.9 | 5.0 |
| 2. சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | 4.8 | 19 | 8.9 | 3.4 |
| 3. தயாரிப்பு | 8.8 | 6.8 | 6.5 | 9.3 |
| 4. கட்டடவாக்கம் | 5.8 | 1.8 | 3.4 | 5.4 |
| 5. வலு,வாயு,நீர்,சுகாதாரப்பணிகள் | 7.1 | 3.0 | -2 .0 | 8.0 |
| 6. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல் | 5.4 | 1.2 | 7.5 | 7.8 |
| 7. மொத்த மற்றும் சில்லறை விற்பனை | 5.8 | 2.8 | 5.2 | 6.5 |
| 8. வங்கித்தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்து | 9.4 | 6.1 | 10.1 | 9.8 |
| 9. வதிவிடங்களின் உடைமை | 1.2 | 1.5 | 1.3 | 1.2 |
| 10. பொது நிருவாகமும் பாதுகாப்பும் | 3.8 | 3.1 | 5 .0 | 4.4 |
| 11. பணிகள் (வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை) | 3.9 | 2.7 | 4 .0 | 5.8 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தி | 5.2 | 1.5 | 3.8 | 6.4 |
| 13. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருவாய் | 6.1 | -3.0 | -50.0 | 17.3 |
| 14. மொத்த தேசிய உற்பத்தி | 5.3 | 1.6 | 3.1 | 6.9 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

அல்லது தயாரிப்புத் துறையின் மூன்றிலொரு பங்கிற்கு பங்களிப்புச் செய்தது. சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் துறை 1 சதவீதத்திற்கு பங்களிப்புச் செய்தவேளையில், கட்டிடவாக்கத்துறை 6 சதவீதத் திற்கு பங்களிப்புச் செய்தது. பயன்பாட்டுப் பணிகளையும் உள்ளடக்கிய பணிகள் துறை வளர்ச்சி யின் 55 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்து குறிப்பாக மின்வலு, துறைமுகங்கள், வர்த்தகம் மற்றும் நிதியியல் பணிகளின் அதியுயர் வளர்ச்சியினை பிரதிபலி ப்பதாக இருந்தது. வளர்ந்துவரும் பொருளாதார மொன்றில் பணிகள் துறை அதிமுக்கிய துறையாக விளங்குவது வழமை க்கு மாறானதல்ல. எனினும் இலங்கையில் தயாரிப்பு மற்றும் பணிகள் துறைகளின் மேலும் உறுதியான வளர்ச்சிக்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

## வேளாண்மை

வேளாண்மைத் துறை 3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. தனியார் முகாமைத்துவத்தின் கீழ் தேயிலைப் பெருந்தோட்டங்களின் மேம்பட்ட செயலாற்றம் மற்றும் கவர்ச்சிகரமான தேயிலை விலைகள் என்பனவற்றின் காரணமாக தேயிலைத் துறையின் இயக்கவிசையினை இது முக்கியமாகப் பிரதிபலிப்பதாக இருந்தது. 1996 இல் வரட்சியினால் பாதிக்கப்பட்ட நெல்துறையின் மீட்சியானது கணிச மான பங்களிப்பொன்றினைச் செய்தது. மேலும் வடமாகாணத்தின் வேளாண்மை நடவடிக்கைகளும் அண்மிய வழமை நிலைக்குத் திரும்பியது. வடக்குக் கிழக்கின் மீன்பிடிப் பிரதேசங்கள் பகுதியளவில் செயற்படத் தொடங்கிமையும் நன்னீர் மீன்பிடித் துறையின் வளர்ச்சியும் பொருளாதார வளர்ச்சியில் நேர்க்கணியப் பங்களிப்பொன்றினை வழங்கின.

பன்னாட்டுச் சந்தைகளில் தேயிலை விலைகள் தொடர்ந்தும் கவர்ச்சிகரமாக இருந்தன. கொழும்பு ஏலங்களின் விலைகள் 1996 இன் 44 சதவீத அதிகரிப்பின் பின்னர் 15 சதவீதத்தினால் அதிகரித்தன. தேயிலை உற்பத்தி முன்னைய ஆண்டின் உச்ச வெளியீடான 277 மில்லியன் கிலோ கிறாம்க ளிலிருந்து 7 சதவீதத்தினால் அதிகரித்தது. உயர் மற்றும் மத்திய உயர் நிலங்கள் முறையே 1971 இன் பின்னரும் 1981 இன் பின்னரும் அதிகூடிய உற்பத்தி மட்டங்களைப் பதிவு செய்தன. கவர்ச்சிகரமான விலைகளின் காரணமாக சிறு உடைமையாளர்க ளின் விளைச்சல் குறைந்த காணிகளிலும் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது. பெருந்தோட்டங்களின் சராசரி விளைச்சல் 7 சதவீதத்தினால் எக்டேயர் ஒன்றுக்கு 1,465 கிலோ கிறாம்களுக்கும் சிறு உடைமையாளர் களின் தோட்டங்களில் 2 சதவீதத்தினால் எக்டேயர் ஒன்றுக்கு 1,972 கிலோ கிறாம்களுக்கும் அதிகரித்தது. 1996 இன் 14 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் உற்பத்திச் செலவு 4 சதவீதத்தினால் அதிகரித்தது. பெருந்தோட்டங்களில் சார்பு ரீதியான குறைந்த விளைச்சலுக்கு காணிச்சீர்திருத்தத்தின் பின் நீண்டகாலமாகப் புறக்கணிக்கப்பட்டமையே காரணம் எனக் கூறப்படு கின்றது. தனியார் முகாமைத்துவத்தின் கீழ் இந்தத்துறையின் மேம்பாட்டுக்கான தெளிவான அறிகுறிகள் காணப்படுகின்றன. கவர்ச்சிகரமான விலைகள், உயர்ந்த விளைச்சல்கள், உற்பத்திச் செலவின் மெதுவான அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக தேயிலைத்துறையின் இலாபத் தன்மை அதிகரித்தது.

1996 இன் வரட்சியின் தாக்கத்திலிருந்து ஓரளவு மீட்சியடைந்த தெங்கு உற்பத்தி 3 சதவீத மிதமான வளர்ச்சியினைப் பதிவு செய்தது. ஆண்டின் முதற் சில மாதங்களில் வழங்கல் நிலைமையில் இறுக்கமான தன்மையொன்று காணப்பட்ட போதும் இரண்டாம் மூன்றாம் காலாண்டுகளின் அதிகரித்த உற்பத்தியின் காரணமாக இந்த நிலைமை இலகுவாக்கப்பட்டது. வளர்ச்சியடைந்து வரும் கைத்தொழில் துறை

மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்கள் என்பனவற்றின் அதிகரித்த கேள்வியின் விளைவாக தென்னந் தோட்டங்கள் துண்டாக்கப்படல் 1997 இலும் தொடர்ந்தது. எக்டேயர் ஒன்றுக்கான தெங்கு விளைச்சல் சிறிதளவால் அதிகரித்தது. தெங்கின் உற்பத்திச் செலவு 4 சதவீதத்தினால் அதிகரித்தது. ரூபா நியதிகளில் 1997 இல் ஏற்றுமதி விலைகள் சிறிதளவால் அதிகரித்த வேளையில் உடன் காய் களின் உள்நாட்டு சராசரி விலை 26 சதவீதத்தினால் கடுமையாக அதிகரித்தது. வழங்கலில் காணப்பட்ட மேம்பாடு சருவதேச ரீதியிலும் உள்நாட்டிலும் எண்ணெய் பதிலீட்டுப் பொருட்களின் கிடைப்பனவு என்பனவற்றின் காரணமாக தேங்காய் எண்ணெய் விலைகள் கடுமையாக வீழ்ச்சியடைந்தன. விலை வீழ்ச்சிக்கு கிழக்காசிய நாணய நெருக்கடி ஓரளவு காரணமாகும் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இறப்பர்த் துறையின் இலாபத் தன்மையினைப் பாதித்த விலைவீழ்ச்சியின் முதன்மைக் காரணத் தினால் இறப்பர் உற்பத்தி 6 சதவீதத்தினால் வீழ்ச்சிய டைந்தது. உற்பத்தியாளர்களினால் போட்டித் தன்மை யுடைய கூலிகளை வழங்க இயலாது காணப்பட்டமை யினால் தொழிலாளர் பற்றாக்குறையும் காணப் பட்டது. இதற்கு மேலதிகமாக 1997 இன் பிற்பகுதியில் பருவகாலமற்ற அதிகூடிய மழை வீழ்ச்சியின் காரணமாக பால் எடுத்தலும் தடைப்பட்டது. சராசரி உற்பத்திச் செலவு 10 சதவீதத்தினால் அதிகரித்தது. கொழும்பு ஏலவிலைகள் 17 சதவீதத்தினால் வீழ்ச்சிய டைந்தன. விளைச்சல் 11 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 1997 இல் இத்துறையின் இலாபத் தன்மை கணிசமான அளவில் வீழ்ச்சியடைந்தது.

விளைச்சலில் மேம்பாட்டுடன் நெல் உற்பத்தி 9 சதவீதத்தினால் அதிகரித்தது. ஏனைய வேளாண் மைப் பயிர்கள் கலப்பான செயலாற்றமொன்றைக் காட்டின. மிளகு, கராம்பு, கறுவாப்பட்டை, சிற்றனெல்லா என்பனவற்றின் உற்பத்தி 1997 இல் அதிகரித்து ள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. துணை உணவுப் பயிர்களில் பெரிய வெங்காயம், எள்ளு, நிலக்கடலை, சின்ன வெங்காயம் என்பன உயர்ந்த வெளியீட்டு மட்டங்களைக் காட்டின. எனினும் 1996 இல் உரிமக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமையின் காரணமாக இலங்கையின் தாழ்ந்த உற்பத்தியாற்றலைப் பிரதிபலிக்கும் வகையில் மிளகாய், உருளைக்கிழங்கு என்பனவற்றின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது.

## சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும்

கட்டுமான நடவடிக்கைகளின் அதிகரிப்பின் காரணமாக கருங்கற் பொருட்கள், செங்கற்கள் மற்றும் ஓடுகள் என்பனவற்றின் உற்பத்தி அதிகரிப்புகளைப் பிரதிபலிக்கும் வகையில் இத்துறை 1997 இல் 3.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. கிழக்காசிய நிதியியல் நெருக்கடியினைத் தொடர்ந்து யப்பான் மற்றும் ஏனைய நாடுகளிலிருந்தான கேள்வியின் குறைப்பின் காரணமாக ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் இரத்தினக்கற்கள் மற்றும் பெறுமதி குறைந்த அருங்கற்களின் ஏற்றுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக வளர்ச்சி வீதம் 1996 இனை விட தாழ்வாகக் காணப்பட்டது. ஏற்றுமதித் தொகுதியில் காணப்பட்ட வீழ்ச்சியின் மத்தியிலும் கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான (இல்மனைட், காரீயம் போன்றன) வருவாய்கள் 1996 இனைப் போன்றே ஐ அ டொலர் 90 மில்லியனில் காணப்பட்டன.

## தயாரிப்பு

1997 காலப்பகுதியில் தயாரிப்பு வெளியீடு 10.3 சதவீதத்தினால் அதிகரித்தது. புடவை மற்றும் ஆடைகள் துறை 19 சதவீதத்தினால் அதிகரித்து மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அதனது பாங்கினை 1996 இன் 4.5 சதவீதத்திலிருந்து 1997 இல் 5.1 சதவீதத்திற்கு அதிகரித்துக் கொண்டது. கடந்த நான்கு ஆண்டுகளிலும் புடவைகள் மற்றும் ஆடைகள் துறை கைத்தொழில் துறை வெளியீட்டின் 38 சதவீதத்திற்கு வகைகூறின. இத்துறையில் அதிகரித்த தங்கியிருத்தலைக் குறித்துக் காட்டும்

**அட்டவணை 1.3**


மொத்த தேசிய உற்பத்தி
(துறைகளின் பங்குகள் சதவீதத்தில்) (அ)

| | 1978 | 1987 | 1996 | 1997 |
|---|---|---|---|---|
| 1. விவசாயம், காட்டுத்தொழில் மற்றும் மீன்பிடித் தொழில் | 28.7 | 23.6 | 18.4 | 17.8 |
| 2. சுரங்கம் அகழ்தலும் கல்லுடைத்தலும் | 2.5 | 2.7 | 2.5 | 2.5 |
| 3. தயாரிப்புத் தொழில் | 15.3 | 16.2 | 21.0 | 21.5 |
| 4. கட்டடவாக்கம் | 8.3 | 7.2 | 6.9 | 6.8 |
| 5. பணிகள் | 45.3 | 50.3 | 51.2 | 51.4 |
| மின்வலு, வாயு, நீர் | 0.9 | 1.2 | 1.4 | 1.5 |
| போக்குவரத்து, களஞ்சியப் படுத்தல், தொடர்பூட்டல் | 11.0 | 11.7 | 11.6 | 11.7 |
| மொத்த சில்லறை வர்த்தகம் | 19.3 | 21.1 | 21.7 | 21.7 |
| வங்கித்தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்து | 3.0 | 4.7 | 6.1 | 6.3 |
| வதிவிடங்களின் உடைமை | 3.5 | 3.1 | 2.3 | 2.2 |
| பொது நிருவாகமும் பாதுகாப்பும் | 3.0 | 4.7 | 4.3 | 4.3 |
| பணிகள் (வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை) | 4.6 | 3.8 | 3.7 | 3.7 |
| 6. மொத்த உள்நாட்டு உற்பத்தி | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |
| 7. வெளிநாடுகளிலிருந்தான தேறிய காரணி வருவாய் | -0.4 | -2.3 | -1.8 | -1.4 |
| 8. மொத்த தேசிய உற்பத்தி | 99.6 | 97.7 | 98.2 | 98.6 |

(அ) அடிப்படை 1982.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

**வரைபடம் 1.3**
**சேமிப்புகளும் முதலீடும்**




வகையில் 1997 இல் அதனது பங்கு 41 சதவீதத்திற்கு அதிகரித்தது. சிறந்த தரம், செயல்திறன் மற்றும் நேரப்படியான வழங்கல் என்பனவற்றின் காரணமாகப் பன்னாட்டு ஆடைக் கைத்தொழிலில் இலங்கை உறுதியான தன்மையொன்றினை நிறுவியுள்ளது. 30 சதவீதமான ஏற்றுமதிகள் அனுமதிப் பங்கு நாடுகளுக்கு வெளியேயான நாடுகளுக்காகும் என்பது குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும்.

இதேவேளையில் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள், பால் உற்பத்திப் பொருட்கள், பதனிடப்பட்ட தேயிலை, குடிபானங்கள், இனிப்புப் பண்டங்கள், இறைச்சி உற்பத்திப் பொருட்கள், மின் உபகரணங்கள், மின்கலங்கள், இறப்பர் உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றின் உற்பத்தியும் அதி உயர் வளர்ச்சி வீதங்களைக் காட்டின. இவற்றின் வளர்ச்சி வீதங்கள் 5 இலிருந்து 28 சதவீதத்திற்கிடையிலான வீச்சில் காணப்பட்டன.

470 நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட மத்திய வங்கியின் ஆண்டுக் கைத்தொழில் உற்பத்தி அளவீட்டின் அடிப்படையில் பொதுவான தனியார் துறை முதலீட்டின் வளர்ச்சிக்கு இசைந்து செல்லும் வகையில் 1997 இல் கைத்தொழில் துறை இயலளவு 5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. தொழிலாளர் உற்பத்தித் திறனில் 2.9 சதவீத அதிகரிப்பு காணப்பட்டமையும் இந்த அளவீடு வெளிப்படுத்தியது. தயாரிப்புத் துறையின் இலாபத் தன்மை விகிதம் 1996 இன் 14.9 சதவீதத்திலிருந்து 15.6 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக வேண்டி முக்கியமாக வரி மற்றும் இறக்குமதித் தீர்வைச் சலுகைகள் என்பனவற்றின் வடிவிலான ஊக்குவிப்புக்களைப் பெறக்கூடிய கைத்தொழில் வகைகள் கடந்த மூன்றாண்டு காலப்பகுதியில் விரிவடைந்து

சென்றுள்ளன. இலங்கையின் கைத்தொழில் உற்பத்திப் பொருட்களுக்கான குறிப்பாக அணியும் பொருட்கள் மற்றும் ஆடைகள் என்பனவற்றிற்கு மேற்கத்தைய நாடுகளிலிருந்தான கேள்வி தொடர்ந்து அதிகரித்தது. 1997 இன் ஆரம்ப காலப்பகுதியில் மத்திய வங்கியினால் நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகள் குறைக்கப்பட்டமை, முதலீட்டுச்சபையல்லா ஏற்றுமதியாளர்களுக்கான புதிய வெளிநாட்டு நாணய கடன் திட்டம் 1997 இல் அரசாங்கத்தினால் மூலவளங்கள் வெளிச் செலுத்தப்பட்டமை என்பனவற்றின் காரணமாக கைத்தொழில் முயற்சியாளர்கள் எதிர்பார்த்ததை விடக் குறைவாகக் காணப்பட்டாலும் கூட வட்டி வீதங்களின் குறைப்புக்கு உதவின. இது, முக்கிய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் மிதமான பெறுமானத் தேய்வுடன் இணைந்து கைத்தொழில் துறைக்கு உதவியது.

கைத்தொழில் துறைக்கான கடன்வழங்கல் 1997 இல் அதிகரித்தது. நேரடிக்கடன்கள் மற்றும் பங்குடைமைப் பங்கேற்பு என்பனவற்றின் வடிவில் இரு முக்கிய அபிவிருத்தி வங்கிகளும் கைத்தொழில் துறைக்குத் தொடர்ந்து நிதி வசதிகளை வழங்கின. தேசிய அபிவிருத்தி வங்கியும், அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியும் 1996 இன் ரூபா 10,844 மில்லியனுக்கு எதிராக 1997 இல் ரூபா 15,575 மில்லியனுக்கு ஒப்புதல் வழங்கின. ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களிலும் கைத்தொழில் துறைக்கான வர்த்தக வங்கி முற்பணங்கள் சிறிதளவால் ரூபா 25,400 மில்லியனுக்கு அதிகரித்தன.

1994 இல் அறிவிக்கப்பட்டவாறு அரசாங்கத்தின் கைத்தொழில் கொள்கை தனியார் துறையினரால் வழி நடத்தப்படும் கைத்தொழில் மயமாக்கலையே வலியுறுத்தியது. கைத்தொழில் அடிப்படையினை விரிவாக்கல், பன்முகப்படுத்தல் மற்றும் தரமுயர்த்தல், பௌதீக மற்றும் மனிதவலு மூலவளங்களின் செயல்திறன் மிக்க முகாமைத்துவம் தொழில் வாய்ப்பு உருவாக்கம், வருவாய் மட்டங்களை அதிகரித்தல், ஏற்றுமதி ஊக்குவிப்பு மற்றும் கைத்தொழில்களின் பிராந்திய மயமாக்கல் என்பனவற்றை கைத்தொழில் கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.

புடவைகளும் ஆடைகளும் 20 சதவீதத்தினால் அதிகரித்ததைத் தொடர்ந்து 1997 இல் கைத்தொழில் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிகள் 14.3 சதவீதத்தினால் அதிகரித்தன. தயாரிப்புத் துறையின் தொழில் நிலை 4 சதவீதத்தினால் அதிகரித்தது. ஊக்குவிப்புக்களைத் தொடர்ந்து தயாரிப்பு மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளின் அதிகரிப்பானது இவ்வாண்டில் இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகளையும் அதிகரிக்கச் செய்தது.

## பணிகள்

பணிகள் துறை தொடர்ந்தும் உறுதியாக வளர்ச்சியடைந்தது. மின்வலு, தொலைத்தொடர்புப் பணிகள், சுற்றுலா என்பன மேம்பட்ட செயலாற்றத்தைக் காட்டின. வலுத்துறையில் 177 மெகாவாட் வெப்பவலு இயலளவு நிறுவப்பட்டமையானது ஐந்து ஆண்டுகளுக்குப் பின் முதன் முறையாக தேசிய வலு வழங்கலில் மின் வலு உருவாக்க இயலளவை அதிகரித்ததோடு நீர் மின்வலுவில் தங்கியிருத்தலை 81 சதவீதத்திலிருந்து 71 சதவீதத்திற்குக் குறைவடையச் செய்து வலு வழங்கலின் நம்பகத் தன்மையை மேம்பாடடையச் செய்தது. இதற்கு மேலதிகமாக வரையறுக்கப்பட்ட லக்தனாவி (தனியார்) கம்பனியினால் கட்டி தொழிற்படுத்தி உடைமையாக்கிக் கொள்ளும் முதலாவது வலுச் செயற் திட்டத்தின் கீழ் 22.5 மெகாவாட் இயலளவு ஆரம்பிக்கப்பட்டது. 1996 இன் 2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 8 சதவீத கூட்டிய பெறுமதியுடன் அனைத்து மூலங்களிலிருந்துமான மின்வலு உருவாக்கம் 13 சதவீதத்தினால் அதிகரித்தது.

தனியார் துறையின் அதிகரித்த பங்கேற்பு மற்றும் வரையறுக்கப்பட்ட சிறி லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் உயர்மட்ட செயலாற்றம் என்பனவற்றின் காரணமாக தொலைத்தொடர்புத் துறை தொடர்ந்து விரிவடைந்தது. போட்டியினை அதிகரிக்கும் வகையில் பல புதிய வழங்குநர்கள் தொலைத்தொடர்புத் துறையினுள் நுழைந்தனர். சிறிலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் 35 சதவீத பங்குகள் யப்பானின் நிப்போன் ரெலிகிராப் அன்ட் ரெலிபோன் கோப்பரேசன் நிறுவனத்துக்கு ஐ அ டொலர் 225 மில்லியனுக்கு விற்பனை செய்யப்பட்டன. 1997 இல் தொலைபேசி வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 72,453 இனால் 315,241 இற்கு அதிகரித்தது. மொத்த எண்ணிக்கையை மேலும் 2 ஆல் அதிகரித்து 1997 இறுதியில் 24 உரிமம் பெற்ற தனியார் கம்பனிகள் பல்வேறுபட்ட தொலைத் தொடர்புப் பணிகளை வழங்கின. தொலைத் தொடர்பு பணிகளில் தனியார் துறையின் பங்கு விரைந்து வளர்ச்சியடைகின்றது. 1996 இன் 25 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1997 இல் தொலைத் தொடர்புத்துறை 33 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

இலங்கையின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வர்த்தகத்தின் வளர்ச்சியினையும் மாற்றுக் கப்பலேற்

றல் சரக்கு-கையாளலில் அதிகரிப்பினையும் பிரதிபலிக்கும் வகையில் துறைமுகப் பணிகளின் பங்கு தொடர்ந்து வளர்ச்சியடைந்தது. மொத்த வருவாயில் 22 சதவீத அதிகரிப்புடன் 1997 இல் துறைமுகப் பணிகளின் இலாபத்தன்மை 13 சதவீதத்தினால் அதிகரித்தது.

பணிகள் துறையினுள் 1997 இல் சுற்றுலாத்துறை கிட்டத்தட்ட 22 சதவீதத்தினால் கூடுதலாக மீட்சியடைந்தது. ஏனைய பல துறைகளின் வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் வகையில் 1996 இன் 5.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் வர்த்தகத்துறை 6.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

## 1.3 முதலீடுகளும் சேமிப்புக்களும்


நாட்டின் சேமிப்பு வீதம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 24.4 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது. அரசினால் எதிர்நோக்கப்படும் நிதிக்கட்டுப்பாடுகளைப் பெருமளவு பிரதிபலிக்கும் வகையில் முக்கியமாக பொது முதலீட்டின் குறைப்பின் காரணமாக முதலீட்டில் சார்பு ரீதியில் குறைவான வளர்ச்சி காணப்பட்டது. தனியார் முதலீடு 1996 இன் 18 சதவீதத்திலிருந்து 18.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. எனினும் முதலீட்டின் மந்தமான வளர்ச்சியானது கடுமையாகக் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயமொன்றாகும். தனியார்துறை முதலீட்டுக்கான தடைகள் விரைவில் அகற்றப்படாவிட்டால் இந்த முதலீட்டு மட்டத்தில் இடைக்காலத்தில் விரைந்த வளர்ச்சிக் கான வாய்ப்புக்கள் மிகக்குறைவாகவே காணப்படுகின்றன.

சேமிப்புக்கள் தொடர்பான அபிவிருத்திகள் ஊக்கமளிப்பதாக உள்ளன. உண்மை வருமானங்களின் விரைந்த வளர்ச்சியினைத் தொடர்ந்து உள்நாட்டு சேமிப்பு விகிதம் 1996 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 15.3 சதவீதத்திலிருந்து 17.3 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது. உண்மை வட்டி வீதங்களின் குறைப்பின் மத்தியிலும் சேமிப்பதற்கான சார்பு மனப்பாங்கில் மேம்பாடொன்றினை இது குறித்துக் காட்டுகின்றது. பொதுச் செலவினங்களை ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் அதிகரித்த கூட்டுச் சேமிப்புகள் என்பனவற்றின் ஊடாக 1997 இல் அரசாங்கத்தின் சேமிப்பின்மையில் மேற்கொள்ளப்பட்ட குறைப்பினையும் இது ஓரளவு பிரதிபலிக்கின்றது. வெளிநாட்டு நடைமுறைக் கணக்கில் ஓரளவு அதிகரித்த பற்றாக்குறைக்கு இடமளித்த பின்னர் இந்த சேமிப்பு மட்டங்களுடன் அரசாங்கத்துக்கு உயர்மட்ட முதலீட்டினைப் பேண இயலுமாக இருந்திருக்கும். எனினும் தனியார் துறை முதலீட்டுக்குத் தடையாக உள்ள ஏனைய காரணிகளும் காணப்படுவதால் இது நிகழாததோடு இந்தத் தடைகள் தொடர்பாக விரைவில் கவனத்திற்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

## 1.4 விலைகள்

உள்நாட்டு வழங்கல் நிலைமையில் மேம்பாடு மற்றும் நாணய விரிவாக்கத்தில் காணப்பட்ட மிதமான தன்மை என்பனவற்றின் முதன்மைக் காரணத்தினால் 1997 இல் பணவீக்க வீதம் கடுமையாக மெதுவடைந்தது. உணவுப் பண்டங்களின் உள்நாட்டு வழங்கலில் காணப்பட்ட மேம்பாட்டிற்கு

**வரைபடம் 1.4**
**விலைகளின் மாற்றங்கள்**




மேலதிகமாக வெங்காயம், உருளைக்கிழங்கு, மிளகாய் என்பனவற்றின் உரிமத் தேவைப்பாடுகள் அகற்றப்பட்டமையின் காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட நுகர்வுப் பொருட்களின் கிடைப்பனவும் மேம்பாடடைந்தது. தெரிந்தெடுக்கப்பட்ட நுகர்வுப் பொருட்களுக்கு வழங்கப்பட்ட தற்காலிக தீர்வைத் தளர்த்தல்களும் பணவீக்கத்தைக் கட்டுப் படுத்த உதவின. பணவீக்கத்தின் மீது மேற்குறிப்பிடப் பட்ட காரணிகளின் சாதகமான விளைவுகள் கோதுமை மாவின் நிருவகிக்கப்பட்ட விலைகளின் அதிகரிப்பினைத் தொடர்ந்து ஒகத்து மாதத்தில் பாணின் விலை அதிகரிப்பு செத்தெம்பர் மாதத்தில் மின்கட்டணங்களின் அதிகரிப்பு மற்றும் 1997 யூனில் சிகரட்டுக்களின் விலை அதிகரிப்பு என்பனவற்றினால் ஓரளவு எதிரீடு செய்யப்பட்டது. ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராகக் கிட்டத் தட்ட 7 சதவீதத்தினால் இலங்கை ரூபா தேய்வடைந் தமையும் பணவீக்கத்துக்குப் பங்களிப்புச் செய்தது.

கிடைக்கத்தக்கதாக உள்ள அனைத்து விலைச் சுட்டெண்களும் கணிசமான மெதுவான போக்கி னைக் காட்டின. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் பிரதிபலிக்கப்பட்டவாறு நுகர் வோர் விலைகளின் ஆண்டுக்கு ஆண்டு அதிகரிப்பு 1997 இல் 9.6 சதவீதமாகக் காணப்பட்டது. விரிவான உள்ளடக்கத்தினைக் கொண்ட பாரிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் நுகர்வோர் விலைகளின் 1996 இன் 14.7 சதவீத அதிகரிப்பி லிருந்து 1997 இல் 7.1 சதவீதத்திற்கான விரைந்த வீழ்ச்சியொன்றினைக் குறித்துக் காட்டியது. 1996/ 97 நுகர்வோர் நிதி அளவீட்டின் முதல் இரண்டு சுற்றுக்களினதும் தரவுகளை அடிப்படை யாகக் கொண்டு மத்திய வங்கியினால் தயாரிக்கப் பட்ட தற்காலிக விலைச்சுட்டெண் 1997 இல் நுகர்வோர் விலையில் 7.3 சதவீத பணவீக்கத்தினைக் குறித்துக் காட்டியது. தொடக்க சந்தை மட்டத்தில் அனைத்து விலைகளினதும் போக்கினைப் பிரதிபலிக்கும் மொத்த விற்பனவு விலைச்சுட்டெண் 1996 இன் 20.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 6.9 சதவீத பணவீக்கத்தினைக் காட்டியது. நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அனைத்துப் பொருட்கள் பணிகளின தும் முழுமையான வீச்சுக்குமான உட்கிடை விலைச் சுட்டெண்ணான மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி 1996 இன் 12.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1997 இல் 8.5 சதவீதத்தினால் அதிகரித்தது.

## 1.5 கூலிகள்

நன்கமைந்த துறைக்கான கூலி நிருணயம் அரசினால் நிறுவப்பட்ட பொறிமுறை அல்லது பல்லாண்டு காலமாக உருவான பொறிமுறையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. அரச மற்றும் உள்ளூராட்சித் துறைகளைப் பொறுத்த வரையில் சில வேளைகளில் சம்பள மீளாய்வு ஆணைக் குழுக்கள் நியமிக்கப்படுவதோடு அமைச்சரவைத் தீர்மானங்களுக்கு அமைய கூலிச்சீராக்கங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. நன்கமைந்த தனியார் துறையில் அரசுசார் மற்றும் கூட்டுறவுத் துறைகளில் பிணைப்பினைக் கொண்ட கூலிச்சபைகள் மற்றும் ஊதிய தீர்ப்பு மன்றங்கள் என்பனவற்றின் தீர்மானங்களுக்கு இணங்க கூலிச் சீராக்கங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக நன்கமைந்த தனியார் துறையில் நடுவர் தீர்ப்பு, இணக்க செயல்முறைகள், கூட்டுப் பேரம் பேசல், தனிப்பட்ட பேரம்பேசல், தொழில்தருநர் ஒரு தலைப்பட்ச தீர்மானங்கள் என்பனவற்றின் அடிப்படையிலும் கூலிகள் தீர்மானிக்கப்படுகின்றன. நன்கமையாத தனியார் துறையில் தனிப்பட்ட பேரம்பேசல் மற்றும் தொழில்தருநர் ஒருதலைப் பட்ட தீர்மானங்கள் என்பனவற்றின் அடிப்டையில் கூலிகள் நிருணயிக்கப்படுகின்றன.



வரைபடம் 1.5
கூலிவீதச் சுட்டெண்கள்
(1991 = 100)

1994 இல், திரு பீ.சீ.பெரேரா அவர்களின் தலைமையில் நியமிக்கப்பட்ட சம்பள மீளாய்வுக் குழுவின் விதந்துரைப்புக்களை ஏற்றுக்கொண்டு அரச துறை சம்பளங்களின் முழுமையான மீளாய்வுக்கான முதலாவது நடவடிக்கையினை 1997 இல் அரசாங்கம் மேற்கொண்டது. 20 ஆண்டுகளுக்கு மேலாக அரசதுறை ஊதியங்களின் அனைத்தையும் உள்ளடக்கிய முதலாவது மீளாய் வாக இது காணப்பட்டது. இதன்படி, முன்மொழியப் பட்ட சம்பள அடிப்படை கூலிகள் மற்றும் படிகள் என்பனவற்றின் ஒருமைப்பாட்டினை இன்றியமை யாததாக்கியது. மாதமொன்றுக்கு ஆகக்குறைந்தது ரூபா 325 என்பதற்கு உட்பட்டு முன்மொழியப்பட்ட

அதிகரிப்பின் முதலாவது கட்ட சம்பள அதிகரிப்பாகிய 40 சதவீதம் 1997 சனவரி 1ஆம் நாள் வழங்கப்பட்டது. எஞ்சிய அதிகரிப்பு 1998 சனவரி 1ஆம் நாளிலிருந்து செயற்பட இருந்ததுடன் 1995 இல் கணிசமான சம்பள அதிகரிப்புக்களைப் பெற்ற பள்ளிக்கூட ஆசிரியர்கள் தவிர்ந்த அரசதுறை ஊழியர்களில் பலர் இந்த முன்மொழிவுகளின் கீழ் கணிசமான பெயரளவு கூலி அதிகரிப்புக்களைப் பெற்றுக்கொண்டனர். 1997 இல் அரச ஊழியர்களுக்கான கூலி வீதச் சுட்டெண் 1996 இன் 3.2 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 10.8 சதவீதத்தினால் அதிகரித்தது. அரச பள்ளிக்கூட ஆசிரியர்கள் 1997 இல் 2.4 சதவீத மிதமான பெயரளவு கூலி அதிகரிப்புக்களைப் பெற்றுக்கொண்டனர். அரச பள்ளிக்கூட ஆசிரியர்களின் சம்பள அளவுகளின் முரண்பாடுகள் சிலவற்றை சரிசெய்வதற்காகக் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன.

நன்கமைந்த தனியார் துறையில் கூலிச் சபைகள் பலவற்றிற்கு பிரயோகிக்கத்தக்க ஆகக் குறைந்த கூலிகள் 1996 இன் 8.3 சதவீத அதிகரிப்பைத் தொடர்ந்து 5.9 சதவீதத்தினால் மேல்நோக்கித் திருத்தப்பட்டன. தேயிலைத் துறையின் தொழிலாளர்களுக்கான ஆகக்கூடிய நாளாந்த கூலிகள் 1996 ஒகத்திலிருந்து ரூபா 83 ஆக மாற்றமின்றிக் காணப்பட்டன. இறப்பர் பெருந் தோட்டங்களின் சம்பள வீதம் வாழ்க்கைச் செலவுப்படி சுட்டெண்ணின் அதிகரிப்புக்களுக்கு இணங்க 1997 ஒற்றோபரில் ரூபா 83.22 இனை எய்தி நவெம்பரிலிருந்து ரூ. 83 இல் நிலைப்படுத்தப்பட்டது. நன்கமையாத துறையில் கட்டட நிருமாணம், நெல், தேயிலை மற்றும் தெங்குப் பயிர்ச்செய்கை தொடர்பான பெருமளவு நடவடிக்கைகளில் 9-19 சதவீதத்தில் பெயரளவு கூலிகள் கணிசமாக அதிகரித்திருப்பதைத் தற்காலிக தரவுகள் எடுத்துக் காட்டுகின்றன.


பொதுவாகக் கிட்டத்தட்ட 9.6 சதவீத சராசரி நுகர்வோர் விலை அதிகரிப்பு காணப்படுகின்றமையினால் 1997 இல் உண்மைக் கூலிகள் கணிசமாக உயர்வடைந்துள்ளன.

## 1.6 குடித்தொகை

பதிவாளர் நாயகத் திணைக்களத்தின்படி, நடுவாண்டுக் குடித்தொகை 1996 இன் 18.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 1997 இல் 18.6 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாண்டில் குடித்தொகையில் சேர்க்கப்பட்ட கிட்டத்தட்ட 237,000 ஆட்களின் காரணமாக குடித்தொகைச் செறிவு 1996 இன் சதுர கிலோ மீற்றர் ஒன்றுக்கு 292 ஆட்களிலிருந்து 1997 இல் 296 ஆட்களுக்கு அதிகரித்துள்ளது. கடந்த காலத்துடன் ஒப்பிடுகையில் மெதுவான வளர்ச்சியின் மத்தியிலும் குடித்தொகையின் புதிய சேர்ப்பானது அதி உயர் தொழில்வாய்ப்பின்மை, அதி உயர் குடித்தொகைச் செறிவு மற்றும் காணித் துண்டாக்கல் போன்ற பாரிய பிரச்சினைகளை உருவாக்கியுள்ளன. அடுத்த சில தசாப்தங்களில் தோன்றக்கூடிய குறிப்பிடத்தக்க பண்புகள் சிலவற்றை நீண்டகால குடித்தொகை எறிவுகள் குறித்துக்காட்டுகின்றன. அவையாவன முதிர்ச்சியடையும் குடித்தொகை, அதிகரித்துச் செல்லும் அண்டியிருத்தல் விகிதம், அடுத்த நூற்றாண்டின் முதலாவது தசாப்தத்தில் தொழிலாளர் சந்தை மட்டுப்படுத்தப்படக்கூடிய சாத்தியம் என்பனவாகும். இவற்றுள் முதிர்ச்சியடையும் குடித்தொகையும் அதனோடு சம்பந்தப்பட்ட பொருளாதார சமூக கொள்கை விடயங்களும் உடனடியாகக் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்களாகும்.

வாழ்வுக்கால எதிர்பார்ப்பின் மேம்பாட்டுடன் கருவுறல் வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியானது கடந்த சில தசாப்தங்களில் இளம் வயதுக் குழுவினரைவிட வயோதிப வயதுக் குழுவின் விரைந்த அதிகரிப்புக்கு இட்டுச் சென்றுள்ளது. வயோதிப அண்டியிருத்தல் விகிதம் 1946 இன் 5.9 சதவீதத்திலிருந்து 1997 இல் 7.4 சதவீதத்திற்கான கணிசமான அதிகரிப்பொன்றினைப் பிரதிபலிக்கின்றது. இந்த விகிதம் 2021 ஆம் ஆண்டில் 17.4 சதவீதத்திற்கு அதிகரிக்கும் என எறிவு செய்யப்பட்டுள்ளது.

**வரைபடம் 1.6**
**தொழிலற்றோர் வீதம்**




வயோதிப குடித்தொகையானது தொழிற்படை, கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களில் பலதரப்பட்ட மாறுபட்ட தாக்கங்களைக் கொண்டிருக்கும். முதியோரின் அடிப்படைத் தேவைகளை எதிர்கொள்ளுவதற்காக மேலதிக மூலவளங்கள் தேவைப்படும்.

தொழிற்படையில் நுழையும் இளைஞர்களின் எண்ணிக்கை 2020 ஆம் ஆண்டின்படி உச்சக் கட்டத்தை எய்தி அதன் பின்னர் குறைந்துவிடும். இதே வேளையில், எதிர்காலத்தில் தொழிற்படையின் வளர்ச்சி வீதம் கணிசமாக வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுவதுடன் 2010 ஆம் ஆண்டிலிருந்து உறுதியான பூச்சிய வளர்ச்சி வீதத்தை எய்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் விளைவாக, அடுத்த நூற்றாண்டின் முதலாவது தசாப்தத்தில் தொழிலாளர் பற்றாக்குறை தோன்றக்கூடும். தொழிலாளர் சந்தையின் இந்த மாற்றமும் தற்போது தொழிலில் ஈடுபடுத்தப்படாதுள்ள தொழிற்படையினரை உற்பத்தித் திறன் மிக்க தொழில்களில் ஈர்த்துக்கொள்ளப்பட வேண்டிய உடனடிப் பிரச்சினையும் அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கான பொருளாதாரக் கொள்கைகளின் வடிவமைப்பின் போது போதுமான அளவு கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயங்களாகும். தொழிற்படையில் தற்போது தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஆட்களுக்கு உற்பத்தித் திறன் வாய்ந்த தொழில்களை வழங்குவதற்கு பொருளாதாரத்துக்கு இயலச் செய்யும் பொருட்டு குறுகிய காலத்தில் குறிப்பாக தனியார் துறையில் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கான உடனடித் தேவை காணப்படுகின்றது. தொழிற்படையினை உற்பத்தித் திறன் மிக்கதாகவும் கைத்தொழிலின் தேவைப்பாடுகளுக்கு இசைந்ததாகவும் உருவாக்குவதற்காக வேண்டி கைத்தொழில் கொள்கைகளை நெகிழ்ச்சியுடையதாக்குவது தனியார் முதலீட்டை ஊக்குவிக்கக்கூடியதாக இருக்கும். விரைந்த பொருளாதார வளர்ச்சியுடன் புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்படலாம். உற்பத்தித் திறன் மிக்க முதலீடுகளின் மேலதிக அதிகரிப்புடன் வயோதிப குடித்தொகையின் அதாவது 60 வயதில் கட்டாய ஓய்வின் பின்னர் தொழில் புரியாத ஆட்களின் பாகமொன்றினைப் பொருளாதார நடவடிக்கைகளில் இன்னமும் சுறுசுறுப்பாக ஈடுபடுத்தப்படக் கூடியதாக இருக்கும். தொழில் நுட்ப அபிவிருத்திகளுடன் இசைந்து செல்லும் வகையில் புதிய தேர்ச்சிகளை ஊக்குவிப்பதற்காக கல்வி மற்றும் பயிற்சி முறைகளும் மீளமைக்கப்படல் வேண்டும்.

1990 களில் தொழில்வாய்ப்பின்மை வீதத்தில் படிப்படியாக மெதுவடையும் தன்மையொன்று அவதானிக்கப்பட்டது. முறைசாராத் துறையின் நடவடிக்கைகளின் விரிவாக்கம், கணனி, மின்னியல் தொடர்பு சாதனங்கள் மற்றும் நிதியியல் பணிகள் என்பனவற்றில் புதிய தொழில்வாய்ப்புக்களின் உருவாக்கம், வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்களுக்கான தொடர்ந்தும் பெருமளவில் குடியகல்வு என்பன தொழில் வாய்ப்பின்மையின் குறைப்புக்குப் பங்களிப்புச் செய்த முக்கிய காரணிகளாகும். எனினும் இளைஞர்களுக்கிடையே தொழில்வாய்ப்பின்மை இன்னமும் உயர்வாகவே காணப்படுகின்றது. பொருளாதாரத் துறைகள் சிலவற்றில் தொழிலாளர் பற்றாக்குறை காணப்படுகின்ற வேளையில் அதி உயர் தொழில் வாய்ப்பின்மையின் தொடர்ச்சியானது இலங்கையின் தொழிற் சந்தையில் காணப்படும் முக்கிய பண்பொன்றாக விளங்குகின்றது. எனவே எமக்கு முன்னால் உள்ள பாரிய அறைகூவல் என்னவெனில் பொருளாதாரத்தின் மாற்றமடைந்து வரும் தேவைகளுக்கேற்ப அதிகரித்து வரும் தொழிற்படையினைப் பொருத்தமான முறையில் பயிற்றுவித்து தொழில்வாய்ப்பின்மையினைக் குறைப்பதற்கு கல்வி முறையினை மீளமைத்தலாகும்.

## 1.7 அரசிறைக் கொள்கையும் வரவு செலவுத் திட்ட தொழிற்பாடும்

வலுவான இறை உறுதிப்பாட்டினை மேலும் முன்னேற்றமடையச் செய்யும் நோக்கில் 1997 இல் வரவு செலவுத் திட்ட கொள்கைகள் உருவாக்கப்பட்டன. தனியார் மயமாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தைத் தொடர்வதற்கான உறுதியான கடப்பாட்டுடன் அரசிறை முகாமைத்துவத்தில் காணப்படும் நலிவுகளை சரிப்படுத்துகின்ற வேளையில் 1997 அரசிறைப் பற்றாக்குறையினைக் குறைப்பதற்கான முக்கிய வலியுறுத்தல் காணப்பட்டது. இதன்படி பல மேம்பாடுகள் எதிர்பார்க்கப்பட்டன. அவையாவன அரச கணக்குகளைச் சீர்படுத்துதல், வரவு செலவுத் திட்டத்துக்கு வெளியேயான கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு முறைப்படுத்தல், நிதியியல் கட்டுப்பாடுகளையும் வகை கூறலையும் வலுப்படுத்தல் வீண்விரயம் மிக்க செலவுகளைக் குறைத்தல், ஊழல்களை இல்லாதொழித்தல், சமூக செலவுகளை உறுதிப்படுத்தல் என்பனவாகும். பணவீக்கமல்லா மூலதனங்களிலிருந்து வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறைக்கு நிதியிட எதிர்பார்க்கப்படுகின்றது. 1997 இல் கணிசமான பெறுபேறுகள் எய்தப்பெற்றன. செலவுகளின் அதிகரிப்பு கட்டுப்படுத்தப்பட்டதோடு தனியார் மயமாக்கல் நிகழ்ச்சித் திட்டம் வெற்றிகரமாக முன்னேறிச் சென்றது. கொடைகளும் தனியார் மயமாக்கல் பெறுகைகளும் நீங்கலாக திரண்ட அரசிறைப் பற்றாக்குறை 1996 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 9.4 சதவீதத்திலிருந்து 1997 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 7.9 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. மத்திய

சிறப்புக் குறிப்பு 1

## பணவீக்கத்திற்கும் தொழில்வாய்ப்பின்மைக்குமிடையிலான பரிமாற்றமும் அவலநிலை சுட்டெண்ணும்

கூலிப்பணவீக்க வீதத்திற்கும் தொழிலின்மை வீதத்திற்கும் இடையிலான பிரபல்யமாக அறியப் பட்ட 1 பிலிப்ஸ் வளைகோடு[1] ஏ.டபிள்யூ பிலிப்ஸ் (1914–1975) என்பவரினால் 1958 இல் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது.[1] கடந்த ஒரு நூற்றாண்டு பிரித்தானிய தரவுகளை ஆராய்ந்த அவர் இரு மாறிலிகளும் முறையான நேர் எதிர் உறவு முறையினைக் கொண்டுள்ளதென முடிவு செய்தார். வேறு வகைகளில் கூறுவதானால், கூலிப் பணவீக்கத்திற்கும் தொழில் வாய்ப்பின்மைக் குமிடையே பரிமாற்றம் ஒன்று காணப்படுகின்றது. 1960 இல் போல் சாமுவல்சன் மற்றும் றொபேட் சோலோ ஆகியவிரு அமெரிக்க பொருளியலாளர்கள் ஐ.அ. தரவுக்கும் நேர் எதிர் உறவு முறையினைக் கொண்டிருப்பதனைக் காட்டினார்கள். எனவே கொள்கை வகுப்போர் தமக்குத் தெளிவான இரு மாற்று இடைநிலை இலக்குகள் இருப்பதாக கருதினார்கள். அதாவது தொழில்வாய்ப்பின்மை வீதம் இலக்கிடப்பட்டால் பணவீகக வீதம் தானாகவே இலக்கிடப்படுவதனையும் அது நேரெதிரானதாகும் என்பதையும் உட்கிடையாகக் கொண்டுள்ளது.

காலப்போக்கில் பணவீக்கம் மற்றும் தொழில் வாய்ப்பின்மை என்பன தொடர்பாக பெருமளவு தரவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் 'பிலிப்ஸ் வளைகோட்டு' உறவுமுறை நீண்ட காலத்தில் சாத்தியமற்றது என 1970களின் முற்பகுதியில் பொருளியலாளர்கள் உயர்ந்தனர். பிரட்மன் என்பவரும் எட்மன்ட் பெல்ப் என்பவரும் (1969–1972) பணவீக்கத்திற்கும் தொழில் வாய்ப்பின்மைக்கு மிடையில் பரிமாற்றம் எதுவும் கிடையாது எனவும் கூலிகளினதும் விலைகளினதும் மாற்றமடையும் விதங்களை கருத்திற் கொள்ளாது பொருளாதாரமானது நீண்ட காலத்தில் 'இயற்கைத் தொழில் வாய்ப்பின்மை வீதமொன்றான' நீண்டகால முழுமையான தொழில் வாய்ப்பு சமனிலையை நோக்கி நகரும் என்ற மொழிவினை முன் வைத்தனர்.[2]

இலங்கையப் பொறுத்தவரையில் அக் கோட் பாடுகளின் பிரயோகமானது முக்கியமாக கவனத்திற் கொள்ளப்படவேண்டிய ஒரு விடயமாகும். எனினும் இக் கோட்பாட்டின் தங்குதடையற்ற பிரயோகமானது சில பிரச்சினைகளை எதிர் கொள்ளுகின்றது. இலங்கைப் பொருளாதாரத்தின் நீண்டகாலப் பேரண்டப் பொருளாதார போக்குகள் பல இன்னமும் முழுமையாக ஆராய்ந்து அறியப் படவில்லை. உதாரணமாக பொருளாதாரம் நீண்டகால சமனிலையை நோக்கி நகருகின்றதா அல்லது அதனை சுற்றி நகருகின்றதா என்பது இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை. பொருளாதாரத்தின் அமைப்புமுறை மாற்றங்களைத் தொடர்ந்து தொழிலாளர் சந்தையின் பங்கேற்பும் உள்ளடக்கமும் தயாரிப்பு மற்றும் பணிகள் துறைகளை நோக்கி மாற்றமடைந்து செல்லும் இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரத்திற்கு 'இயற்கை தொழில் வாய்ப்பின்மை வீதம்' என்ற எண்ணக்கரு பொருத்தமானதா என்பதும் தெளிவாகவில்லை.

எனினும் அடுத்த தசாப்தத்திற்கான தொழில்வாய்ப்பின்மை வீதத்தில் எதிர்பார்க்கப்படும் இலக்கினை கிட்டத்தட்ட 5–6 சதவீதத்தில் நிறுவலாம். · பொருளாதாரம் தாழ்ந்த தொழில் வாய்ப்பின்மை வீதத்தின் நீண்டகால சமநிலையை நோக்கி நகருவதுபோல் தோன்றுகின்றது. இந்தப் போக்கு நீடித்து நிலைத்திருப்பதற்கு மேலே குறிப்பிடப்பட்ட எஞ்சியிருக்கும் அமைப்பு ரீதியான தடைகளை இல்லாதொழிப்பது அவசியமானதாகும். பணவீக்கத்தைப் பொறுத்தமட்டில் விரும்பத்தக்க வீதத்தின் உச்ச மட்டமானது மாதத்துக்கு மாதம் 10 சதவீத ஆண்டுப் பணவீக்க வீதமாக இருக்க வேண்டும் என நாணய விதிச்சட்டம் குறித்துக் காட்டுகின்றது. அனைத்து பொருளாதாரங்களுக்கும் உகந்ததான ஒற்றைப்புள்ளி பணவீக்கம் தொடர்பான அனைத்து பொருளியலாளர்களின் எண்ணப்பாங்குடன் இது


1. ஐக்கிய இராச்சியத்தில் 1861–1957 பகுதியில் தொழிலின்மைக்கும் பணக்கூலிகளின் மாற்றமடையும் வீதத்திற்கும் இடையிலான உறவுமுறை ஏ.டபிள்யூ.பிலப்ஸ், எக்கயோ மிக்கா, நவெம்பர் 1958.
2. நாணயக் கொள்கையின் பங்கு மில்டன் பிராட்மன், அமெரிக்கன் எக்கேனாமிக் ரிவ்வ், மாசு 1969 மற்றும் பணவீக்கக் கொள்கையும் தொழில் வாய்ப்பின்மை கோட்பாடும் எட்மண்ட் பெல்ப்ஸ் 1972.

முரணற்றதாகக் காணப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் பணவீக்கத்திற்கான நடுத்தரகால இலக்கானது 4-5 சதவிதமாக இருத்தல் வேண்டும். உறவுமுறை தொடர்பான கோட்பாட்டு ரீதியிலான முடிவுக்கு மத்தியிலும் பெரும்பாலான நாடுகளின் அரசாங் கங்கள் தற்பொழுது ஓரளவு தாழ்ந்து தொழில் வாய்ப்பின்மை மற்றும் பணவீக்க வீதங்களை விரும்புகின்றன. இலங்கையின் தற்போதைய தொழில் வாய்ப்பின்மை மட்டமான 10-11 சதவீதத்தின் அடிப்படையில் பார்க்கும் பொழுது தாழ்வான பணவீக்கத்துடன் தாழ்வடைந்த தொழில்வாய்ப்பு மட்டத்தினை பேணுவது சாத்தியமானதாகக் காணப்படுகின்றது.

அட்டவணை 1 உம் வரைபடம் 1 உம் அடிக்கடி பெருமளவில் மாறுந்தன்மை கொண்ட பணவீக்க வீதத்தினையும் (கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டுச் சராசரி சதவீத மாற்றத்தினால் அளவிடப்படும்) ஒப்பீட்டு ரீதியில் அடிக்கடி குறைந்தளவில் மாறுந்தன்மை கொண்ட தொழில்வாய்ப்பின்மை வீதத்தினையும் (தொழிற்படையின் சதவீதமாக தொழில் வாய்ப்பற்ற ஆட்களினால் அளவிடப்படும்) காட்டுகின்றன. அறுபதுகளின் முற்பகுதியில் பணவீக்க வீதத்திற்கும் தொழில் வாய்ப்பின்மை வீதத்திற்குமிடையே பரிமாற்றம் இருந்துள்ளது போல் தோன்றுகின்றது. நிலையான செலாவணி வீத கொள்கை விலைக் கட்டுப்பாடுகளும் உதவிக் கொடுப்பனவுகளும் மற்றும் ஏனைய உள்நோக்கிய கொள்கைகள் போன்றவற்றின் நடைமுறைப்படுத்தலானது கட்டுப்படுத்தப்பட்ட பணவீக்கத்தினையும் உயர் தொழில் வாய்ப்பின்மையையும் ஏற்படுத்தியது. 1980 களின் முற்பகுதியின் பின் எதிரீடு முனைப்பாகத் தென்படவில்லை. 1990களின் முற்பகுதிக்கு பின்னரான காலப்பகுதியில் தொழில்வாய்ப்பின்மைக்கும் பணவீக்கத்திற்கும் இடையில் பரிமாற்றம் காணப்படவில்லை. உண்மையில் பரிமாற்றம் நேர்க்கணியமாகக் காணப்பட்டது. கடும் வரட்சியின் பெருமளவு தாக்கத்தின் காரணமாக பணவீக்கம் முனைப்பாக உயர்வடைந்து 1996ஆம் ஆண்டு நீங்கலான காலப்பகுதியில் வீழ்ச்சியடையும் பணவீக்கத்துடன் தொழில் வாய்ப்பின்மை வீதமும் வீழ்ச்சியடைந்து சென்றது. 1963-1997 காலப்பகுதிக்குப் பின்னடைவியக்க அரைக் கோலைப் பயன்படுத்தி மதிப்பிடப்பட்ட பொதுவான உறவுமுறை (அதி தூரத்தில் அமைந்துள்ள தரவுப் புள்ளிகள் மூன்று நீங்கலாக) குறிப்பிடத்தக்க நேர்மாற்று உறவு முறையொன்றைக் காட்டிநின்றது.

சில பொருளியலாளர்களினால் 'அவலநிலைச் சுட்டெண்' என வரைவிலக்கணம் செய்யப்படும் தொழில் வாய்ப்பின்மையினதும் பணவீக்கத்தினதும் மொத்தத்தொகை வரைபடம் 3இல் விளக்கப் பட்டுள்ளது. 'அவலநிலைச் சுட்டெண்ணானது' பொருளாதாரமொன்றில் காணப்படும் வறுமை நிலையினைக் காட்டும் ஒரு முழுமையான குறி காட்டியல்ல. ஆனால் அது மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பாதிக்கும் முக்கியவிரு பேரண்டப் பொருளாதார மாறிகளின் போக்குகளை சுருக்கமாக விளக்குகின்றது. உயர் வானதும் அதிகரித்துச் செல்வதுமான அவல நிலைச் சுட்டெண்ணானது பொருளாதாரமொன்று உயர் பணவீக்கத்தினால் அல்லது உயர் தொழில் வாய்ப்பின்மையினால் அல்லது அவையிரண்டினாலும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதனை எடுத்துக்காட்டும். இச் சுட்டெண்ணானது 1996 நீங்கலாக 1990இலிருந்து வீழ்ச்சியடைந்து செல்கின்றது.

**வரைபடம் 1**
**தொழில் வாய்ப்பின்மை வீதத்தினதும் பணவீக்க வீதத்தினதும் போக்கு**



11 JUN 2009

## அட்டவணை 1


### விலைச் சுட்டெண் (கொ.நு.வி.சு.) பணவீக்க வீதம், தொழில் வாய்ப்பின்மை வீதம் மற்றும் அவலநிலைச் சுட்டெண் 1963–1997

| ஆண்டு (1) | கொ.நு.வி.சு. (2) | பணவீக்க வீதம்(%) (3) | தொழில் வாய்ப்பின்மை வீதம்(%) (4) | அவல நிலைச் சுட்டெண (5)=(3)+(4) |
|---|---|---|---|---|
| 1963 | 108.8 | 2.4 | 16.6 | 19.0 |
| 1964 | 112.2 | 3.1 | 16.1 * | 19.7 |
| 1965 | 112.5 | 0.3 | 15.7 * | 16.9 |
| 1966 | 112.3 | -0.2 | 15.2 * | 16.4 |
| 1967 | 114.8 | 2.2 | 14.8 * | 18.8 |
| 1968 | 121.5 | 5.8 | 14.3 | 20.1 |
| 1969 | 130.5 | 7.4 | 15.8 * | 21.7 |
| 1970 | 138.2 | 5.9 | 17.2 * | 20.2 |
| 1971 | 141.9 | 2.7 | 18.7 | 21.4 |
| 1972 | 150.9 | 6.3 | 18.5 * | 25.0 |
| 1973 | 165.4 | 9.6 | 18.3 | 27.9 |
| 1974 | 185.8 | 12.3 | 19.0 * | 30.6 |
| 1975 | 198.3 | 6.7 | 19.7 | 26.4 |
| 1976 | 200.7 | 1.2 | 18.1 * | 20.9 |
| 1977 | 203.2 | 1.2 | 16.4 * | 20.9 |
| 1978 | 227.8 | 12.1 | 14.8 | 26.9 |
| 1979 | 252.3 | 10.8 | 15.8 * | 25.6 |
| 1980 | 318.2 | 26.1 | 16.9 * | 40.9 |
| 1981 | 375.4 | 18.0 | 17.9 | 35.9 |
| 1982 | 416.1 | 10.8 | 11.7 | 22.5 |
| 1983 | 474.2 | 14.0 | 12.5 * | 25.7 |
| 1984 | 553.1 | 16.6 | 13.3 * | 28.3 |
| 1985 | 561.2 | 1.5 | 14.1 | 15.6 |
| 1986 | 606.0 | 8.0 | 15.5 | 23.5 |
| 1987 | 652.8 | 7.7 | 15.5 * | 23.2 |
| 1988 | 744.1 | 14.0 | 15.6 * | 29.5 |
| 1989 | 830.2 | 11.6 | 15.8 * | 27.1 |
| 1990 | 1008.6 | 21.5 | 15.9 | 37.4 |
| 1991 | 1131.5 | 12.2 | 14.7 | 26.9 |
| 1992 | 1260.4 | 11.4 | 14.6 | 26.0 |
| 1993 | 1408.4 | 11.7 | 13.8 | 25.5 |
| 1994 | 1527.4 | 8.4 | 13.1 | 21.5 |
| 1995 | 1644.6 | 7.7 | 12.3 | 20.0 |
| 1996 | 1906.7 | 15.9 | 11.4 | 27.3 |
| 1997 | 2089.1 | 9.6 | 10.4 | 20.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

* தொழில்வாய்ப்பின்மை வீதங்கள் அடுத்தடுத்துள்ள தரவு புள்ளிகளுக்கிடையிலான சீரான போக்குகளைப் பயன்படுத்தி மதிப்பிடப்பட்டுள்ளது.


### வரைபடம் 2
**தொழில் வாய்ப்பின்மை வீதத்திற்கும் பணவீக்கத்திற்குகிடையிலான பரிமாற்றம்** [1]




[1] வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி தடித்த நேர்கோடு மதிப்பிடப் பட்டுள்ளது. மதிப்பிடப்பட்ட சமன்பாடு பின்வருமாறு: பணவீக்கம் = 40.9 -12.2 மடக்கை (தொழில்வாய்ப்பின்மை) (2.9) (-2.3)

இரு குணகங்களும் 2.5% மட்டத்தில் புறக்கணிக்கத் தகாததாகக் காணப்படுகின்றது.

### வரைபடம் 3
**அவல நிலைச் சுட்டெண்ணின் போக்கு (1963 - 1997)**




வங்கிக்கான அரச படுகடனின் பாரிய குறைப்பொன்றினை இது இயலச் செய்தது. இந்தப் பெறுபேறுகளுடன் இணைந்து 1997 இல் மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கையான நாணயக் கொள்கையானது உலகளாவிய மிகவும் உறுதியற்ற சூழல் ஒன்றில் நிதியியல் சந்தைகளை சார்பு ரீதியில் உறுதியாக வைத்திருப்பதற்கு உதவின. இந்தப் பெறுபேறுகளை மேலும் வலுப்படுத்தி பொருளாதார அபிவிருத்தியை விரைவுபடுத்தும் நோக்கில் சார்பு ரீதியில் சாதகமான பேரண்டப் பொருளாதார சூழல் ஒன்றில் 1998 வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது.

கொடைகளுக்கும் தனியார் மயமாக்கல் பெறுகைகளுக்கும் பின்னர் திரண்ட வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.5 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. 1996 இன் 7.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இது 3.3 சதவீத புள்ளிகளைக் கொண்ட குறைப்பாகும். வரவு செலவுத் திட்ட மூல இலக்குடன் ஒப்பிடுகையில் 1997 இன் திரண்ட பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.6 சதவீத குறைப்பினைக் கொண்டிருந்தது. இந்த மேம்பாடானது தனியார் மயமாக்கலிலிருந்து எதிர்பார்த்ததை விடக் கூடுத


லான பெறுகைகள் (ரூபா 22,535 மில்லியன்), வரியல்லா அரசிறையின் மேம்பட்ட சேகரிப்பு, உற்பத்தித் திறன் அற்றதும் காசு வீண்விரயம் மிக்க செலவுகளினதும் குறைநிரப்பு செலவுகளினதும் கடுமையான கட்டுப் பாடுகளுடனான மேம்பட்ட காசு முகாமைத்துவம் அதிக செலவினைக் கொண்ட படுகடன் தீர்ப்பனவு என்பனவற்றின் விளைவாகும். பன்னாட்டு விலைப் போக்குகளுடன் இணைந்து செல்லும் வகையில் கோதுமை மாவின் விலை கி.கி ஒன்று ரூபா 16.95 இலிருந்து ரூபா 18.95 இற்கு 12 சதவீதத்தினால் மேல்நோக்கித் திருத்தப்பட்டமையும் 1997 இல் நடைமுறைச் செலவின் குறைப்பிற்குப் பங்களிப்புச் செய்தது. எனினும், குறிப்பாக துறைமுக அபிவிருத்தி, வலு, சக்தி மற்றும் தொலைத் தொடர்புப் பணிகள் என்பன வற்றின் செயற்றிட்ட நடைமுறைப்படுத்தலின் தாமதங் களின் காரணமாக மூலதனச் செலவில் குறைப் பொன்று ஏற்பட்டதுடன் வெளி நாட்டு உதவியின் பயன்பாட்டினையும் பாதித்தது.

1997 இல் நடைமுறை மற்றும் மூலதனச் செலவினம் ஆகிய இரண்டும் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாகப் பார்க்கையில் வீழ்ச்சியடைந்தன. பாதுகாப்புச் செலவினம் 1995 இல் மொ. உ. உற்பத்தியின் 6.4 சதவீதமாக இருந்து 1996 இல் 5.8 சதவீதத்திற்கும், 1997 இல் மேலும் 5.1 சதவீதத்திற்கும், வீழ்ச்சியடைந்துள்ளமையானது மிகக் குறிப்பிடத் தக்கவொரு அம்சமாகும். 1997 இல் பாதுகாப்பு அல்லாத சம்பளங்களும் கூலிகளும் கூட மொ.உ. உற்பத்தியின் 3.3 சதவீதத்திலிருந்து 3.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

1997 இல் வெளிச் செலுத்தும் தாக்கத்தின் குறைப்பொன்றினைக் காட்டும் வகையில் பற்றாக் குறையினை நிதியிடுவதற்காக அரசாங்கத்தினால் உள்நாட்டு மூலவளங்களின் பாவனை கணிசமான அளவு குறைந்து காணப்பட்டது. ஐ அ டொலர் 50 மில்லியன் கொண்ட மாறுபடும் வீத பத்திரங்களின் பெறுகைகளும் அரசாங்கத்துக்குக் கிடைக்கத்தக்கதாக இருந்தது. செலவு மிக்க படுகட னின் தீர்ப்பனவுக்காகத் தனியார் மயமாக்கல் பெறுகைகளின் பாகமொன்று பயன்படுத்தப்பட்ட தோடு திறைசேரி உண்டியல்களின் நியதிச்சட்ட வரையறையை ரூபா 125 பில்லியனிலிருந்து ரூபா 115 பில்லியனுக்குக் குறைப்பதற்கான கட்டுப்பாடு ஒன்றும் காணப்பட்டது. தனியார் மயமாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் மேலதிக முன்னேற்றத்தையும் உரிமையகற்றலின் மூலம் பெறப்படும் தொகைக் கான பொதுப்படுகடன் தீர்ப்பனவுக்காகப் பயன்படுத் துவதற்கும் 1998 வரவு செலவுத் திட்டம் எதிர்பார்க்கப்படுகின்றது.

படுகடன் தீர்ப்பனவினைப் பிரதிபலிக்கும் வகையில் மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உடைமைகள் 1996 இறுதியின் ரூபா 17,100 மில்லியனிலிருந்து 1997 இறுதியில் ரூபா 7,222 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. தனியார் மயமாக்கல் பெறுகைகளின் பாகமொன்று மத்திய வங்கியில் சிறப்பு வைப்பு ஒன்றில் இடப்பட்டது. இதன் விளைவாக மத்திய வங்கியிலிருந்து அரசுக்கான தேறிய கொடுகடன் ரூபா 13,991 மில்லியனினால் குறைக்கப்பட்டது. எனினும் நியதி ஒதுக்குத் தேவைப்பாடு குறைக்கப்பட்டதைத்

**வரைபடம் 1.7**
**இறை பொது நோக்கு**



**அட்டவணை 1.4**

அரசிறைத் தொழிற்பாடுகளின் தொகுப்பு

(மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக)

| விடயம் | 1980 | 1985 | 1990 | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. அரசிறை | 19.6 | 22.3 | 21.1 | 19.7 | 19.0 | 20.4 | 19.0 | 18.4 |
| 2. செலவினமும் தேறிய கடன் வழங்கலும் | 41.8 | 34.0 | 31.0 | 28.1 | 29.0 | 30.0 | 27.8 | 23.8 |
| 2.1 நடைமுறைச் செலவினம் | 18.5 | 20.1 | 22.3 | 20.5 | 21.9 | 23.1 | 22.8 | 20.7 |
| 2.2.1 பாதுகாப்பு | 1.3 | 3.6 | 4.1 | 4.1 | 4.6 | 6.4 | 5.8 | 5.1 |
| 2.1.2 வட்டி | 3.4 | 4.6 | 6.4 | 6.0 | 6.6 | 5.7 | 6.4 | 6.2 |
| 2.1.3 கூலிகள்(அ) | 4.5 | 3.6 | 4.1 | 3.3 | 3.2 | 3.4 | 3.3 | 3.1 |
| 2.1.4 உதவுதொகைகளும் மாற்றல்களும் | 8.4 | 5.5 | 6.5 | 5.4 | 5.9 | 6.1 | 6.0 | 5.1 |
| 2.1.5 ஏனையவை | 0.9 | 2.8 | 1.1 | 1.6 | 1.7 | 1.5 | 1.3 | 1.2 |
| 2.2 மூலதனமும் தேறிய கடன்வழங்கலும் | 23.3 | 13.9 | 8.7 | 7.6 | 7.0 | 6.9 | 5.0 | 3.1 |
| 2.2.1 அரச முதலீடு | 18.5 | 13.7 | 8.3 | 8.0 | 7.0 | 7.9 | 6.0 | 5.8 |
| உண்மைச் சொத்துக்களின் கையேற்பு | 7.9 | 4.5 | 3.6 | 3.9 | 2.9 | 3.4 | 2.7 | 2.9 |
| மூலதன மாற்றல்கள் | 9.4 | 8.6 | 2.3 | 2.8 | 2.4 | 2.9 | 2.2 | 2.1 |
| கடன் வழங்கல் | 1.2 | 0.6 | 2.4 | 1.3 | 1.7 | 1.7 | 1.1 | 0.8 |
| 2.2.2 ஏனையவை | 4.7 | 0.2 | 0.4 | -0.4 | -0.0 | -1.0 | -0.9 | -2.7 |
| மீள் சந்தைப் படுத்தல் செலவு | 0.0 | 0.0 | 0.0 | 0.3 | 0.6 | 0.0 | 0.0 | 0.2 |
| தனியார் மயமாக்கல் | 0.0 | 0.0 | 0.0 | -0.2 | -0.5 | -0.4 | -0.6 | -2.5 |
| ஏனையவை | 4.7 | 0.2 | 0.4 | -0.4 | -0.1 | -1.0 | -0.3 | -0.4 |
| 3. நடைமுறைக் கணக்கு நிலுவை | 1.1 | 2.2 | -1.2 | -0.8 | -2.9 | -2.7 | -3.8 | -2.2 |
| 4. கொடைகளுக்கு முன் மற்றும் தனியார் மயமாக்கல் நீங்கலான திரண்ட பற்றாக்குறை | -22.2 | -11.7 | -9.9 | -8.7 | -10.5 | -10.1 | -9.4 | -7.9 |
| 5. கொடைகளுக்கு முன் மற்றும் தனியார் மயமாக்கல் உட்பட திரண்ட பற்றாக்குறை | -22.2 | -11.7 | -9.9 | -8.4 | -10.0 | -9.6 | -8.8 | -5.3 |
| 6. நிதியிடல் | 22.2 | 11.7 | 9.9 | 8.4 | 10.0 | 9.6 | 8.8 | 5.3 |
| 6.1 வெளிநாட்டு நிதியிடல் | 9.2 | 6.4 | 5.7 | 3.6 | 3.5 | 4.5 | 2.3 | 1.9 |
| 6.1.1 கடன்கள் | 5.3 | 4.4 | 3.6 | 2.0 | 2.0 | 3.2 | 1.3 | 1.1 |
| 6.1.2 கொடைகள் | 3.9 | 2.0 | 2.1 | 1.6 | 1.4 | 1.4 | 1.0 | 0.8 |
| 6.2 உள்நாட்டு நிதியிடல் | 13.0 | 5.3 | 4.2 | 4.9 | 6.5 | 5.1 | 6.5 | 3.4 |
| 6.2.1 வங்கிகள் | 9.8 | 2.9 | 0.1 | -1.2 | 0.2 | 1.1 | 1.7 | -0.2 |
| குறித்துரைக்கப்பட்டவை: மொத்த கூலிச் செலவு | 5.0 | 4.2 | 4.9 | 5.3 | 5.1 | 5.2 | 5.0 | 5.0 |

(அ) பாதுகாப்பு அலுவலர்களுக்குச் செலுத்தப்பட்டவை நீங்கலாக.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

தொடர்ந்து வர்த்தக வங்கிகளின் திறைசேரி உண்டியல் உடைமைகள் அதிகரித்தமையின் காரணமாக முழுமையான வங்கித்தொழில் முறையிலிருந்து அரசுக்கான தேறிய கொடுகடன் ரூபா 2,172 மில்லியனினால் வீழ்ச்சியடைந்தது. இதற்கு மேலதிகமாக அரசின் நிருவாகக் கடன்பாடுகளின் தொகை 1996 இன் ரூபா 6,654 மில்லியனிலிருந்து 1997 இல் ரூபா 4,584 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. 1998 வரவு செலவுத் திட்டம் (கொடைகளுக்கும் தனியார் மயப்படுத்தலுக்கும் முன்னர்) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 6.5 சதவீத திரண்ட பற்றாக்குறையொன்றினை இலக்கிட்டுள்ளது. 2000 ஆம் ஆண்டளவில் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4 சதவீதத்திற்குக் குறைக்கப்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

## 1.8 அரச தொழில் முயற்சிச் சீர்திருத்தங்கள்

அரச தொழில் முயற்சி சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டம் ரூ.22,535 மில்லியனை உருவாக்கி 1997 இன் அரச மொத்தப் பெறுகைகளில் 11.5 சதவீதத்திற்குப் பங்களித்தமையின் மூலம் பொதுப்படுகடனின் ஒரு பகுதியை நீக்கிவிடுவதற்கு அரசினை இயலச் செய்ததுடன் இதன் படுகடன் சொத்துப் பட்டியலையும் மீள அமைத்துக் கொண்டது. இவ் வட்டிச் செலவினைக் குறைக்க உதவியதெனினும் வட்டிச் செலவின் முழுமையான தாக்கமும் 1998 இலும் அதன் பின்னருமே உணரப்படும்.

அரச தொழில் முயற்சிகள் சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட முக்கியமானதொரு நடவடிக்கையாக வரையறுக்கப்பட்ட இலங்கை ரெலிக்கொம்மின் 35 சதவீதமான பங்குகள் யப்பானின் நிப்பன் டெலிகிராப் அன்ட் ரெலிபோன் கோப்பரேசனுக்கு ரூ.13,274 மில்லியனுக்கு (ஐ.அ.டொலர் 225 மில்லியன்) விற்பனை செய்யப்பட்டமை காணப்பட்டது. நிப்பன் டெலிகிராப்பிக் ரெலிபோனுடன் இணைந்து செய்யப்பட்ட முகாமைத்துவ ஒப்பந்தமானது இலங்கை ரெலிகொம்மின் தொழிற்பாட்டு வினைத் திறனை மேம்படுத்துவதனை நோக்கி எடுத்துவைக்கப்பட்ட இன்னொரு முக்கிய நடவடிக்கையாகும். அரசாங்கம் இலங்கை ரெலிகொம்மின் 3.5 சதவீதப்பங்குகளை அதன் ஊழியர்களுக்காக ஒதுக்கி வைத்தது.

அரசாங்கத்தினால் வைத்திருக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கியின் மாற்றத்தக்கத் தொகுதிக்

கடன்களின் விற்பனை ரூ.4,500 மில்லியனை உருவாக்கியது. இக் கொடுக்கல் வாங்கல் கொழும்பு பங்குச் சந்தையினூடாகச் செய்யப்பட்ட மிகப்பெரும் தனியொரு பொது வழங்கலாக விளங்கியது. 1993 இன் வரியில் அரசிற்கு வழங்கப்பட்ட ரூ.275 மில்லியன் தொகை கொண்ட தே.அ.வங்கியின் மாற்றத்தக்கத் தொகுதிக்கடன்கள் உரிமை மாற்றல் செய்யப்பட்டன. 1999,2000, 2001 ஆம் ஆண்டுகளில் முதிர்ச்சியடையவுள்ள மாற்றத்தக்க தொகுதிக் கடன்கள் ரூ.10 முகப்புப் பெறுமதியைக் கொண்ட 18.33 மில்லியன் சாதாரண பங்குகளுக்கு மாற்றப் பட்டதுடன் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையினூ டாகச் சந்தைக்கு விடப்பட்டன. உள்ளூர் சந்தை யினால் ஈர்க்கப்படுவதற்கு இவ் வழங்கல் மிகப் பெரிதாகஇருந்தமையினால் 16.5 மில்லியன் பங்குகள் வெளிநாடுகளுக்கு விடப்பட்ட வேளையில் 916,667 பங்குகள் உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கப் பட்டன. எஞ்சிய 916,666 பங்குகள் தேசிய அபிவிருத்தி வங்கியினால் அதன் ஊழியர் பங்குடைமைத் திட்டத் திற்காக கொள்வனவு செய்யப்பட்டன. பன்னாட்டு வழங்கலுக்கான விலை பங்கொன்றிற்கு ரூ. 260 ஆகவும் உள்நாட்டு வழங்கலுக்கான விலை பங்கொன்றிற்கு 250 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது.

ஏழு பெருந்தோட்டக் கம்பனிகள் (வரையறுக்கப் பட்ட நமுனுகுல பிளான்டேசன், வரையறுக்கப்பட்ட மதுரட்டை பிளான்டேசன், வரையறுக்கப்பட்ட மல்வத்தைவெலி பிளான்டேசன், வரையறுக்கப்பட்ட எல்பிட்டிய பிளான்டேசன், வரையறுக்கப்பட்ட தலவாக்கொல்லை பிளான்டேசன், மற்றும் வரையறுக்கப்பட்ட புசல்லாவ பிளான்டேசன்.) ஒவ்வொன்றினதும் 51 சதவீதமான பங்குகளை நீண்டகாலக் குத்தகையின் கீழ் உரிமை மாற்றல் செய்வது முற்றுப் பெற்றுவிட்டது. இவ்வாறு பெறப்பட்ட தொகைகள் ரூ. 2,914 மில்லியனாக விளங்கின. ஐந்து பிளான்டேசன் கம்பனிகளான வரையறுக்கப்பட்ட பொகவந்தலாவ பிளான்டேசன், வரையறுக்கப்பட்ட கேகாலைப் பிளான்டேசன், வரையறுக்கப்பட்ட அகலவத்தை பிளான்டேசன், வரையறுக்கப்பட்ட கொறண பிளான்டேசன் மற்றும் வரையறுக்கப்பட்ட களணிவலி பிளான்டேசன் ஒவ்வொன்றினதும் 19 சதவீதத்தினை உரிமை மாற்றல் செய்வதற்காக பொதுமக்களுக்கு பங்குகளை வழங்கியமை போன்று 1997 இல் அரசின் அரசிறைக்கு ரூ.635 மில்லியனை உதவியது.

வரையறுக்கப்பட்ட லங்கா சோல்ட் மற்றும் வரையறுக்கப்பட்ட புத்தளம் சோல்ட் என்பனவற் றின் 90 சதவீதமான பங்குகளின் விற்பனை மூலம் ரூ.575 மில்லியன் உருவாக்கப்பட்ட வேளையில் வரையறுக்கப்பட்ட லங்கா செராமிக்கின் 17.33 சதவீத மான பங்குகளை பொது மக்களுக்கு வழங்கியதன் மூலம் 1997 இல் ரூ.206 மில்லியன் பெறப்பட்டது.

வெற்றியளிக்காத தனியார் மயமாக்கப்பட்ட அரச தொழில் முயற்சியான வரையறுக்கப்பட்ட மத்தேகம புடவை ஆலை மீண்டும் அரசினால் பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்டு மீளமைக்கப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டது. இதன் முழுச் சொத்துடைமையும் வரையறுக்கப்பட்ட கபூல் லங்காவிற்கு ரூ.29.5 மில்லியனுக்கு விற்பனை செய்யப்பட்டதன் மூலம் மீள உரிமை மாற்றம் செய்யப்பட்டது.

## 1.9 அரசபடுகடனும் படுகடன் பணிக் கொடுப்பனவுகளும்

1997 இறுதியில் அரசபடுகடன் ரூ.758,714 மில்லியனாக விளங்கி 7 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. மொத்தப் படுகடன் / மொ.உ உற்பத்தி விற்பனை விகிதம் 1996இன் 92 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1997 இல் 85 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 1993 இற்குப் பின்னர் அவதானிக்கப்பட்ட சாதகமான போக்கு இதுவாகும். மொத்த அரசபடுகடனில் 50 சதவீதத் திற்கு மொத்த உள்நாட்டுப்படுகடன் வகைகூறியது.

திறைசேரி முறிகளின் வழங்கல் உரிய காலத்திற்கு முன்னரே முதிர்ச்சியடையும் விருப்பத் தேர்வினைக் கொண்ட ரூபாக் கடன்களின் வழங்கல் மற்றும் குறுங்கால படுகடன் மட்டத்தில் செய்யப் பட்ட குறைப்பு என்பனவற்றின் காரணமாக படுகடன் அதிகரிப்பு குறிப்பிடத்தக்களவிற்கு மேம்பட்டது. இதுபடுகடன் அமைப்பிற்கு கூடியள விற்கு நெகிழ்ச்சிப்படுத்தியதுடன் விளைவினைத் தீர்மானிப்பதும் கூடியளவிற்குச் சந்தை சார்ந்ததாக இருந்தது. மொத்த உள்நாட்டுப் படுகடனில் குறுங்காலப் படுகடனின் பங்கு 1996இன் 41 சதவீதத்திலிருந்து 1997 இல் 35 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. குறுங்காலப் படுகடனில் திறைசேரி உண்டியல்கள் 86 சதவீதத்திற்கு வகை கூறின. நடுத்தர, நீண்டகாலப் படுகடன் (நீண்டகால மீளமைப்பு முறிகள் உட்பட) 21 சதவீதத்தினால் அதிகரித்து 1997 இன் மொத்த உள்நாட்டுப் படுகடனில் 65 சதவீதத்திற்கு வகை கூறியது. திறைசேரி முறிகள் மொத்த வெளிநின்ற நடுத்தர, நீண்டகால படுகடனில் 4 சதவீதத்திற்கு வகை கூறின. படுகடன் தோற்றப்பாடு 1998 இல் முக்கிய மாக நடுத்தர நீண்டகால படுகடன் கருவிகளிலும்

சந்தைக்கு வழங்கப்பட்டு வருகின்ற பெருமளவான திறைசேரி முறிகள் காரணமாகும். 1998 இல் மேலும் மேம்பாடடையும் போல் தோன்றுவதுடன் திறைசேரி உண்டியல்கள் மேலெல்லை ரூ.115,000 மில்லியனில் உறையவைக்கப்பட்டது.

வெளிநின்ற வெளிநாட்டுப்படுகடன் 1997 இறுதியில் ரூ. 375,752 மில்லியனுக்கு 5 சதவீதத்தினால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பில் ரூ.1959 மில்லியன் செலாவணிவீத மாறுபாடுகளின் காரணமாக ஏற்பட்டதாகும். மொத்த வெளிநாட்டுப் படுகடன் இருப்பில் சலுகை ரீதியான படுகடனின் பங்கு 1997 இறுதியில் 96 சதவீதமாக இருந்தது.

அரசின் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் ரூ.92,519 மில்லியனுக்கு 14 சதவீதத்தினால் அதிகரித்தன. மொத்தப்படுகடன் பணிக் கொடுப்பனவில் வட்டிக் கூறு 60 சதவீதத்திற்கு வகை கூறியது. நடைமுறைச் செலவினத்தில் வட்டிக் கொடுப்பனவுகளும், 30 சதவீதத்திற்கு வகை கூறியதுடன் அரசின் அரசிறையில் 34 சதவீதத்தினை ஈர்த்துக் கொண்டன.

## 1.10 பன்னாட்டுச் சூழலும் வெளிநாட்டுத் துறை நிகழ்வுகளும்

### பன்னாட்டு பொருளாதாரச் சூழல்

மிக அண்மைய ஆண்டுகளில் பன்னாட்டுப் பொருளாதாரச் சூழலில் மிக குழப்பம் தரும் நிகழ்வொன்றினை இவ்வாண்டு எடுத்துக் காட்டியது. 1997 யூலையில் தோற்றம் பெற்ற கிழக்காசிய நாணய நெருக்கடி, ஆண்டின் இறுதி வரை தொடர்ந்து காணப்பட்டதுடன் உலகளாவிய பொருளாதாரத்தின் மீது பரந்தளவான பொருளாதார நிதியியல் சிக்கல்களை ஏற்படுத்தியிருந்தது. 1997 இல் உலகின் பொருளாதாரம் 1996 இன் அதே வீதமான 4.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இது ஆண்டின் தொடக்கத்தில் எதிர்பார்க்கப்பட்ட 4.3 சதவீதத்தினைவிட குறைவானதாகும். இதற்கு அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வளர்ச்சி வீதம் 1996 இன் 6.6 சதவீதத்திலிருந்து 1997 இல் 5.8 சதவீதத்திற்கு மெதுவடைந்தமையே காரணமாகும். மேலும் ஆசியாவின் 6.7 சதவீதமான மதிப்பிடப்பட்ட பொருளாதார வளர்ச்சி உலக வெளியீட்டு வளர்ச்சியின் முக்கிய ஆதாரமாகத் தொடர்ந்துமிருக்கும். ஐக்கிய நாடுகள், ஐக்கிய இராச்சியம், மற்றும் கனடாவில் காணப்பட்ட வலுவான பொருளாதாரங்கள் எஞ்சிய ஐரோப்பாவில் காணப்பட்ட மேம்பட்ட செயலாற்றம் மற்றும் மாறி வரும் நாடுகளின் மாற்றங்கள் என்பன உலகின் வெளியீட்டில் ஏற்பட்ட விரிவாக்கத்திற்கு அடித்தளமாக விளங்கின. யப்பானின் பொருளாதார வளர்ச்சி 3.9 சதவீதத்திலிருந்து 0.9 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமை ஆசிய நாடுகளில் புதிதாக கைத்தொழில் மயமாக்கப்பட்ட நாடுகளின் வளர்ச்சி 1996 இன் 6.4 சதவீதத்திலிருந்து 6.1 சதவீதத்திற்கு மெதுவடைந்தமை கிழக்காசிய நாடுகளின் (ஆசியான் - இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து ஆகியன) வளர்ச்சி 7.1 சதவீதத்திலிருந்து 3.9 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமை ஆகியன அவதானிக்கப்பட்டுள்ளன. விலை உறுதிப்பாட்டிற்கான அரசின் கடப்பாடுகள் குறைக்கப்பட்ட உலகளாவிய பணவீக்க அழுத்தங்களின் மூலம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

கிழக்காசியா குழப்ப நிலைமைகளுக்கு முன்னர் உலகளாவிய பேரண்டப் பொருளாதாரச் சூழல் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதாக இருந்தது. விலை உறுதிப்பாட்டிற்கான வலுவான கடப்பாடுகளின் காரணமாக உலகப் பணவீக்கம் சாதகமாக இருந்ததுடன் கடந்த கால் நூற்றாண்டு காலமாக மிகக் குறைந்த மட்டத்தில் காணப்படுகிறது. முன்னேற்றம் கண்ட பொருளாதாரத்தில் பணவீக்க வீதம் 1996 இன் 2.4 சதவீதத்திலிருந்து 2.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் பணவீக்க வீதம் 13.7 சதவீதத்திலிருந்து 8.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதே வேளை மாற்றத்திற்குட்பட்டு வரும் நாடுகளின் பணவீக்க வீதம் 41.1 சதவீதத்திலிருந்து 28 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியைப் பதிவு செய்தது. பல நாடுகளிலும் வட்டி வீதங்கள் வீழ்ச்சியடைய விடப்பட்டன. மறுபுறத்தில் உலக வர்த்தகம் முன்னைய ஆண்டின் 6.6 சதவீதம் கொண்ட வளர்ச்சிக்கு எதிராக 1997 இல் 9.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தமையானது முன்னேற்றம் கண்ட மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலிருந்து கிடைக்கும் முக்கியமான தூண்டுதலாகும்.

இவ்வாண்டில், அதிகரித்த வழங்கல் நிலைமைகளின் காரணமாக, முக்கிய பண்டங்களின் பன்னாட்டு விலைகள் வீழ்ச்சியடைந்தன. குறிப்பாக, உயர்ந்த வழங்கலின் விளைவாக எரிபொருட்களின் விலைகள் ஆண்டின் இறுதிப் பகுதியில் பெருமளவிற்கு வீழ்ச்சியடைந்தன. மேம்பட்ட உலக வழங்கல் நிலைமைகளின் காரணமாக சீனி, கோதுமை, மற்றும் அரிசியின் விலைகள் ஒவ்வொன்றும் இவ்வாண்டில் 14 சதவீதத்தினால்

வீழ்ச்சியடைந்தன. பன்னாட்டு இறப்பர் விலைகள் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தமைக்கு அதிகரித்த உலகளாவிய வழங்கலும் ஐக்கிய அமெரிக்காவினால் தாங்கிருப்பு விடுவிக்கப்பட்டமையுமே காரணமாகும். உலகின் இறப்பர் ஏற்றுமதிகளில் 85 சதவீதத்திற்கு மேற்பட்ட பங்கிற்கு வகைகூறும் கிழக்காசியாவில் ஏற்பட்ட நாணயக் குழப்பத்தின் விளைவாக ஆண்டின் இறுதிப்பகுதியில் இறப்பர் விலைகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. ஆண்டின் தொடக்கத்தில் அதிகரித்த தெங்கு உற்பத்திகளின் பன்னாட்டு விலைகள் ஆண்டின் இறுதிப் பகுதியில் வீழ்ச்சியடைந்தமைக்கு மேம்பட்ட வழங்கல் நிலைமைகளும் அதே போன்று தெங்கு உற்பத்திகளின் மிகப் பெரும் ஏற்றுமதியாளரான பிலிப்பைன்சின் மீது கிழக்காசிய நெருக்கடிகள் குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டிருந்தமையுமே காரணங்களாகும். மாறாக தேயிலையின் விலைகள் தொடர்ந்தும் ஆண்டு முழுவதும் செழிப்பான நிலையில் காணப்பட்டமைக்கு கென்யாவின் வரட்சி நிலைமை காரணமாக வழங்கல் குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும். மத்திய கிழக்கு மற்றும் சுதந்திர நாடுகளின் பொதுநலவாயம் என்பனவற்றிலிருந்தான வலுவான கேள்வி தேயிலை விலைகளுக்கு வலுவான தூண்டுதலை வழங்கியது.

செலாவணிச் சந்தையில் 1997 இல் ஏற்பட்ட மிகக் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் பாத்தின் மீதான ஊக அடிப்படையிலான தாக்கத்துடன் தாய்லாந்தில் தொடங்கின. ஐ.அ டொலருக்கு எதிராக பாத் ஏறத்தாழ 46 சதவீதத்தினால் தேய்வடைந்த வேளையில் இந்தோனேசிய றூப்பியாவும், கொரியாவின் வொன்னும் முறையே 57 சதவீதத்தினாலும் 50 சதவீதத்தினாலும் தேய்வடைந்தன. மலேசியாவின் ரின்ஜிட் மற்றும் பிலிப்பைன்சின் பெசோ என்பன ஐ.அ.டொலருக்கெதிராக ஒவ்வொன்றும் 35 சதவீதத்தினால் தேய்வடைந்தன.வலுவான பொருளாதாரச் செயலாற்றத்தின் காரணமாக பெரும்பாலான முக்கிய நாணயங்களுக்கு எதிராகவும் ஐ.அ.டொலர் வலுவடைந்தது. நிச்சயமற்ற நிதியியல் சந்தைகளும், பலயீனமான பொருளாதாரமும் டொலருக்கெதிராக யென் ஏறத்தாழ 11 சதவீதத்தினால் தேய்வடைய வழிவகுத்தன. டியூச் மார்க்கும் இவ்வாண்டில் திருத்தமொன்றைப் பிரதிபலித்தது. இந் நிகழ்வுகளின் பின்னணியில் 1997 இன் நடுப்பகுதியில் சார்புரீதியில் உயர்வாகக் காணப்பட்ட உலக சந்தையின் குறுங்கால வட்டி வீதங்கள் ஆண்டின் இறுதிப் பகுதியில் வீழ்ச்சியடைந்தன. அதே வேளை விலை உறுதிப்பாட்டினை பலப்படுத்துவதனை நோக்கிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான அரசின் கடப்பாடுகளின் காரணமாக நீண்டகால வட்டி வீதங்கள் தொடர்ந்தும் குறைவடைந்தன. எடுத்துக்காட்டாக 1997 மே இறுதியில் ஆண்டிற்கு 5.93 சதவீதமாகக் காணப்பட்ட இலண்டன் வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதம் ஆண்டின் இறுதியில் 5.84 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் 30 ஆண்டு திறைசேரி முறிகள் வீதம் 1996 திசெம்பரில் 6.30 சதவீதத்திலிருந்து 1997 திசெம்பரில் 5.81 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் குறிப்பாக வர்த்தகத்தினைத் தாராளமயப்படுத்தும் துறைகளில் அமைப்புச் சீர்திருத்தங்களையும் பேரண்டப் பொருளாதார விடயங்களைக் கட்டுப்படுத்துவதனையும் தொடர்ந்தும் மேற்கொண்டன. பன்னாட்டு நாணய நிதியம் கிழக்காசியாவின் நெருக்கடிகளை முகாமைப்படுத்துவதில் முனைப்பாக ஈடுபட்டுள்ளது. அத்துடன் அதன் திரவத் தன்மையை அதிகரிக்கும் நோக்குடன் அதன் அனுமதிப் பங்கினை அதிகரிக்க நடவடிக்கையை மேற்கொண்டதன் மூலம் அத்தகைய சீர்திருத்தங்களுக்கான நிதியிடல் ஒழுங்குகளுக்கு வசதி வழங்கப்பட்டது. மூலதனக் கணக்கு தாராளமயப்படுத்தல் மீதான வாதப்பிரதிவாதங்கள் 1997 இல் புதிய ஈடுபாடுகளைப் பெறத் தொடங்கின. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் ஒவ்வொன்றும் அந்தந்த நாடுகளின் சூழ்நிலைகளுக்கேற்ப மூலதனக் கணக்குகளை முறையாகவும் படிப்படியாகவும் தாராளமயப்படுத்துவதன் முக்கியத்துவத்தினை வலியுறுத்தின. நெருக்கடிக்குப் பின்னரான நிதியியல் உறுதிப்படுத்தலுக்கான செலவுகள் தனியார் கொடுகடன் வழங்குவோர் கடன் பெறுநர்கள், அரசாங்கங்கள் ஆகியோரிடையே சமமாக பங்கிடப்படல் வேண்டும் என்பதனையும் அவை வலியுறுத்துகின்றன. பன்னாட்டு நாணய நிதியம், நெருக்கடிகளுக்கு முன் ஆசிய நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு மூலதன உட்பாய்ச்சலின் சாதகமான பங்களிப்பினை முதன்மைப்படுத்திக் காட்டியவேளையில் மூலதனக் கணக்கு தாராளமயப்படுத்தலானது ஒழுங்கு முறையாகவும், பொருத்தமாகவும், தொடர்ச்சியாகவும் மேற் கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்தினையும் கொண்டிருந்தது.

மற்றைய நாடுகளின் மீது பரவிய நெருக்கடிகளின் தாக்கமானது உள்நாட்டு நாணயங்களின் பெறுமதியில் உடனடியாக ஏற்படும் மோசமான தன்மையின் பாதகமான தாக்கங்களுக்கெதிராக தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்வதற்கு முயற்சிக்கும் உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டாளர் இருவரினதும் மனப்பாங்கில் கடுமையான

மாற்றங்களைத் தோற்றுவித்தது.

பல முக்கிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் காரணிகள் கிழக்காசியாவில் நெருக்கடியினை உருவாக்கியதுடன் அதன் தொடர் பாதிப்புக்கள் பரந்து காணப்பட்டன. நெருக்கடிகளைத் தோற்றுவித்த உள்நாட்டுக் காரணிகளாக பெருமளவு வெளிநாட்டு நடைமுறைக்கணக்கு பற்றாக் குறைகளிலும் அதிகரித்துக் காட்டப்பட்ட சொத்து மற்றும் பங்கு சந்தை விலைகளிலும் பிரதிபலித்த மோசமடைந்துவரும் பொருளாதாரம் நீண்டகாலமாக செலாவணி வீதங்களைப் பேணியதன் காரணமாக செலாவணி வீதத்தின் மிகையான மதிப்பீடு, நிதியியல் மற்றும் கூட்டுத்துறைகள் இரண்டும் மிகையாக வெளிநாட்டுக்குக் காட்டப்பட்டது. பலயீனமான முகாமைத்துவம் மற்றும் இடர்க்கட்டுப்பாடுகள் போதுமானவையாக இல்லாமை என்பனவற்றின் காரணமாக நிதியியல் நிறுவனங்களின் கடன் சொத்துப் பட்டியலின் தரம் மிகக் கூடுதலாக மோசமடைந்தமை முன் மதியுடைய ஒழுங்கு விதிகளைத் தளர்வாக நடைமுறைப்படுத்தியமை, பலயீனமான மேற்பார்வை மற்றும் அரசினால் நெறிப்படுத்தப்பட்ட கடன்வழங்கல், வெளிப்படையான தன்மை குறைவாகக் காணப்பட்டமை மற்றும் அரசியல் உறுதிப்பாடு உள்ளிட்ட பொதுவான மற்றும் கூட்டு ஆளுமைப் பிரச்சனைகள் என்பன காணப்பட்டன. வெளிநாட்டுக் காரணிகளில் தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரத்துடன் இணைந்துள்ள இடர்ப்பாடுகளைக் குறைத்து மதிப்பிட்டு உயர்ந்த இலாபத்தினைத் தேடிப்பெறும் பன்னாட்டு முதலீட்டாளர்களின் பெருமளவு நிதிகளின் உட்பாய்ச்சல், முக்கிய நாணயங்களுக்கிடையேயான ஊசலாடும் பெருமளவு செலாவணி வீதம், ஏற்றுமதிகள் கணிசமாக மெதுவடைய வழிவகுத்த பன்னாட்டு போட்டித் தன்மையின் இழப்புகள் மற்றும் உடன் நிகழவுள்ள பாதுகாப்பு நெருக்கடிகளின் பின்னணியில் முன் ஒப்பந்தங்களின் ஊடாக அவர்களின் வெளிநாட்டு நெறிப்படுத்தல்களைப் பாதுகாத்துக்கொள்ள விரும்புகின்ற பாதுகாப்பு நிதியங்களின் நடத்தை என்பன விளங்கின.


1999 இன் ஆரம்பத்தில் இடம்பெறுவதற்கு அட்டவணை இடப்பட்டுள்ள ஐரோப்பிய பொருளாதார நாணய ஒன்றியத்தின் தோற்றமும் பன்னாட்டு நாணய அமைப்பு முறையில் பெரும் மாற்றங்களைத் தோற்றுவிக்கக்கூடும். அதேவேளை உலக வர்த்தக அமைப்பின் கீழான கலந்துரையாடலுக்காக உறுப்பு நாடுகளின் நிதியியல் பணி வர்த்தகத்தின் மீதான கடப்பாடுகளை சமர்ப்பிக்கும் காலம் ஆண்டின் இறுதியில் காலாவதியாகியது. 1997 இல் இலங்கை நிதியியல் பணிகள்மீதான அதன் முனைவுகளையும் சமர்ப்பித்தது.(சிறப்புக் குறிப்பு 9)

## வெளிநாட்டுத் துறை நிகழ்வுகள்

1997 இல் சென்மதி நிலுவை நிலைமை குறிப்பிடத்தக்க அளவில் மேம்பாடடைந்து, ஏற்றுமதிகள், பணிப்பெறுகைகள், தனியார் மாற்றல்கள் என்பன அதிகரித்தமையையும் உயர்ந்த மூலதன உட்பாய்ச்சல்களையும் முக்கியமாகப் பிரதிபலித்தது. ஏற்றுமதிகள், இறக்குமதிகளிலும் பார்க்க விரைவாக வளர்ச்சியடைந்தமையின் காரணமாக வர்த்தகப் பற்றாக்குறை குறிப்பிடத்தக்க அளவிற்கு குறுக்கமடைந்தது. பணிகள் கணக்கு பெருமளவு மிகையைப் பதிவு செய்தமைக்கு சுற்றுலா மற்றும் துறைமுகப் பணிகள் வளர்ச்சி கண்டமையே முக்கிய காரணமாகும். முதலீட்டு வருமானத்தின் பேரிலான தேறிய வெளிப்பாய்ச்சல் வீழ்ச்சியடைந்தமைக்கு அதிகரித்த வட்டி வருவாய்களே காரணமாகும். தனியார் மயமாக்கல் பெறுகைகள் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் ஆகிய இருநியதிகளிலும் ஏற்பட்ட உயர்ந்த மூலதன உட்பாய்ச்சல்கள் முதலீட்டாளர்களின் நம்பிக்கை மேம்பாடடைந்துள்ளமையைப் பிரதிபலிக்கின்றன. குறைந்த வர்த்தகப் பற்றாக்குறை குறிப்பிடத்தக்களவிற்குக் குறைவான நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை, திரண்ட நிலுவையில் காணப்பட்ட வரவேற்கத்தக்க மிகை, மற்றும் சார்பு ரீதியில் உறுதியான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை என்பன 1997 இன் வெளிநாட்டுத்துறை நிகழ்வுகளில் முக்கிய விடயங்களாக இருந்தன.

வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரை முகாமைப்படுத்தப்படும் மிதக்கும் செலாவணி வீத அமைப்பொன்று பேணப்பட்டதன் மூலம் மத்திய வங்கியின் வாங்கும் விற்கும் வீதங்களுக்கிடையே 2 சதவீத பிரிவில் நாணயங்கள் அசைவதற்கு அனுமதிக்கப்பட்டதுடன் செலாவணி வீதத்தில் ஏற்படும் ஒழுங்கற்ற அசைவுகளை மிகவும் குறைப்பதற்கான தேவையும் படிப்படியாக மனங்கொள்ளப்பட்டது. ஆண்டுச் சராசரி கணக்கில் பயன்தரு செலாவணி வீதம் 1997 இல் சில உயர்வுகளைக் காட்டி, 1977 இன் பின்னரைப் பகுதியில் கிழக்காசியாவின் நாணயங்கள் கடுமையாகத் தேய்வடைந்தமையைப் பிரதிபலித்தன. குறிப்பாக, கிழக்காசிய நாணயங்களில் பெருமளவு தேய்வின் காரணமாக ஏற்பட்ட பணவீக்கத் தாக்கம் மற்றும் கிழக்காசிய நாடுகளில் எதிர்நோக்கப்பட்ட கொடுகடன் பற்றாக்குறைப் பிரச்சினை என்பன


**வரைபடம் 1.8**
**தெரிந்தெடுக்கப்பட்ட வெளிநாட்டுத்துறைக் குறிகாட்டிகள்**




வற்றைக் கவனத்திற் கொள்கையில் இக்குறிகாட்டி மாத்திரம் இலங்கையின் உற்பத்திப் பொருட்களினது வெளிநாட்டுப் போட்டி தொடர்பான பூரணமான தோற்றப்பாட்டினைத் தரமுடியாது. எனினும், இந்நாடுகளில் சில குறைந்த உண்மைக் கூலிகளுடனும் கட்டுப்படுத்தப்பட்ட பணவீக்க அழுத்தங்களுடனும் தம் நிலையைச் சீர்படுத்திக்கொள்ளலாம் போல் தோன்றுவதனால் கிழக்காசிய நாணயம் மற்றும் நிதியியல் சந்தைகளின் நெருக்கடி என்பனவற்றின் பாதகமான தாக்கங்களை முழுமையாகப் புறந்தள்ளி விடமுடியாது. இச்செயல் முறை அது முழுமையாகச் செயற்பட இன்னும் சில காலம் எடுக்கும் அதேவேளையில், ஏற்றுமதிகளுக்கான கேள்வி ஓரளவிற்குச் சுருக்கமடையும் போல் தோன்றுவதற்கு அவர்களது உண்ணாட்டுக் கேள்வியும் அதேபோன்று உண்மை வருமானங்களில் ஏற்பட்ட மெதுவான வளர்ச்சியின் காரணமாக ஏனைய நாடுகளிலிருந்தான கேள்வியும் குறைவடைந்தமையும் காரணமாக இருந்தன. இது ஏற்றுமதிகளின் அளவிலும் அலகொன்றிற்கான விலையிலும் பிரதிபலிக்கக்கூடும்.

கடினமான நிலைமைகளுக்கிடையிலும் முன்னைய ஆண்டில் மீட்சியை எடுத்துக்காட்டிய வெளிநாட்டுத்துறை, பொருளாதாரத்தில் ஏற்பட்ட விரைவான மீட்சியின் காரணமாக 1997 இல் வலுவடைந்தது. ஏற்றுமதி 13 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் இறக்குமதிகள் 8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. இதன் விளைவாக வர்த்தகப் பற்றாக்குறை தொடர்ந்து மூன்றாவதாண்டாக 1996 இன் மொத்த உண்ணாட்டு உற்பத்தியின் 10சதவீதத்திலிருந்து 1997 இல் 8 சதவீதத்திற்குக் குறுகியது. தேறிய பணிப்பெறுகைகள் 51 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு சுற்றுலாக் கைத்தொழில் வலுவாக மீட்சியடைந்தமையும் துறைமுகப் பணிகளுடன் தொடர்புபட்ட நடவடிக்

கைகள் விரிவடைந்தமையுமே காரணிகளாகும். வெளிநாட்டில் முதலீடு செய்யப்பட்ட வெளிநாட்டுச் சொத்துக்கள் தொடர்பாகக் கிடைத்த வட்டி வருமானங்களின் பேரிலான உயர்ந்த வெளிப்பாய்ச்சல்கள் காணப்பட்டதனால் தேறிய காரணி வருமான வெளிப்பாய்ச்சல் ஐ அ டொலர் 38 மில்லியனால் வீழ்ச்சியடைந்தது. தேறிய தனியார் மாற்றல்கள் 11 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு 1990 இன் வளைகுடாப் போரினால் குவைத்திலிருந்து இடம்பெயர்ந்த இலங்கைத் தொழிலாளர்களுக்குச் செலுத்தப்பட்ட இழப்பீட்டின் பேரிலான உயர்ந்த பெறுகைகளே காரணமாகும். சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 1996 இன் 4.9 சதவீதத்திலிருந்து அல்லது ஐ அ டொலர் 683 மில்லியன் டொலர்களிலிருந்து 1997 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.5 சதவீதத்துக்கு அல்லது ஐ அ டொலர் 387 மில்லியனுக்குத் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாகத் தொடர்ச்சியான வீழ்ச்சிப் போக்கினைக் கொண்டிருந்தது.




**வரைபடம் 1.9**
**நாளாந்தச் செலாவணி வீதம்**

தேறிய நீண்டகால தனியார் மூலதன உட்பாய்ச்சல்கள் ஐ அ டொலர் 123 மில்லியனிலிருந்து ஐ அ டொலர் 491 மில்லியனுக்குக் கணிசமாக அதிகரித்தமைக்குத் தனியார் மயமாக்கல் பெறுகைகளே காரணமாகும். தேசிய அபிவிருத்தி வங்கியினால் அதன் கடன் வழங்கல் நடவடிக்கைகளுக்காகப் பெறப்பட்ட வெளிநாட்டு நிதிகள் தேசிய அபிவிருத்தி வங்கி பங்குகளின் வெளிநாட்டு விற்பனைகள், இலங்கை ரெலிகொம்மின் ஐ அ டொலர் 376 மில்லியன் பெறுமதியான 35 சதவீதமான பங்குகளின் விற்பனை என்பவை 1997 இல் நாட்டிற்குள் உள் பாய்ந்த வெளிநாட்டு தனியார் மூலதனத்தின் முக்கிய மூலங்களாக இருந்தன. தனியார் துறையின் குறுங்கால வர்த்தகக் கொடுகடன்களில் அதிகரிப்புக் காணப்பட்ட போதிலும் குறுங்காலப் பொறுப்புகள் வீழ்ச்சியடைந்தமைக்கு, வீழ்ச்சியடைந்து செல்லும் உள்நாட்டு வட்டி வீதங்களின் பின்னணியில் வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். 15 ஆண்டுகளுக்குப் பின்னர் பன்னாட்டு மூலதனச் சந்தையில் மாறுபடும் வீதத் தாள்களின் மூலமாக அரசாங்கம் ஐ அ டொலர் 50 மில்லியனை வெற்றிகரமாகத் திரட்டியது. எனினும் இவ்வாண்டில் தேறிய அலுவல்சார் மூலதன உட்பாய்ச்சல் ஏறத்தாள 35 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு வெளிநாட்டு உதவிகள் சிறப்பாகப் பயன்படுத்தப்படாமையே காரணமாகும். தேறிய மூலதன மாற்றல்களும் 29 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு செயற்றிட்டக் கொடைகள் குறைக்கப்பட்டமையே காரணமாகும். சென்மதி நிலுவைக் கையேடு 5 இன்படி 1997 இல் சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவை ஐ அ டொலர் 163 மில்லியன் கொண்ட ஆரோக்கியமான மிகையைப் பதிவு செய்தது. மொத்த அலுவல்கள் வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ அ டொலர் 2,029 மில்லியன்களாக விளங்கி, 1996 இறுதியில் 4.0 மாத இறக்குமதிகளை நிதியிடப் போதுமானதாக இருந்த நிலைமையுடன் ஒப்பிடுகையில் 1998க்காகத் திட்டமிடப்பட்ட 3.9 மாத இறக்குமதிகளை நிதியிடப் போதுமானவையாகக் காணப்பட்டன. அதே வேளை வர்த்தக வங்கிகளையும் உள்ளடக்கிய மொத்தச் சொத்துக்கள் 1996 இறுதியின் 5.0 மாத இறக்குமதிகளை நிதியிடப் போதுமானதான அளவிலிருந்து 5.4 மாத இறக்குமதிகளை நிதியிடுவதற்கு போதுமான அளவுக்கு அதிகரித்தது.

## 1.11 நிதியியல்துறை

1997இன் நாணயக் கொள்கை நடத்தையில் இரு முக்கிய அறைகூவல்கள் காணப்பட்டன. முதலாவது, வீழ்ச்சியடைந்து செல்லும் பணவீக்கப் போக்குக்கு இடையூறு இல்லாத விதத்தில் மீட்சியடைந்துவரும் பொருளாதார செயல்முறைக்கு ஆதரவளிக்க வேண்டியிருந்ததும் பணச்சந்தைக்கும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்குமிடையில் பொருத்தமான சமநிலையைப் பேணியமையுமாகும். இரண்டாவது, கிழக்காசிய நாணயக் குழப்பங்களின் பின்னணியில் உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக ஊக அடிப்படையிலான தாக்கத்திற்கு எதிராக உள்நாட்டு நிதியியல் அமைப்பினைப் பாதுகாக்க வேண்டியிருந்தமை யாகும். இதன்படி வட்டி வீதங்களில் ஒழுங்கு முறையான குறைப்புக்களுக்கு உதவுவதற்காக ஆண்டின் தொடக்கத்தில் நாணயக் கொள்கையின் இறுக்கத்தில்

சில தளர்த்தல்களும் உள்நாட்டு நிதியியல் சந்தைகளின் உறுதிப்பாட்டினைப் பாதுகாப்பதற்காக ஆண்டின் இறுதியில் சிறிதளவான இறுக்கமான தன்மையும் காணப்பட்டன.

1996 இன் இறுதியில், வரட்சியின் காரணமாக ஏற்பட்ட பின்னடைவிலிருந்து பொருளாதாரம் படிப்படியாக மீட்சியடைந்தது. பொருளாதார நடவடிக்கைகள் மீட்சியடைந்தமையின் காரணமாக நாணய விரிவாக்க வீதம் வீழ்ச்சியடைந்து பணவீக்கத் தாக்கம் தணிக்கப்பட்டது. இறை முகாமைத்துவம் மேம்பட்டதன் விளைவாக வங்கித் தொழில் முறையிலிருந்தான அரசின் கடன்பாடுகள் குறைக்கப்பட்டதுடன் பற்றாக்குறையும் குறைக்கப் பட்டது. எனினும் தனியார்துறைக்கான கொடுகடன் வளர்ச்சி மெதுவாக இருந்ததுடன் சில திரவத் தன்மைத் தடைகள் சந்தையில் காணப்பட்டன.

நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகள் குறைக்கப் பட்டதன் மூலமாக 1997 இன் ஆரம்பத்தில் நாணயக் கொள்கையின் இறுக்கம் ஓரளவு தளர்த்தப் பட்டன. வர்த்தக வங்கிகளின் ரூபா வைப்புப் பொறுப்புக்களின் மீதான நியதி ஒதுக்குத் தேவைப்பாடு 1997 சனவரியில் 15 சதவீதத்திலிருந்து 14 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது. வெளிநாட்டில் வைத்திருக்கப்பட்ட வெளிநாட்டு நாணய வைப்புக் கள் மீது 5 சதவீதமாக இருந்த நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகள் நீக்கப்பட்ட வேளையில் உள் நாட்டில் கடனாக வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீது பேணப்பட்ட நியதி ஒதுக்கு தேவைப்பாடு 15 சதவீதமாக இருந்தது. இதனைத் தொடர்ந்துமாச்சு 1997இல் வெளிநாட்டில் வைத்திருக்கப்படும் வெளிநாட்டு நாணய வைப்பு க்கள் நீங்கலாக அனைத்து வைப்புப் பொறுப்புக்கள் மீதுமான நியதி ஒதுக்குத் தேவைப்பாடு 12 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. வெளிநாட்டில் வைத்திருக்கப்பட்ட வெளிநாட்டு நாணய வைப்பு க்கள் மீதான நியதி ஒதுக்குத் தேவைப்பாடு பூச்சியமட்டத்தில் பேணப்பட்டது.

1997 வரவு செலவுத் திட்டத்தில் செய்யப்பட்ட அறிவிப்பைத் தொடர்ந்து வர்த்தக வங்கிகள் அவற்றின் உள்நாட்டு பிரிவுகளிலிருந்தோ அல்லது அவற்றின் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் அலகுகளிலிருந்து முதலீட்டுச் சபையல்லா ஏற்றுமதியாளர்களுக்கு வெளிநாட்டு நாணயக் கடன்களை வழங்க அனுமதிக்கப்பட்டன. இதுவும் வெளிநாட்டு மூலதனக் கணக்கில் செய்யப்பட்ட மேலுமொரு தாராளமயப்படுத்தலாகக் கருதப் பட்டது. எனினும் இவ்வசதியை வழங்குகையில் வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுப் பொறுப்புக்கள் மீது மூலதன நிதியத்தில் 15 சதவீதங்கொண்ட குறிப்பிட்ட வரையறைகளை ஏற்படுத்துவதன் மூலமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இக் கடன்களை மீளச் செலுத்துவதற்கு உள்நாட்டு நாணயத்தினை மாற்றல் செய்வது அனுமதிக்கப்படாததுடன் கடன் பாட்டாளர்கள் வெளிநாட்டு நாணயங்களில் மட்டுமே மீளச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

மத்திய வங்கி வசமிருந்த ஏறத்தாழ ரூ.8,000 மில்லியன் கொண்ட ஒதுக்குப் பணத்தினை வர்த்தக வங்கிகளுக்கு விடுவிப்பதன் மூலமாக வங்கி முறைக்கு திரவத் தன்மையை உடனடியாக வழங்குவதற்காகவே நியதி ஒதுக்குத் தேவைப் பாட்டில் குறைப்புக்கள் வடிவமைக்கப்பட்டன. இதன் விளைவாகப் பணப் பெருக்கியில் ஏற்பட்ட அதிகரிப்பு வர்த்தக வங்கிகள் அவற்றின் கொடுகடன் வழங்கல் மட்டத்தினை பெரும்பாலும் ஏறத்தாழ ரூ.20,000 – ரூ. 25,000 மில்லியனுக்கு உயர்த்தக் கூடியளவிற்கு உள்ளார்ந்த வளத்தினை உருவாக்கி தனியார்துறைக்கான கொடுகடனை உந்துவதற்கு உதவியதுடன் பொருளாதாரம் மீட்சியடைவதற்கும் அனுசரணையாக விளங்கியது. அதனுடன் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டில் செய்யப்பட்ட குறைப்பு வர்த்தக வங்கிகளின் நிதிகளின் உண்மையான செலவினைக் குறைப்பதன் மூலமாக அவற்றின் கடன் வழங்கல் வீதங்களைக் குறைப்பதற்கு அவர்களை இயலச் செய்யும் இவ்வழி முறை நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்து வதில் கூடியளவு சந்தை சார்ந்த கருவிகளை பயன்படுத்துவதற்கு நேரடிக் கட்டுப்பாடுகளைப் பயன்படுத்துவதிலிருந்தும் விலகியிருக்கும் மத்தியவங்கியின் நடவடிக்கையில் மேலும் ஒரு முன்னேற்றத்தினையும் எடுத்துக் காட்டுகிறது. முதலீட்டுச் சபையல்லா ஏற்றுமதியாளர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கடன்களின் வழங்கல் சந்தையில் திரவத் தன்மையினை அதிகரிப்பதற்கும் சார்புரீதியில் குறைந்த வீதங்களில் கொடுகடன்களை பெற்றுக் கொள்வதற்கு அவர்களை இயலச் செய்வதற்குமாக வடிவமைக்கப்பட்டதாகும்.

நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகள் குறைக்கப் பட்டதன் மூலமாக விடுவிக்கப்பட்ட நிதிகள், மத்திய வங்கியின் இரண்டாந்தர சந்தைகளிலிருந்தான கொள்வனவுகள் மூலமாக ஆரம்பத்தில் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டன. இந்நிதி வர்த்தக வங்கிகளின் கொடுகடன் தொழிற்பாடுகளு க்குள்ளேயே மீண்டும் சென்றடைந்தது. வர்த்தக வங்கிகளும் அவர்களின் நிதிச் செலவின் மீது

நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகளில் செய்யப்பட்ட குறைப்பின் தாக்கத்தினை பிரதிபலிக்கும் விதத்தில் அவர்களது பல கடன் திட்டங்களின் மீதான கடன் வழங்கல் வீதங்களைக் குறைத்துவிட்டன. எனினும் பல பொருளியலாளர்களினாலும் அவதானிக்கப் பட்டவாறு நியதி ஒதுக்கத் தேவைப்பாட்டின் அதிகரிப்புக்கள் கொடுகடனில் குறைப்பினை ஏற்படுத்துகின்ற வேளையில் மிகைத் திரவத் தன்மை காணப்படாதிருக்குமாயின் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டில் செய்யப்படும் குறைப்புக்கள், கொடுகடனுக்கான மேலதிக கேள்விகள் இருந்தாலொழிய கொடுகடனில் தொடர்பான அதிகரிப்புக்கள் ஏற்படுவதற்குத் தேவையான முறையில் வழிவகுக்காது. எனவே கடன் பெறுநர்கள் மற்றும் கடன் வழங்குநர்கள் ஆகிய இருவரும் மிகக் கவனமாக நடந்து கொள்ளுவதன் காரணமாக, நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகள் குறைக்கப்பட்டதன் விளைவாக அடையப்பட்ட கொடுகடன் விரிவாக்கம் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க மெதுவாகவே இருந்தது. வங்கித் தொழில் முறைக்குள் வெளிநாட்டு நிதிகள் உட்பாய்வதனால் ஏற்படுகின்ற மேலதிகத் திரவத் தன்மையுடன் சேர்ந்து, இது வர்த்தக வங்கிகள் அரச பிணைகளைக் கொண்ட தமது சொத்துப் பட்டியலை அதிகரிக்கத் தொடங்கும் ஒரு நிலைமைக்கு வழிவகுத்ததுடன் வைப்புக்கள் மீது வழங்கப்பட்ட குறைவடைந்த வீதங்கள் திறைசேரி உண்டியல்களின் ஏலங்களில் குறைந்த வட்டி வீதங்களைத் தோற்றுவித்தன. பொதுவாக இதே காலப்பகுதியில் சராசரி நிறையேற்றப்பட்ட கடன் வழங்கல் வீதங்கள் 21.0 சதவீதத்திலிருந்து 20.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமையுடன் ஒப்பிடுகையில் 1996 திசெம்பரில் சராசரி நிறையேற்றப் பட்ட வைப்பு வீதங்கள் 1996 திசெம்பரின் 12.3 சதவீதத்திலிருந்து 1997 திசெம்பரில் 10.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமையின் மூலம் எடுத்துக் காட்டப்பட்டவாறு வைப்பு வீதங்களின் குறைப்பு கடன் வழங்கல் வீதங்களின் குறைப்பினை விஞ்சிக் காணப்பட்டன. எனினும் இதே காலப்பகுதியில் சராசரி கடன் வழங்கல் வீதங்கள் 18.4 சதவீதத்திலிருந்து 14.2 சதவீதத்திற்கு விரைவாக வீழ்ச்சியடைந்ததெனினும் முதன்மைக் கடன் வழங்கல் வீதத்தில் வழங்கப்பட்ட கடனின் அளவு சார்பு ரீதியில் சிறிதாக இருந்தது.

அரசின் தனியார் மயமாக்கல் முயற்சிகளிலிருந்தான பெறுகைகள், அபிவிருத்தி நிதி நிறுவனங்களினால் திரட்டப்பட்ட வெளிநாட்டு நிதிகள், மற்றும் குவைத் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பன்னாட்டு இழப்பீடு என்பனவற்றினூடாக பெறப்பட்ட வெளிநாட்டுச் சொத்துக்களின் குறிப்பிடத்தக்க உட்பாய்ச்சல் காணப்பட்டது. இவ்வுட்பாய்ச்சல்கள் முறையிலுள்ள திரவத் தன்மையினை அதிகரித்ததுடன் வட்டி வீதங்கள் மேலும் குறைவடைய வழிவகுத்தன. ஆகவே 1997 இன் இரண்டாவது மூன்றாவது காலாண்டுகளில் நாணயக் கொள்கை வட்டி வீதங்களில் ஒரு ஒழுங்கான முறையை உறுதிப்படுத்தும் விதத்தில் நெறிப்படுத்தப்பட்டது. இந் நோக்கில் மிகையான திரவத் தன்மையை உறிஞ்சிக் கொள்வதற்காக மத்திய வங்கி திறந்த சந்தைத் தொழிற்பாடுகளில் ஈடுபட்டிருந்தது. மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உடமைகள் அகற்றப்பட்ட பொழுது வங்கி அதன் சொந்தப் பிணைகளை திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்காக வழங்கியது. 1994 ஆம் ஆண்டிற்குப் பின் வங்கி அதன் சொந்தப் பிணைகளை வழங்கியமை இதுவே முதற் தடவையாகும். குறைந்த மற்றும் குறுங்கால வீதங்களை உறுதிப்படுத்துவதற்காக 7 நாட்கள் மற்றும் 28 நாட்கள் முதிர்ச்சியைக் கொண்ட குறுங்கால மத்திய வங்கிப் பிணைகள் வழங்கப் பட்டன. தனியார் மயமாக்கல் பெறுகைகளின் உட்பாய்ச்சல் காரணமாக ஏற்பட்ட நாணய விரிவாக்கத்திற்கான உள்ளார்ந்த வளம் மத்திய வங்கியினால் வைத்திருக்கப்பட்ட ரூ. 10,000 மில்லியன் பெறுமதி கொண்ட திறைசேரி உண்டியல் உடனடியாகதீர்ப்பனவு செய்யப்பட்டு விடுவிக்கப் பட்டமையினாலும் மத்திய வங்கியுடனான அரசின் வைப்புக்கள் அதிகரிக்கப்பட்டமையினாலும் பெருமளவிற்கு எதிரீடு செய்யப்பட்டன.

ஆண்டின் இறுதிப்பகுதியில், கிழக்காசிய நாணய நெருக்கடியின் காரணமாக வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் நிச்சயமற்ற சில தன்மைகள் காணப்பட்ட வேளையில் பணவீக்கம் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க சிறிதளவு உயர்வாக இருந்தமையினால் குறுங்கால வட்டி வீதங்கள் சிறிதளவு அதிகரித்தன. ஏப்பிறலளவில் 7 சதவீதத்திற்கு படிப்படியாகக் குறைவடைந்த மீள் கொள்வனவு வீதம் இறுதிக் காலாண்டின் பெரும்பகுதியில் 9 சதவீதமாக விளங்கி திசெம்பரில் 11 சதவீதத்திற்கு அதிகரித்தது. நவெம்பரிலும் திசெம்பரிலும் ஓரளவு இறுக்கமான பணவீக்கத்தினைக் கொண்டிருந்த குறுங்காலச் சந்தையின் வருவாயின் சாதகமான உண்மை வீதங்களை உறுதிப்படுத்துதல் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையை உறுதிப்படுத்துதல் ஆகிய இரண்டினையும் மேற்கொள்ள இது வேண்டியதாயிருந்தது. வங்கியினால் வழங்கப்படும் திரவத்தன்மையின் செலவில் செல்வாக்குச் செலுத்துவதற்காக

திறைசேரி உண்டியல்களுக்கான மத்திய வங்கியின் கழிவிடலுக்கும் மீள் கழிவிடலுக்குமிடையிலான இலாபமும் அதிகரிக்கப்பட்டது.


## பண நிரம்பல்

ஆண்டின் தொடக்கப்பகுதியில் நாணயக் கொள்கை நிலையில் தளர்த்தல்கள் காணப் பட்டபோதும் 1997 முழுவதும் நாணய வளர்ச்சி வீதம் குறைவாகவே இருந்தது. முன்னைய இரு ஆண்டுகளிலும் காணப்பட்ட அபிவிருத்திகளுக்கு மாறாக 1997 இல் வங்கித் தொழில் முறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் பெருமளவு அதிகரிப்புக்கள் ஏற்பட்டு பண நிரம்பலில் விரிவுத் தாக்கத்தினை உள்நாட்டுக் கொடுகடனில் ஏற்பட்ட மெதுவான வளர்ச்சி நாணய விரிவாக்கத்தினை கட்டுப்படுத்த உதவியது. உண்மையில் 1997 இல் அரசிற்கான தேறிய கொடுகடன் சுருக்கமடைந்தது. விரிந்த பண நிரம்பல் ($M_2$)வளர்ச்சி 1997 திசெம்பரில் 13.8 சதவீதமாக இருந்தது. 1997 இல் வட்டி வீதங்க ளிலும் பணவீக்கத்திலும் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சியின் காரணமாக காசினை அல்லது கேள்வி வைப்புக்களை வைத்திருப்பதனால் ஏற்படும் அமையச் செலவு வீழ்ச்சியடைந்ததுடன் குறுகிய பணம் ($M_1$) கடந்த இரு ஆண்டுகளிலும் பார்க்க விரைவாக வளர்ச்சியடைந்தது. $M_1$ இன் வளர்ச்சியா னது 1996 இன் 4 சதவீதத்திலிருந்து 1997 இல் 9.8 சதவீதத்திற்கு அதிகரித்தது.


தனியார்துறைக் கொடுகடன் 1996 இன் 7.8 சதவீதத்திற்கு எதிராக 11.4 சதவீதத்தினால் மிதமாக வளர்ச்சி கண்டது. நிரம்பல், கேள்வி காரணிகள் இரண்டும் இம் மிதமான வளர்ச்சிக்கு உதவின. வர்த்தக வங்கிகள் தமது உள்நாட்டு பிரிவுகளிலிருந்து கொடுகடனை வழங்குவதில் பெருமளவு கவனத்துடன் நடந்து கொண்டன. பாரியளவு முதலீடுகளுடன் தொடர்பான சில கடன்பெறுநர்கள் பொறுத்திருந்து பார்க்கும் அணுகு முறையைப் பின்பற்றியமையினால் கேள்வியும் கட்டுப்படுத்தப்பட்ட வேளையில் மற்றையவர்கள் கொடுகடனுக்காக வெ.நா.வ. தொழில் பிரிவுகளை அல்லது அபிவிருத்தி நிதி நிறுவனங்களை நாடினர். சில கூட்டுத்துறை கடன்பாட்டாளர்களும் பங்கு வழங்கல்களினூடாக முதலீட்டாளர்களிடமிருந்து நேரடியாக நிதிகளைப் பெற்றதினாலும் வர்த்தக வங்கிக் கடன் வழங்கல் வீதங்களில் ஏற்பட்ட கீழ் நோக்கிய உறுதிப்பாட்டின் காரணமாக வர்த்தகப் பத்திரங்கள் வழங்கப்பட்டமையினாலும் வங்கிக் கொடுகடனுக்கான கேள்வி குறைவடைந்தது. எனினும் , வெ.நா.வ. தொ பிரிவுகளிலிருந்தான கொடுகடன் உள்ளிட்ட மொத்தக் கடன்பாட்டினைக் கருத்திற் கொள்ளும் பொழுது ஓரளவு வேறுபட்ட தோற்றப்பாட்டையும் கணிக்க முடிகிறது.

உள்நாட்டுப் பொருளாதாரத்தின் மீது வெ.நா.வ.தொழில் பிரிவுகளின் கொடுக்கல் வாங்கல்களின் அதிகரித்த தாக்கத்தினைக் கருத்திற் கொண்டு வர்த்தக வங்கிகளின் உள்நாட்டுப்பிரிவுகள் மற்றும் வெ.நா.வ.தொழில் பிரிவுகள் இரண்டி னையும் உள்ளடக்கிய ஒன்று திரண்ட நாணய அளவீடொன்று ஒன்று திரட்டப்பட்டுள்ளது. ஒன்று திரண்ட நாணய அளவீடு 1996 இறுதியின் 11.3 சதவீதங்கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1997 இறுதியில் விரிந்த பணத்தின் புள்ளிக்குப்

**வரைபடம் 1.10**
**நாணயக் கூட்டுக்கள்**



**வரைபடம் 1.11**
**நாணய வளர்ச்சி**




ட்ள்ளி வளர்ச்சி 13.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியை எடுத்துக்காட்டியது. உள்நாட்டு பிரிவுகளை மாத்திரம் உள்ளடக்கிய மரட்ரீதியான நாணய அளவீட்டினைப் பொறுத்தவரை வங்கித் தொழில் முறையிலிருந்து அரசிற்கான தேறிய கடன்பாடு சுருக்கமொன்றைக் காட்டியது. எனினும் உள்நாட்டு பிரிவ; நாணய அளவீட்டின் பெறுபேறுகளுக்கு மாறாக, தனியார் துறைக்கான கொடுகடன் 1996 இன் 8.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1997 இல் 14.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. தனியார்துறைக்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன் 1996 இன் ரூ.30,789 மில்லியனுக்கெதிராக 1997 இல் ரூ.32,878 மில்லியனாக விளங்கி வெ.நா.வ.தொழில் பிரிவ;களிலிருந்தான கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பினை எடுத்துக்காட்டின.

வெ.நா.வ.தொ பிரிவ;களிலிருந்தான இக் கொடுகடன் முக்கியமாக முதலீட்டுச் சபை நிறுவனங்களிலிருந்தே பெற்றுக்கொள்ளப்பட்டது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாள 16 சதவீதம் தயாரிப்ட்த் துறையிலிருந்தும் 82 சதவீதமான கைத்தொழில் ஏற்றுமதிகளுக்கு முதலீட்டுச்சபை நிறுவனங்கள் வகை கூறுவதனைய்ம் கருத்திற் கொள்கையில் வெ.நா.வ.தொழில் பிரிவ; கொடுகடன் தொகையில் குறிப்பிடத்தக்களவ; பங்கை நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளுக்காக வழங்கிய்ள்ளமை ட்லனாகும். ஒன்று திரண்ட நாணய அளவீடும் வர்த்தக வங்கிகளின் உள்நாட்டுப் பிரிவ;களிலிருந்தான கொடுகடனின் மெதுவான வளர்ச்சியை எடுத்துக் காட்டியதுடன் இது வெ.நா.வ.தொழில் பிரிவ;களினால் வழங்கப்பட்ட

**அட்டவணை 1.5**

**நிதியியல் நிறுவனங்களிலிருந்து தனியார்துறை பெற்ற கொடுகடன்கள்(அ)**

ரூபா மில்லியன்


| | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 | 1997(ஆ) |
|---|---|---|---|---|---|---|
| வர்த்தக வங்கிகள் | 96,188 | 115,928 | 140,004 | 179,825 | 193,842 | 216,030 |
| அரச வங்கிகள் | 72,825 | 69,333 | 85,728 | 105,781 | 106,007 | 11,650 |
| ஏனைய வர்த்தக வங்கிகள் | 23,363 | 46,595 | 54,276 | 74,044 | 87,835 | 104,380 |
| வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவ;கள் | 23,995 | 28,671 | 32,260 | 38,884 | 44,591 | 46,621 |
| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் | 1,112 | 1,514 | 1,873 | 2,431 | 2,899 | 3,200 |
| சிறப்பியல்ட்வாய்ந்த வங்கிகள் | 11,955 | 14,812 | 16,935 | 20,037 | 26,930 | 30,911 |
| இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | 5,505 | 6,895 | 8,536 | 10,457 | 10,526 | 11,584 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 6,450 | 7,917 | 8,399 | 9,580 | 16,404 | 19,327 |
| நிதிக் கம்பனிகள் | 5,874 | 5,280 | 6,492 | 9,664 | 12,086 | 14,544 |
| தேசிய சேமிப்ட் வங்கிகள் | 1,522 | 2,626 | 3,108 | 3,441 | 4,396 | 6,664 |
| மொத்தக் கொடுகடன் | 128,691 | 154,019 | 183,737 | 234,245 | 257,814 | 287,059 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.


(அ) ஆண்டு முடிவிலுள்ள பெறுமதி.
(ஆ) தற்காலிகமானவை.

**வரைபடம் 1.12**
**வட்டி வீதங்கள்**

**வரைபடம் 1.12.1**
**வட்டி வீதங்கள் (ஆண்டு)**





**வரைபடம் 1.12.2**
**வட்டி வீதங்கள் (காலச் சராசரி)**




மேலதிகக் கொடுகடன்களின் மூலம் எதிரீடு செய்யப்பட்டது.

அனைத்து நிதி நிறுவனங்களிலுமிருந்தான (வர்த்தக வங்கிகளின் உள்நாட்டுப் பிரிவுகள், வெ.நா.வ.தொ.பிரிவுகள், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள், அபிவிருத்தி வங்கிகள், நிதிக்கம்பனிகள், தேசிய சேமிப்பு வங்கி) தனியார் துறைக்கான கொடுகடன் 1996 இன் 10.1 சதவீதத்துடன் ஒப்பிடுகைளில் 11.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

**வரைபடம் 1.13**
**வருவாய் வளைகோடு – அரசாங்க பிணைகள்**




## 1.12 பிரச்சினைகளும் விடயங்களும்

உயர்ந்தளவு நிச்சயமற்ற உலகளாவிய சூழலின் பின்னணியில் 1997 இல் இலங்கையின் பொருளாதாரம் மீண்டும் மீட்சியைக்காட்டியது. 1970 களின் முற்பகுதியில் பிறிட்டன்வூட்ஸ் அமைப்பில் ஏற்பட்ட தடங்கலின் பின்னர் மிகக்கடுமையானதொரு நெருக்கடியாகக் கருதப்படுகின்ற கிழக்காசிய நெருக்கடி 1997 இல் இலங்கையின் பொருளாதாரத்தில் மிகச் சிறிய தாக்கத்தினையே கொண்டிருந்தது. மூலதனக்கணக்கு தாராளமயப்படுத்தலின் பின்னணியில் கிழக்காசிய நெருக்கடி, வலிமையான நிதியியல் முறைகள், நிலையான பேரண்டப் பொருளாதாரமும் செலாவணி வீதக் கொள்கைகளும் மற்றும் பயன்தரு முன்மதியுடைய கண்காணிப்பு முறைகள் என்பனவற்றின் முக்கியத்துவத்தினைக் குறைத்துவிட்டது.

இலங்கையின் நடைமுறைக் கணக்குக் கொடுக்கல் வாங்கல் முழுமையாக தாராளமயப்படுத்தப்பட்டுள்ளன.அத்துடன் ஏற்றுமதி வருவாய்களை ஒப்படைப்பதற்கான தேவை இருக்கவில்லை. மூலதனக் கணக்கினை தாராளமயப்படுத்தும் விடயத்தினை நாடு மிகவும் கவனத்துடனேயே மேற்கொண்டிருக்கிறது. மூலதனக் கணக்கு பகுதியளவில் தாராளமயப்படுத்தப்பட்டிருப்பதுடன் மற்றைய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலும் பார்க்க சார்புரீதியில் கட்டுப்பாடற்றதாகவே இருக்கிறது. வெளிநாட்டுச் சொத்துப்பட்டியல் முதலீட்டாளர்கள் மூலதனத்தினை, மூலதன இலாபத்தினை, பங்கிலாபங்களை எல்லாம் வெளியில் அனுப்புவதற்கான சுதந்திரத்துடன் பங்குச்சந்தையில் முதலீடு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதெனினும் கொடுக்கல் வாங்கல்கள் "பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகள்" என அறியப்படும். சிறப்புக் கணக்குகளினூடாகவே மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கும். ஒரு சில கட்டுப்படுத்தப்பட்ட துறைகள் நீங்கலாக, வெளிநாட்டு நேரடி முதலீடு

100 சதவீதம் வரையான சொத்துடமையுடன் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் நிதி நிறுவனங்களிலுள்ள 49 சதவீதம் வரையிலான உடமையை, மூலதனம் இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்களை எவ்வித கட்டுப்பாடுமில்லாமல் வெளிநாட்டிற்கு அனுப்பலாம். ஏற்றுமதியாளர்கள் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளை ஒன்றில் உள்நாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளிலிருந்தோ அல்லது வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளிலிருந்தோ எவ்வித கட்டுப்பாடுமின்றி கடன் வழங்குவதற்கான வங்கியின் இயலளவைப் பொறுத்து பெற்றுக் கொள்ளலாம். முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் அனைத்து தொழில் முயற்சியாளர்களும் வெ.நா.வ.தொழில் பிரிவுகளிலிருந்து கடன்பட அனுமதிக்கப்பட்டனர். மற்றைய அனைத்து வெளிநாட்டுத் தனியார் முதலீடுகளின் உட்பாய்ச்சல்களும் வெளிப்பாய்ச்சல்களும் ஒப்புதல்களுடன் அனுமதிக்கப்பட்டன. இச் சார்பு ரீதியான தாராளமான மூலதனக் கணக்குகளின் காரணமாக வர்த்தக வங்கிகளின் குறுங்கால வெளிநாட்டு வெளிப்படுத்துகையை வரையறைப்படுத்தும் ஏற்கனவேயுள்ள மூலதனக் கடன்பாடுகளும் கிழக்காசிய நிதியியல் நெருக்கடிகளின் குறுங்கால நேரடி பாதிப்புக்களும் மறைமுக பாதிப்புக்களுக்கு எதிராக பொருளாதாரத்தினைப் பாதுகாக்கும் முக்கிய காரணிகளிலொன்றாக இருக்கின்றது. குறுங்காலப்படுகடனின் உட்பாய்ச்சல் மொத்த மூலதன உட்பாய்ச்சலில் ஏறத்தாள 10 சதவீதமாக இருந்ததுடன் இவற்றில் பெரும்பாலானவை, ஏற்றுமதிப்பதனிடல் கைத்தொழில்களுக்கான மூலப் பொருட்களின் வழங்கல் வடிவிலேயே இருந்தன.

1995 இறுதிக்கு முன்னர் வெ.நா.வ.தொழில் பிரிவுகள் தவிர்ந்த இலங்கையின் வர்த்தக வங்கிகள் வெளிநாடுகளிலிருந்து கடன்பட அனுமதிக்கப்படவில்லை. அவை நாளாந்த தொழிற்படு நிலுவைகளை மட்டும் பேணிக் கொள்ள முடியும். இத் தொழிற்படு நிலுவைகளின் பேரிலான தேறிய குறுங்கால வெளிப்படுத்துகை தொகை ஒதுக்குகள் உட்பட அவற்றின் மூலதன நிதிகளில் 5 – 10 சதவீதம் மாத்திரமேயாகும். எனினும் குறிப்பாக உள்நாட்டு உயர்ந்த வட்டி வீதங்களைக் கருத்திற் கொண்டு கைத்தொழிலாளர்கள் வெளிநாட்டுக் கடன்பாடுகளுக்கான உயர்ந்த கேள்வியைக் கொண்டிருக்கும்போது போதுமான பாதுகாப்புக்களைக் கொண்ட முறையின் கீழ் இவ்வசதிகளை அனுமதிப்பது பொருத்தமானது என உணரப்பட்டது. எனவே, வெளிநாட்டு நாணய கடன்களைப் பெறுவதற்கான வசதி உள்நாட்டு வங்கிகளூடாக முதலீட்டுச் சபையல்லா ஏற்றுமதியாளர்களுக்கு 1997 சனவரியில் வழங்கப்பட்ட வேளையில் வர்த்தக வங்கிகள் அவற்றின் மூலதன நிதிகள் தொடர்பில் தேறிய வெளிநாட்டுப் பொறுப்புக்களின் 15 சதவீதத்தினையே வழங்கலாம் என வரையறுக்கப்பட்டது. இத் திட்டம் மிகச் சுமூகமாக தொழிற்படுத்தப்பட்டு வருவதுடன் தேறிய வெளிநின்ற பொறுப்புக்கள் எதிர்பார்க்கப்பட்ட மொத்த வரையறையான ஐ.அ.டொ 100 மில்லியனுக்கு கீழே பேணப்பட்ட வேளையில் 1997 இல் மொத்தச் சுழல்வுக் கொடுகடன் ஐ.அ.டொலர் 253 மில்லியன் டொலர்களாக இருந்தது. இது மிகையான வெளிநாட்டு வெளிப்படுத்துகைக்கு எதிராக வங்கிகளையும் அதேபோன்று உள்நாட்டு தொழில் முயற்சியாளர்களையும் பாதுகாக்க உதவியது.

கிழக்காசிய நிதியியல் சந்தை குழப்ப நிலைமைகளுக்கிடையிலும் 1997இல் சார்புரீதியில் உறுதியான நிதியியல் சந்தையைப்பேண உதவிய இன்னொரு காரணி வெளிநாட்டுச் செலாவணியின் நெகிழ்ச்சிமிக்க முகாமைத்துவமாகும். செலாவணிச் சந்தை வீதங்களை நிர்ணயிப்பதில் குறிப்பிடத்தக்களவு பங்கினையாற்றிய வேளையில் அளவுக்கு விஞ்சிய அடிக்கடி மாறுபடும் வீதங்களைக் குறைப்பதற்காக மத்திய வங்கி தலையிட்டதுடன் வாங்கும் விற்கும் வீதங்களுக்கிடையில் 2 சதவீத இடைவெளியொன்றும் பேணப்பட்டது. வீதங்கள் போட்டியாளர்கள் மற்றும் வர்த்தகப் பங்காளர்களின் 24 நாணயங்களைக் கொண்ட பெரும் கூடை நாணயங்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட வேளையில் சென்மதி நிலுவையின் அடிப்படைப் போக்குகளும் மற்றைய பேரண்ட பொருளாதார குறிகாட்டிகளும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன. எனினும் குறிப்பாக சில இன்றியமையாத நுகர்வுப் பொருட்கள் பெற்றோலியம் வளமாக்கி போன்ற இடைநிலைப் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்கள் போன்ற இறக்குமதிகளில் தங்கியிருக்கும் அளவினைப் பொறுத்து பணவீக்க தூண்டல் தாக்கங்கள் சார்புரீதியில் அதிகமாகும். தற்போதைய செலாவணி வீத முகாமைத்துவ முறை முக்கிய பேரண்டப் பொருளாதார அடிப்படைகளுக்கேற்ப செலாவணி வீதங்களை மாற்றமடைய அனுமதிப்பதற்கான நெகிழ்ச்சித் தன்மையைக் கொண்டிருந்த வேளையில் பணவீக்க/செலாவணி வீத தூண்டுதல் தாக்கங்களிலும் கவனம் செலுத்தப்படுகின்றது.

வீழ்ச்சியடைந்து செல்கின்ற படுகடன் அமைப்புக்கு மேலதிகமாக, இலங்கை சாதகமான சென்மதி நிலுவை மற்றும் வெளிநாட்டுச்சொத்து நிலைமைகளைக் கொண்டிருந்தது. சென்மதி

நிலுவை திரண்ட மிகையாக ஐ.அ.டொலர் 163 மில்லியன்களைக் கொண்டிருந்ததுடன் வெளிநாட்டுச் சொத்துக்கள் 5.8 மாத இறக்குமதிகளுக்கு நிதியிடப் போதுமானவையாக இருந்தன. மொ.உ.உற்பத்தியின் விகிதமாக மொத்தப்படுகடன் இருப்பு 1996 இன் 70 சதவீதத்திலிருந்து 1997 இல் 63 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்ததுடன் படுகடன் பணிக்கொடுப்பனவுகளும் சமாளிக்கத்தக்கதாக இருந்தன. இவை, சரியான நேரத்தில் பொருத்தமாக மேற்கொள்ளப்பட்ட தார்மீக இணக்குவிப்புக்கள் மற்றும் வர்த்தகத் தொழிற்பாடுகளின் மீதான அதிகரித்த கண்காணிப்பு என்பனவற்றை உள்ளடக்கிய நாணயக் குழப்ப நிலையின் உச்ச காலப்பகுதியில் உள்நாட்டு நிதியியல் சந்தைகளில் உருவாகும் நிலையில் காணப்பட்ட மிகையான ஊக விசைகளைக் கட்டுப்படுத்தவதற்கு உதவின. நிதியியல் சந்தைகள் உறுதிப்பட உதவும் பொருட்டு மத்திய வங்கி செலாவணிச் சந்தையில் தலையிட்டது.

கிழக்காசியாவில் காணப்படும் நாணய நெருக்கடியின் காரணமாக, பொருத்தமான செலாவணி வீத அமைப்பொன்றினைத் தெரிவு செய்வது பற்றிய வாதப் பிரதிவாதங்களின் மீது புதுப்பிக்கப்பட்ட ஈடுபாடு காணப்பட்டது. ஆதரவான இறை மற்றும் நாணயக் கொள்கைகள் இல்லாமல் நிலையான அல்லது கட்டுப்படுத்தப்பட்ட செலாவணி வீத அமைப்பொன்றினை பேணுவதென்பது சாத்தியப்படமாட்டாது என்ற விடயம் பரந்தளவு ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் பொருத்தமான செலாவணிவீத அமைப்பினை தெரிவு செய்வது அந்தந்த அரசாங்கங்கள் வசமே விடப்பட்டிருக்கிறது. இலங்கையைப் பொறுத்தவரையில் தற்போதைய கட்டுப்பாடான மிதக்கவிடும்முறை நன்கு தொழிற்படுவதுடன் அதில் காணப்படும் படிப்படியான தேய்வு அடிப்படையில் பேரண்டப் பொருளாதார நிலைமைகளைப் பிரதிபலிக்கின்றது. விலைகள், கூலிகள் மற்றும் உற்பத்திச்செலவு என்பனவற்றுக்கான செலாவணி வீத தேய்வினூடான தாக்கங்கள் முழுமையாக முடிவடைந்த பின்னர் கிழக்காசிய நாடுகள் சில தமது பன்னாட்டுப் போட்டித் தன்மையினை மேம்படுத்திக் கொள்ளக் கூடியதாகவிருக்கும். ஏனைய பல நாடுகள் இச் சூழ்நிலையை எதிர் நோக்க வேண்டியிருக்குமென்பதனால் இது இலங்கைக்கு பாரிய அறைகூவலாக இருக்காது போல் தோன்றுவதுடன் செலாவணி வீதம் தேவையான வேகத்தில் சீர்செய்யத்தக்க விதத்தில் நெகிழ்ச்சியுடையதாயிருக்கும்.

கிழக்காசிய நெருக்கடிகளின் குறுங்காலப் பாதிப்புக்கள் தவிர்க்கப்பட்டுள்ள வேளையில் வைரங்கள், இறப்பர் மற்றும் தெங்கு போன்ற சில குறிப்பிட்ட ஏற்றுமதிப் பொருட்கள் கிழக்காசியாவின் கேள்வியில் ஏற்பட்ட கடுமையான சுருக்கம் மற்றும் நாணய தேய்மானத்தின் பின்னர் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவற்றின் காரணமாக போட்டியினை எதிர்நோக்கலாம் போல் தோன்றுகின்றது. பாதிக்கப்பட்ட கிழக்காசிய நாடுகள் நெருக்கடிகளுக்கு செவிமடுக்கும் விதத்தில் வலுவானதும் மிகக் கடினமானதுமான சீராக்க வழி முறைகளினூடாக தமது நிலைமைகளை சீர்படுத்திக் கொள்ள முயன்று வருகின்றன. பன்னாட்டு நாணய நிதியத்தின் 1998 ஏப்பிறல் மாத வேர்ல்ட் எக்கனமிக் அவுட்லுக் இன்படி பாதிக்கப்பட்ட கிழக்காசிய நாடுகளுக்கான அண்மைக் கால வளர்ச்சி வாய்ப்புக்கள் எதிர்பார்த்ததைவிட பலவீனமான நிலையில் காணப்படுகின்றமைக்கு உள்நாட்டுக் கேள்வியில் ஏற்பட்ட கடுமையான சுருக்கமே காரணமாகும். எனினும் அறிக்கையானது நம்பிக்கை தொடர்ச்சியாக மீட்சியடைந்துவரும் என எதிர்பார்ப்பதுடன் பொருளாதார நடவடிக்கைகளில் ஒரு மிதமான அதிகரிப்பும் எதிர்பார்க்கப்படுகிறது. 100 பாரிய பல்தேசிய கம்பனிகளை உள்ளிட்ட 500 கம்பனிகளில் மேற் கொள்ளப்பட்ட அளவீடுகளின் அடிப்படையில் பதிலிறுத்த 40 சதவீத கம்பனிகளின் படியும் இப் பிராந்தியத்தில் காணப்படும் பல்தேசிய கம்பனிகளின் தொழிற்பாடுகளுக்கான குறைந்த செலவு காரணமாக வர்த்தகம் மற்றும் அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் மாநாடு குறுகிய மற்றும் நடுத்தர காலத்தில் அதிகரிப்பதற்காக வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உள்வருகைகளை எதிர்பார்த்தது. ப.நா. நிதியத்தின் பெரும்பாலும் அனைத்தையும் உள்ளடக்கிய வேர்ல்ட் எக்கணமிக் அவுட்லுக் இன் எதிர்பார்ப்புக்களின்படி அனைத்து அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்குமான தேறிய தனியார் மூலதனப் பாய்ச்சல் கூடியளவிற்கு மெதுவான போக்கினைக் கொண்டிருக்கின்றன. ஆசியான் 4இன் (இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து) எதிர்க்கணிய வளர்ச்சி வீதத்தின் காரணமாக உலகப் பொருளாதார வளர்ச்சி ஒரு சதவீத புள்ளியினால் குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்துள்ள நாடுகளின் மொத்த இறக்குமதிகள் 1997 இன் 8.6 சதவீதத்திலிருந்து 1998 இல் 6.8 சதவீதத்திற்கு ஏறத்தாள 1.8 சதவீதத்தினால்குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கை திறந்த பொருளாதாரத்தினைக் கொண்டிருப்பதனால் உலக

பொருளாதாரத்தின் மாற்றங்களினால் ஏற்படும் தாக்கங்களிலிருந்தும் முழுமையாக விலகி நிற்க முடியாது என்பதனால் உலக பொருளாதார வளர்ச்சியில் ஏற்படும் மெதுவான போக்கினால் ஓரளவிற்கு பாதிக்கப்படக்கூடும்.

உலகளாவிய பொருளாதாரத்தின் மெதுவான போக்கினால் சாத்தியமாகக் கூடிய பாதகமான சிக்கல்களைக் குறைத்துக் கொள்வதற்கு நாட்டிற்கு பல வழிகள் இருக்கின்றன. முதலாவதும் மிக முக்கியமானதும் யாதெனில் மூலவளங்கள் அளவுக்கு மீறி பயன்படுத்துவதனைக் குறைத்து பணவீக்கத்தாக்கமற்ற வளர்ச்சியை ஏற்படுத்தும் நோக்குடன் இறைத் திரட்சியை மேலும் மேம்படுத்தும் தேவையாகும். இந் நிகழ்ச்சித்திட்டம் நடுத்தர காலத்தில் மொத்த வரவு செலவுத் திட்டக் குறைறையை மொ.உ.உற்பத்தியின் 4 சதவீதத்திற்குக் குறைக்கும் நோக்குடன் ஏற்கனவே நடைபெற்றுவருகின்றது. இலங்கையின் வெளிக் கட்டுப்பாட்டுக் காரணிகளின் காரணமாக, தனியார் வெளிநாட்டு நேரடி முதலீடும் அலுவல்சார் மூலதன உட்பாய்ச்சல்களும் மெதுவான போக்கினைக் கொண்டிருக்கும் ஒரு சூழ்நிலையில் நடைமுறைக் கணக்கு மிகை உள்நாட்டுச் சேமிப்புக்களை அதிகரிக்க உதவும். மேலே குறிப்பிடப்பட்ட வாறு உலக பொருளாதாரத்தில் பாதகமான நிகழ்வுகள் இடம் பெறுகின்ற வேளையில் மேம்பாட டைந்த பேரண்டப் பொருளாதார முகாமைத்துவ த்தின் காரணமாக இலங்கையின் பேரண்டப் பொருளாதார அடிப்படைகள் மேம்பட்டன. எனினும் அண்மைய பேரண்டப் பொருளாதார சாதனைகள் தேர்தல்களின் போதும் பின்னோக்கிச் செல்ல அனுமதிக்கப்படக் கூடாது என்பது மிக முக்கியமானதாகும். உண்மையில் பணவீக்கத்தில் உறுதியான குறைப்பினை ஏற்படுத்தி, பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தும் நோக்கில் அவை மேலும் பலப்படுத்தப்படல் வேண்டும். இவ்விடய த்தில் கணிசமான நடைமுறைக்கணக்கு மிகைமற்றும் மொ.உ.உ.இன் 4 சதவீதத்திற்கும் மேற்படாத மொத்தப் பற்றாக்குறை என்பனவற்றை நோக்கிய மேலதிக இறை உறுதிப்பாடே நடுத்தரகால இலக்காக இருத்தல் வேண்டும்.

பொருளாதாரத்தினை உலகளாவிய மயப்படுத்தல், கிழக்காசிய நெருக்கடிகளிலிருந்து கிடைத்த படிப்பினையுடன் அடுத்துவரும் இரண்டு தொடக்கம் மூன்றாண்டு காலத்தின் சாத்தியமாகக் கூடிய மெதுவான முன்னேற்றங்களுடன் தொடர்ந் தும் மேற்கொள்ளப்படும். கிழக்காசிய நெருக்கடியி லிருந்து அறியப்படும் முக்கிய படிப்பினை யாதெனில் உலகளாவிய மயப்படுத்தல் இந் நெருக்கடிக்கான மூல காரணமல்ல என்பதே யாகும். மூலதனக் கணக்குகளை தாராளமயப் படுத்திய பின்னர் அறைகூவல்களை எதிர் கொள்வதற்கு போதியளவிற்கு தயாராக இல்லாமை யும் மேலே குறிப்பிடப்பட்ட மற்றைய காரணிகளின் உதவியுமே இந் நெருக்கடிகளின் பின்னிருந்த விசைகளாகும். இப் பின்னணியில், இலங்கை அதன் வலுவான தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு நிதியியல் முறை ஒழுங்கு முறைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படுவ தனை உறுதிப்படுத்த வேண்டும். நிதியியல் முறையை வலுவாக்குவது தற்பொழுது நடைபெற்றுவரும் நிதியியல்துறை சீர்திருத்த நிகழ்ச்சியில் முன்னுரிமையைப் பெற்றிருக்கிறது. வங்கித் தொழில் முறையின் வலுவான தன்மையினை உறுதிப்படுத்து வதற்குத் தேவையான சட்டப் பின்னணிகள் தயாரிக் கப்பட்டுள்ளதுடன் வங்கிகளுக்கு பணிப்புரைகளும் விடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளையில் அரசுக்கும் அரச வங்கிகள் இரண்டிற்குமிடையில் நல்லெண்ணக் கடிதங்களின் வடிவில் அரச வங்கிகளின் சுயாதீன தொழிற் பாட்டினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வங்கிக ளைக் காப்பாற்றுவதற்காக அரசாங்கம் பாரிய செலவொன்றினை மேற்கொள்ள வேண்டியிருந்தத னாலும் இந்த செலவுகள் உயர்ந்த வரிகள் அல்லது விரிவுத்தாக்க கடன்பாடுகளிலிருந்து நிதியிடப்பட வேண்டியிருந்ததினாலும் கடந்த காலங்களில் தொழிற்பாட்டுத் திறமையின் மையின் செலவினை யும் அரசாங்கத்தினால் பணிக்கப்பட்ட கடன்களை யும் உயர் பண வீக்கத்தின் வடிவில் சாதாரண வாடிக்கையாளர்கள் ஏற்க வேண்டியிருந்தது.

தாழ்ந்த பணவீக்க வீதமொன்றுடன் விலை உறுதிப்பாட்டைப் பேணுவதற்கான முதன்மைக் குறிக்கோளுடனேயே நாணயக் கொள்கை நடாத்தப் படுகின்றது. பண வீக்கம் கட்டுப்படுத்தப்பட்டால் பாரிய செலாவணி வீதத் தேய்வு அவசியமாகாது. அதியுயர் பணவீக்கமானது நாணயத்தின் பெறுமானத் தேய்வினை வேண்டி நிற்பதோடு இது உற்பத்திச் செலவினை அதிகரிப்பதோடு கைத்தொழிலின் இலாபத் தன்மையினையும் தேய்வடையச் செய்கின்றது. இலங்கையைப் பொறுத்த வரையில் கூலி அதிகரிப்புக்கும் பணவீக்கத்துக்கும் இடையில் உறுதியான உறவு முறையொன்று காணப்படுகின்றது. இலங்கையின் வர்த்தக தங்கியிருத்தல் (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 70 சதவீதம்) பன்னாட்டுப் போட்டித்தன்மையினை

சிறப்புக் குறிப்பு 2

## வங்கித் தொழில் துறையின் ஆற்றல்

பொருளாதாரமொன்றின் திரவத்தன்மையின் கருவூலங்களான வங்கிகள் நாட்டின் நிதியியல் மற்றும் கொடுப்பனவுகள் முறையின் முதுகெலும்பாக விளங்குகின்றன. எனவே, வங்கிகள் சிறப்புவாய்ந்தனவாக அமைவதோடு முறையிலிருந்தான இடரிலிருந்து வங்கித் தொழில் முறையினைப் பாதுகாப்பதற்கான முக்கியமாக கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் என்பனவற்றினூடாக உலகெங்கிலுமுள்ள அனைத்து நாடுகளும் தலையீடு செய்கின்றன. எனினும் கண்காணிப்பும், மேற்பார்வையும் மட்டும் வங்கித்தொழில் முறையின் ஆற்றலினை உறுதிப்படுத்தாது. உள்ளக மற்றும் வெளியக நிதியியல் கட்டுப்பாடுகளின் கலப்பொன்றினூடாக இதற்கு ஆதரவளிக்கப்படல் வேண்டும். வங்கிகள் போட்டித் தன்மை வாய்ந்த சூழலில் தொழிற்படும் கம்பனிகளாகும். வங்கியின் கடன் தீர்ப்பனவு தகைமையைப் பேணுவதற்கான முதன்மைப் பொறுப்பானது அதன் முகாமைத்துவத்திடம் தங்கியுள்ளது. வங்கிகளும் அவற்றின் வைப்பாளர்களும் மிகுந்த இடர்நேர்வினை ஏற்றுக்கொண்டு செயற்படுவதன் காரணமாக செயலொழிவிலிருந்தும் கூட வங்கிகள் பாதுகாக்கப்படும் என்று நம்பிக்கையை பொதுமக்களில் ஏற்படுத்தும் நன்நடத்தைத் தீங்கினை மேற்பார்வை ஏற்படுத்தி விடக்கூடாது. ஏனெனில் அத்தகைய எண்ணங்கள் முழு நிதியியல் முறையின் பாதுகாப்பினையும் தகர்த்துவிடும்.

இதற்கு மேலதிகமாக வங்கித்தொழில் உறுதிப்பாட்டுக்கு சந்தைக் கட்டுப்பாடுகளும் வேண்டப்படுகின்றன. போட்டிச் சந்தைகள் மற்றும் செயலிழந்தமைக்கு தண்டத்தொகை விதித்தல் என்பன காணப்படாதவிடத்து வங்கி உடைமையாளர்கள், மூத்த நிலையிலுள்ள முகாமையாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் ஆகியோரினால் நிதி தொடர்பாக பொருத்தமான தீர்மானங்களை எடுப்பதற்குப் போதிய ஊக்குவிப்புக்கள் இருக்கமாட்டாது. உடைமையாளர்களின் நிதியங்கள் இடரினை எதிர்நோக்கியிருப்பதனால் வங்கியைப் பாதுகாப்பாக இயக்குவதற்காக சந்தைக் காரணிகள் முகாமைத்துவ ஊக்குவிப்புக்களை வலிமைப்படுத்துகின்றன.

வங்கித்தொழில் முறையின் அடிப்படை உறுதிப்பாட்டில் நம்பகத் தன்மையைப் பேணுவதிலான மத்திய வங்கியின் பொறுப்பானது முன்மதிகரமான நியமங்களை உருவாக்குதல் மற்றும் தொடர்ச்சியான அடிப்படையில் வர்த்தக வங்கிகளின் தொழிற்பாட்டினை ஒழுங்குமுறைப் படுத்தல்/மேற்பார்வை செய்தல் என்பனவற்றின் மூலம் செயல்படுத்தப்படுகின்றது. முன்மதிகரமான கொள்கைகள் சகல பிரச்சினைகளுக்குமான தீர்வுகளல்லாத வேளையில் இடர் நேர்வுகளை மட்டுப்படுத்தி வங்கிகள் முறையாக முகாமை செய்யப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு முனைகின்றன. வங்கிகளின் அனுமதி, தொழிற்பாடு, வெளியேற்றம் என்பனவற்றினை ஒழுங்குமுறைப் படுத்தும் ஒழுங்குவிதி அமைப்பொன்றினால் இவை நெறிப்படுத்தப்படுகின்றன. 1995இன் 33ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988இன் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம் மற்றும் நாணய விதிச் சட்டம் என்பனவற்றில் இலங்கையின் இந்த ஒழுங்குவிதிகள் அமைப்பு குறித்துக்காட்டப்பட்டுள்ளன. அத்தகைய ஒழுங்குவிதிகள் வங்கிகளை ஒழுங்குமுறைப் படுத்துவதற்கான மேற்பார்வையாளர்களின் அதிகாரத்தினைச் சட்டபூர்வமாக நிறுவுகின்றன. வங்கிகளின் தொழிற்பாட்டுச் சூழல், உள்ளகக் கட்டுப்பாடு, சந்தைக் கட்டுப்பாடு என்பனவற்றை வலுப்படுத்துவதற்காக பரந்தளவான பல ஒழுங்குவிதிகள் பயன்படுத்தப்படுகின்றன.

முன்மதிகரமான ஒழுங்குவிதிகள் வங்கித் தொழில் துறைகள் அனுமதியினையும் வங்கித் தொழிலின் செயற்பரப்பு எல்லையினையும் உரிய முறையில் கட்டுப்படுத்துகின்றன. உள்ளக கட்டுப்பாட்டுடன் தொடர்புடைய முன்மதியுடைய ஒழுங்குவிதிகள் உடைமையாளர்களும் முகாமையாளர்களும் அவர்களுக்கான பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு தகுதியுடைய பொருத்தமான ஆட்கள் என்பதற்கும் அவர்கள் வாடிக்கையாளர்களுடன் இணைந்து இடர்நேர்வினை பகிர்ந்து கொள்வார்கள் என்பதற்குமான உறுதிப்பாட்டினை வழங்குகின்றன. இந்த ஒழுங்கு விதிகள் முதலீட்டுப் பட்டியலின் தரம் மற்றும் இடர் நேர்வு முகாமைத்துவத்தின் நியமங்கள் என்பன

உயர்வாக அமைந்திருப்பதனை உறுதிப்படுத்துவதனையும் நோக்காகக் கொண்டுள்ளன. அத்தகைய ஒழுங்குவிதிகள் வங்கியொன்றின் நடத்தைமீது முறைசார்ந்த கட்டுப்பாட்டினை வழங்குவது மட்டுமன்றி வங்கிகளைக் கட்டுப்படுத்துவதற்காக உடைமையாளர்கள், மேற்பார்வையாளர்கள், சந்தை என்பனவற்றினால் பயன்படுத்தக்கூடிய மேலதிக தகவல்களைத் தயாரிப்பதற்கான அடிப்படையொன்றினையும் அவை வழங்குகின்றன.

வங்கியொன்றின் உறுதிப்பாடு குறைவடைகின்றபொழுது அதன் உடைமையாளர்களினால் அது மீள் மூலதனமிடப்பட்டு அவர்களின் உடைமைப் பங்கினைப் பாதுகாத்து எதிர்காலத்தில் நிகழக்கூடிய இழப்புக்களைத் தவிர்ப்பதற்காக சிறந்த முறையில் செயலாற்றுவதற்கான ஊக்குவிப்பினை உடைமையாளர்கள் கொண்டிருக்கக்கூடிய வகையில் வங்கியின் மூலதனம் போதுமானதாக அமைவதனை உறுதிப்படுத்துவதனை மூலதனத்தின் போதிய அளவு தொடர்பான ஒழுங்குவிதிகள் நோக்காகக் கொண்டுள்ளன. இதற்கு மேலதிகமாக கடன் வகைப்படுத்தும் விதிகள், அறவிடமுடியா மற்றும் ஐயத்துக்கிடமான கடன்கள் தொடர்பில் ஏற்பாடு செய்யப்படவேண்டிய ஆகக்குறைந்த தேவைப்பாடுகள் என்பனவற்றுடன் தொடர்புற்ற முன்மதிகரமான ஒழுங்குவிதிகள் காணப்படுகின்றன. தனியான கட்டுப்பாட்டாளர்களுக்கான ஆகக்கூடிய கடன், வெளிநாட்டு செலாவணி வெளிப்படுத்துகை, முதிர்ச்சிப் பொருத்தமின்மை என்பனவற்றினை வகைப்படுத்தும் ஒழுங்குவிதிகள் மிகையான கொடுகடன், செலாவணி வீதம், திரவத்தன்மை வீதம் மற்றும் வட்டிவீத இடர்கள் என்பனவற்றினை ஊகம் செய்யக்கூடிய வங்கியின் முகாமைத்துவத்தின் ஆற்றலைக் கட்டுப்படுத்துவதற்கு உதவுகின்றன. உள்ளக கட்டுப்பாடுகளுக்கு உதவியளிக்கும் முன்மதிகரமான கொள்கையின் பங்கானது வங்கிகள் பொருத்தமான உள்ளக நடைமுறைகளைக் கொண்டுள்ளதனையும் முகாமையாளர்கள் நன்கு விபரமறிந்தவர்களாக இருப்பதனையும் மற்றும் இடர் மதிப்பீட்டு செயல்முறையில் ஈடுபடுவதனையும் உறுதிப்படுத்துவதாக அமைகின்றது.

ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகார சபைகளினால் குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு இணங்க வங்கி முகாமையாளர்கள் செயலாற்றுவதனை வங்கி மேற்பார்வையாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர். மேற்பார்வை மேலாண்மைக்கு வங்கிகளினால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளை கண்காணிப்பதனூடாக வங்கிக்கு வெளியேயும் சொத்துப் பெறுமானத்தின் ஏற்ற அளவு, முன்மதிகரமான அறிக்கைகளின் செம்மையான நன்மை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளின் தரம் என்பனவற்றினை நேரடியாக தேர்வாய்வு செய்து வங்கிக்கு உள்ளேயும் ஆகிய இரு முறைகளில் மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இச் செயன்முறையில் வங்கிகளின் நிதியியல் நிலைமையினைப் பகுப்பாய்வு செய்வதற்கும், முகாமைத்துவத் தினை மதிப்பீடு செய்யவும், உறுதியற்ற செயல்முறைகளை கட்டுப்படுத்துவதற்கும், கடன் தீர்க்க வகையற்ற வங்கிகளின் வெளியேற்றத் தினை வலிந்து செயற்படுத்தவும் மேற்பார்வை யாளர்கள் முனைகின்றனர்.

ஒழுங்குமுறைப்படுத்தும் மேலாண்மைகள் அரசாங்கத்தின் முகவர்களாகும். ஆதலினால் இறுதியில் பொதுமக்களின் முகவர்களாகும். விவேகமில்லாத பொறுப்பற்ற வங்கியினால் இம் மக்களினது செல்வம் இடருக்குள்ளாக்கப் படலாம். அத்தகைய நிகழ்வொன்றிற்கு எதிராக பாதுகாப்பளிக்கும் வகையில் வர்த்தக வங்கிகளின் தொழிற்பாடுகளை தொடர்ச்சியாக கண்காணிக்கும் பணிக்கான ஒழுங்குமுறைப்படுத்துனர்களை நியமிப்பதற்கான அதிகாரமும் பொறுப்பும் மத்திய வங்கிக்கு அளிக்கப்பட்டுள்ளது. பொதுவாக, கணிசமான அனுபவமும் மதிப்பாண்மையும் மிக்க அலுவலர்களை இப்பணிக்காக மத்திய வங்கி நியமித்துள்ளது. ஏனெனில் ஊக்கம் தளராத வலிமையான ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் நிதித் துறையின் எதிர்பார்ப்புக்களில் உரிய முறையில் செல்வாக்கினைச் செலுத்துவர். ஏதேனும் தவறு நிகழ்கின்றபோது தண்டிக்கப்படுவதற்கான சாத்தியக்கூறு உயர்வாகக் காணப்படின் அவற்றின் உள்ளக கட்டுப்பாடுகளை நல்ல நிலையில் வைத்திருப்பதற்கான ஒரு உறுதிவாய்ந்த ஊக்குவிப்பினை வங்கிகள் கொண்டிருக்கும். பன்னாட்டு ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கு இணைந்து செல்லும் விதத்தில் இலங்கையின் வங்கி மேற்பார்வை நியமங்கள் மேலும் பலப்படுத்தப்பட்டு வருகின்றது.

பேண வேண்டிய அவசியம் என்பனவற்றின் அடிப்படையில் உற்பத்தி இலாபத்திற்கு கூலி அதிகரிப்பினை இணக்க வேண்டிய அதிகூடிய தேவை காணப்படுகின்றது. பணவீக்கச் சுட்டெண் களுக்கு கூலிகளை இணைக்கும் பரவலான பிரயோகமானது தொழிலாளர் சந்தையில் பணவீக்கச் சார்பு ஒன்றினை அறிமுகப்படுத்து கின்றது. எனவே இந்தப் பணவீக்கச் சார்பினை இல்லாதொழிக்க வேண்டிய உடன் தேவை காணப்படுகின்றது.

மேலே குறிப்பிட்ட விடயமானது தனியார் முதலீட்டை ஊக்குவிப்பதற்கு மிக அத்தியாவசிய மான அடுத்த கொள்கைச் சீர்திருத்தத்துடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது. அதாவது தொழிலாளர் சந்தை சீர்திருத்தமாகும். தொழிலாளர் சாசனமொன்றை அரசாங்கம் தயாரித்து வருவ தோடு இது கூலி முறைமை மற்றும் தொழிலாளரின் திரட்டலும் இடம் பெயர்வும் போன்றனவற்றிற்கான வழிகாட்டல்களை வழங்கும் என எதிர்பார்க்கப் படுகின்றது. பின்வருவன உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயங்களாகும்.

அதிஉயர் தொழில் வாய்ப்பின்மையின் பின்னணியில் தொழிலாளர் நெகிழ்ச்சியின்மையா னது புதிய தொழில் வாய்ப்புக்களை ஊக்கமிழக்கச் செய்யுமாகையால் தொழில் வாய்ப்புக்காக தொழில் சந்தை நெகிழ்ச்சியினை மேம்படுத்துவதற்கான தேவை.

உற்பத்தி திறன் அதிகரிப்பிற்கு கூலி அதிகரிப் புக்களை இணைத்தலும் ஊக்குவிப்புக்களுக்கு இணைக்கப்பட்ட நெகிழ்ச்சியுடைய கூலி முறையின தும் தேவை.

தொழில் தருநர்களுக்கும் ஊழியர்களுக்கும் சமமான பாதுகாப்பினை வழங்குவதற்காக வேண்டி தொழிற் சட்டங்களை இலகுவாக்குவதற்கான தேவை.

செயல் திறன்மிக்க போட்டிக் கொள்கை யொன்றினை ஊக்குவித்தலுக்கான தேவை.

பொருளாதார தாராளமயமாக்கலின் வெற்றி கரமான செயற்பாட்டிற்கும் புதிய தொழில் வாய்ப்பு க்களை மேம்படுத்துவதற்கும் அதி முக்கியத்துவம் வாய்ந்த போட்டி நிலைமைகளை மேம்படுத்துவ தற்காக தொழிலாளர் சந்தை சீர்திருத்தங்கள் அவசியம் என பெருமளவில் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. தொழிலாளர் சந்தைகளின் செயற்றிறன் தொடர்பான முழு அளவிலான மீளாய்வு ஒன்று முற்றுப்பெறும்வரை தொழிலாளர் சந்தைகளின் தடைகள் நீக்கப்படுவதற்கு தாராள துணை ஒப்பந்தங்களை ஊக்குவித்தலும் பன்முகப்படுத்த லும் உதவக் கூடியதாக இருக்கும்.

இலங்கையில் பலதரப்பட்ட பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்புப் பணிகளின் வழங்குனராக அரசாங்கம் இருந்து வருகின்றது. இதே வேளையில் பொருளாதார உட்கட்டமைப்புப் பணிகள் பல பொதுப்பணிகள் அல்ல என்பதும் தனியார் துறையினரால் அவை பெருமளவு செயல்திறனுடன் வழங்கப்படலாம் என்பதும் அதிகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பொருளாதார உட்கட்டமைப்பில் தனியார் துறையின் பங்கேற்பிற்கான கொள்கைச் சூழலானது பேரண்டப் பொருளாதார நிலைமைகளின் பொதுவான மேம்பாடு, தனியார்மயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் பல்வேறுபட்ட இறை ஊக்குவிப்புக்கள் என்பனவற்றின் ஊடாக வலுப்படுத்தப்பட்டுள்ளது. நிதி உதவிகளை வழங்குவதற்காக நிறுவன அமைப்பு முறை வலுப்படுத்தப்பட்டுள்ளது. உலக வங்கியின் நிதி உதவியுடன் 1997 இல் வரையறுக்கப்பட்ட தனியார்துறை உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கம்பனி நிறுவப்பட்டது. தாமாகவும், தனியார் துறையினரால் வழி நடத்தப்படும் வளர்ச்சியினை ஊக்குவிக்கும் அரசாங்கத்தின் கொள்கையின் விளைவாகவும் சுகாதாரம் ,கல்வி, அஞ்சல் பணிகள், வெகுசனத் தொடர்பு, தொலைத் தொடர்பு மற்றும் போக்குவரத்து ஆகிய விடயங்களில் தனியார் துறையினர் படிப்படியாக நுழைந்துள்ளனர். இவ்வனைத்து முயற்சிகளின் மத்தியிலும் இந்தத் துறைகளின் தற்போதைய முதலீட்டு மட்டங்கள் இன்னமும் குறைவாகவே உள்ளன. முக்கிய விடயங்களான பாதைகளையும், புகை வண்டிக ளையும் உள்ளடக்கிய போக்குவரத்து வலையமைப்பு, வலு வழங்கல் துறைமுகங்கள் மற்றும் சமூக உட்கட்டமைப்பு என்பனவற்றில் இதுவரை எய்தியுள்ள பெறுபேறுகளை விடவும் கணிசமான மேம்பாடு அவசியமாகின்றது.

முதலீட்டுக் கொள்கையானது உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் கவனம் செலுத்த வேண்டியதோடு தொழில் வழங்கல் நியதிகளில் அரசாங்கத்தின் அளவினை அதிகரிக்கச் செய்யாது பாதைகள், கல்வி, சுகாதாரம், மற்றும் சன சமூக அபிவிருத்தி போன்ற விடயங்களில் அரசாங்கத்தின் முதலீடு உயர்த்தப்படல் வேண்டும். தொழிற்பாட்டின் தரத்தினையும் செயற்றிறனையும் மேம்படுத்துவ

தற்காக வேண்டி தேவையான நேரங்களில் வெளிநாட்டு வல்லுனர்களையும் உள்ளடக்கி இந்தச் செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தல் தனியார் துறையினருக்கு சாட்டப்படல் வேண்டும். இது முதலீட்டு விகிதத்தை உயர்த்துவதற்கு உதவும் உள்நாட்டு மூலவளங்களினதும் வெளிநாட்டுச் சலுகைக் கடன்களினதும் கிடைப்பனவு மட்டுப்படுத்தப்படுமாகையினால் உட் கட்டமைப்புச் செயற்றிட்டங்களுக்கு நிதியிடுவதற்காக உள்நாட்டு மூலவளங்களை குறை நிரப்புச் செய்வதற்காக பன்னாட்டு மூலதனச் சந்தைகளில் நிதியங்களைத் திரட்ட வேண்டியிருக்கும். சலுகைக் கடன்களின் குறைப்பானது அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளினால் எதிர் நோக்கப்படும் பொதுவான பிரச்சனையாவதோடு 1990 களின் ஆரம்பக் காலப்பகுதியிலிருந்து தொடங்கிய கரைகடந்த அபிவிருத்தி உதவியின் தொடர்ச்சியாக வீழ்ச்சியுறும் போக்கு தொடர்பாக 24 நாடுகளின் குழு தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளது. கரைகடந்த பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக் கான உதவி வழங்கும் நாடுகளிலிருந்து அனைத்து நாடுகளுக்குமான கரைகடந்த அபிவிருத்தி உதவி 1996 இல் 0.25 வீதத்திற்கு வீழ்ச்சியடைந்ததோடு இது கடந்த மூன்று தசாப்தங்களினதும் ஆகக் குறைந்த மட்டமாகும். இந்தச் சூழலில் மட்டுப் படுத்தப்பட்ட தொகையொன்றுக்கான நடுத்தரகால முறியொன்றின் வழங்கலின் மூலம் பன்னாட்டு மூலதனச் சந்தைகளில் தனது பிரவேசத்தை உணரச் செய்வது சருவதேச நம்பிக்கைத்தரம் ஒன்றினை நிறுவுவது இலங்கைக்கு உகந்ததாகும். அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டை பாதுகாக்கின்ற வேளையில் தனியார் துறையினரால் விரைந்த முதலீட்டுக்கு வசதி செய்து கொடுப்பதற்காக அமைப்புச் சீராக்கம் தொடர்பாக மேலும் முன்னேற்றங்களை ஏற்படுத்துகின்ற வேளையில் இது மேற்கொள்ளப்படல் வேண்டும். தோற்றம் பெறும் சந்தைப் பொருளாதாரங்களில் முறிகளை வழங்குபவர்களுக்கான பன்னாட்டுச் சூழல் மேம்பாடடைந்து வருவதுடன் கிழக்காசிய நாடுகள் சில பன்னாட்டு தனியார் மூலதனச் சந்தைகளில் மீண்டும் பிரவேசித்துள்ளன.

பெருந் தோட்டமல்லா வேளாண்மைத் துறை யின் வர்த்தகக் கொள்கை புலப்பாடு உடையதாக இல்லை. தீர்வைகளில் அவ்வப்போதைய மாற்றங் களும் வர்த்தகத்திலான அரசின் தலையீடும் கொள்கைச் சூழலினை நிச்சயமற்றதாக்கியுள்ளன. சந்தைகளின் திறமையான செயறாற்றத்திற்கு இவை தடையாக இருந்துள்ளன. தீர்வைகளின் ஊடாக உள்நாட்டு வேளாண்மைத் துறைக்கு வழங்கப்பட வேண்டிய பாதுகாப்பு மட்டத்தினை அரசாங்கம் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். இறக்குமதிகளுடன் போட்டியிட வேண்டியுள்ள வேளாண்மைப் பண்டங்களுக்கான தீர்வை வீதம் எதிர்கால தீர்வை ஒழுங்கு முறைப்படுத்தலுடன் இசைந்து செல்லும் வகையில் படிப்படியாகக் குறைக்கப்படக் கூடிய விதத்தில் தற்போதைய ஆகக் கூடிய வீதமான 35 சதவீத தீர்வை வீதத்தில் வைத்திருக்கப்படல் வேண்டும்.

விரைந்த பொருளாதார வளர்ச்சிக்கான தடைகளை அகற்றுவதற்காக மேலும் பல விடயங்களில் அமைப்புச் சீராக்கத்தினை வலுப்படுத்துவதற்கான தேவையை 1996 ஆம் ஆண்டுக்கான மத்திய வங்கி ஆண்டறிக்கை எடுத்துக் காட்டியது. கோதுமைமாவிற்கான நெகிழ்ச்சியான விலையிடல் முறையொன்றின் அறிமுகம், சந்தைச் செயல் திறனை மேம்படுத்துவதற்காக வேண்டி பொருட் கொள்வனவு வேளாண்மைப் பண்டங்களின் இறக்குமதி ஏற்றுமதி வர்த்தகம் போன்ற பொருளாதார நடவடிக்கைகளில் அரசாங் கத்தின் ஈடுபாட்டினை ஆகக் குறைந்ததாக்குதல், பெருந்தோட்டமல்லாத்துறையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினை வலுப்படுத்தல் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான விரிவாக்கல் பணிகள் அதிகரித்த கூலி மற்றும் ஓய்வூதியச் செலவுகளின் காரணமாக வரவு செலவுத் திட்டத்தில் ஏற்படும் சுமையைக் குறைப்பதற்காக வேண்டி பணிகளின் செயல்திறனை மேம்படுத்தவதற்கான சிவில் சேவை மற்றும் ஓய்வூதிய சீர்திருத்தம் என்பனவற்றை இவை உள்ளடக்கியிருந்தன. புதிதாகத் தோற்றம் பெறும் சந்தைப் பொருளாதாரம் ஒன்றாக விரைந்து வளர்ச்சியடைவதற்கு நாட்டுக்கு இயலச் செய்யும் பொருட்டு இந்த விடயங்கள் தொடர்பாக துணிவுமிக்க தீர்மானங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.